விலை : 20.00
website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆனி 15 புதன்கிழமை (29.06.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 193

க.பொ.த (உ/த)
பரீட்சை
மாதிரி வினாத்தாள்
கணக்கீடு II

உள்ளே...

தரம் - 5

புலமைப் பரிசில்
பரீட்சை மாதிரி
வினாத்தாள்
இன்றைய
வலம்புரியில்...

### கொத்துக்குண்டு # சித்திரவதை # காணாமல்போனோர்

# போர்க்குற்ற விசாரணையில் சர்வதேச நீதிபதிகள் அவசியம்

## ஐ.நா ஆணையாளரின் அறிக்கையில் வலியுறுத்து

(ஜெனிவா)

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான போர்க்குற்ற விசாரணைகளில் சர்வதேச நீதிபதிகள் உள்ளடக்கப்பட வேண்டும் என மீளவும் வலியுறுத்தியுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசைன், விசாரணைகளின் போதான சாட்சியாளர்களின் பாதுகாப்பை சர்வதேச நீதிபதிகள் அடங்கிய பொறிமுறை ஒன்றினாலேயே நடைமுறைப்படுத்த முடியும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

(23-ம் பக்.)



## பாரவூர்தி - சைக்கிள் விபத்து; ஒருவர் பலி




24 ஆம் பக்கம் பார்க்க....


## "இருப்போர் இல்லாதோரின் இடர்களைக் களைய வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டில் உள்ளவர்கள் உதவிகளை வழங்கும் போது இங்குள்ளவர்கள் உருப்படியாகச் செலவு செய்வதற்கு ஏற்றவாறான கொடைகளை வழங்க வேண்டும் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம

04 ஆம் பக்கம் பார்க்க....



## இளைஞன் மீது பொலிஸ் தாக்குதல்!

(கரணவாய்)

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரியின் தாக்குதலுக்குள்ளான இளைஞர் ஒருவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு அனுமதிக்கப்பட்டவர் பாடசாலை வீதி இமையாணன் உடுப்பிட்டியைச் சேர்ந்த நற்குணம் நிசாந்தன் (வயது 22) என்பவராவார்.

24 ஆம் பக்கம் பார்க்க....

## பழிவாங்கப்பட்ட ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்க தடை!

(கொழும்பு)

கடந்த ஆட்சிக்காலத்தில் அரசியல் ரீதியாக பழிவாங்கப்பட்ட அரச வங்கி ஊழியர்களுக்கு பதவி உயரவு வழங்குவதற்கு, அமைச்சரவை எடுத்துள்ள தீர்மானத்திற்கு மேல் முறையீட்டு நீதிமன்றம் ஒன்று இடைக்கால தடை உத்தரவை நேற்று பிறப்பித்துள்ளது.

இலங்கை வங்கி ஊழியர்களின் சங்கத்தால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஆராய்ந்த பின்னர், நீதிமன்றம் இந்த தீர்ப்பை வழங்கியுள்ளதாக அந்த சங்கத்தின் செயலாளர் ஏ.கே. பண்டார தெரிவித்திருக்கிறார்.

நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள சார்பில் ஆஜரான வழக்கறிஞர், கடந்த ஆட்சிக்காலத்தில் அரசியல் ரீதியாக பழிவாங்கப்பட்டதாக கூறி,

04 ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.தே.கவில் இணைய பொன்சேகா முடிபு!



(கொழும்பு)

ஜனநாயகக் கட்சியின் தலைவரும், முன்னாள் படைத்தளபதியும், பிராந்திய அபிவிருத்தி அமை

24 ஆம் பக்கம் பார்க்க....

## வலி.வடக்கில் விடுவிக்கப்பட்ட மக்களின் காணிகளில் இன்னமும் பொலிஸார்!

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் விடுவிக்கப்பட்ட பொதுமக்களின் காணிகளில் பொலிஸார் இன்னமும் நிலைகொண்டுள்ளதால் தமது காணிகள் விடுவிக்கப்பட்டதா இல்லையா என்ற குழப்பநிலையில் பொதுமக்கள் உள்ளனர்.

வலி வடக்கு பகுதியில் 3 ஆம் கட்டமாக 236 ஏக்கர் காணி கடந்த வாரம் விடுவிக்கப்பட்டது. அந்தவகையில் கட்டுவன், குரும்பசிட்டி பகுதியில் 126 ஏக்கரும், வறுத்த

24 ஆம் பக்கம் பார்க்க....

## காணி உரிமம் இழந்தோருக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை

### மீள்குடியேற்ற அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் காலவிதிப்பு நடவடிக்கையினால் தமது உரித்தினையிழந்த சட்ட ரீதியான காணி உரிமையாளர்கள் 2016 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கால விதிப்பு(விசேடஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் நிவாரணத்தினைப பெற்றுக் கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சு அனுப்பியுள்ள செய்திக்குறிப்பு வருமாறு,

24 ஆம் பக்கம் பார்க்க....

## மன்னார் மாதா சொரூப முரண்பாடு; சுமுகமாக தீர்க்க பேச்சுவார்த்தை

(மன்னார்)

மன்னாரில் மாதா சொரூபம் காரணமாக மதங்களுக்கிடையில் நிலவி வரும் பிரச்சினைகள் தொடர்பில் மன்னார் ஆயர் இல்லம் மற்றும் திருக்கேதீஸ்வர ஆலய நிர்வாகத்தினரினை பேச்சுக்களில் ஈடுபடுத்தி சுமுகமான தீர்வு காண்பதென தீர்மானிக்கப்பட்டு இதற்கான முயற்சிகளில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஈழத்தில் வரலாற்று

24 ஆம் பக்கம் பார்க்க....



# மூதூர் படுகொலை தொடர்பான விசாரணை மீண்டும் தொடக்கம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேசத்திலுள்ள குமாரபுரம் கிராம த்தில் நடைபெற்ற படுகொலை தொடர்பான நீதிமன்ற விசாரணை பல வருடங்களுக்கு பின்னர் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

அனுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் தற்போது ஜுரர்கள் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணை நடைபெறுகிறது.

20 வருடங்களுக்கு முன்பு, யுத்த காலத்தில் குமாரபுரம் கிராமத்தில் நடந்த இந்த படுகொலைச் சம்பவம், குமாரபுரம் படுகொலை என பலராலும் அழைக்கப்படுகிறது.

1996-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11-ஆம் திகதி அன்று இரவில் நடைபெற்ற இந்த படுகொலை சம்புவத்தில் பெண்கள், குழந்தைகள் உள்பட 26 பேர் இராணுவதினால் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும், 39 பேர் காயமடைந்தனர்.

மது போதையில் கிராமத்திற்குள் நுழைந்த் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி சூட்டில் கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்தவர்கள் அந்த கிராமத்தை சேர்ந்த தமிழர்கள் ஆவர்.

இந்த படுகொலை தொடர்பாக ஆரம்ப காலத்தில், மூதூர் நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணைகளின் போது தெகியத்த இராணுவ முகாமில் கடமையாற்றிய எட்டு இராணுவ வீரர்கள், சாட்சிகளினால் அடையாளம காணப்பட்டிருந்தனர்.

அக் காலத்தில் நிலவிய யுத்த சூழ்நிலையை கருத்தில் கொண்டு எதிரிகளின் பாதுகாப்பு கருதி சட்ட மா அதிபரின் ஆலோசனையின் பேரில் இந்த வழக்கு அனுராதபுரம் மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் சம்பவத்தை நேரில் கண்டவர்கள், சிவில் சமூகத்தினர் உட்பட 121 பேர் சாட்சிகளாக மூதூர் பொலிஸாரால் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஜுரிகள் சபை முன்னிலையில் அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் தற்போது நடைபெற்று வரும் இந்த விசாரணைக்கு, சாட்சிகளில் 20 பேர் அழைக்கப்பட்டுள்ள போதிலும் 16 பேர் மட்டுமே சமூகமளித்திருந்தனர். ஏனைய, நான்கு பேரும் மரணமடைந்து விட்டதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல் நாள் விசாரணையின் போது சாட்சியமளித்த பெண்ணொருவர், எதிரிகளில் ஒருவரை தனது கணவனை சுட்டுக் கொன்றவர் என அடையாளம் காட்டினார்.

எதிரிகளாக குறிப்பிடப்பட்டுள்ள எட்டு இராணுவ வீரர்களில் இருவர் மரணமடைந்துள்ள நிலையில், தற்போது அனுராதபுரம் நீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் வழக்கு விசாரணையில் ஏனைய ஆறு பேரும் ஆஜராகினர்.

தற்போது விசாரணை நடைபெற்று வரும் நிலையில், ஏற்கெனவே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்த குறித்த ஆறு இராணுவ வீரர்களும், நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (செ-11)

# 13 தமிழக மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(பனிக்கன்குளம்)

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 13 தமிழக மீனவர்களின் விளக்கமறியல் எதிர்வரும் 12 ஆம்திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த மீனவர்கள் நேற்று செவ்வாய்க் கிழமைகாலை மூன்றாவது தடவை மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது நீதிபதி அலெக்ஸ்ராஜா இவ்வாறு உத்தரவிட்டார்.

இராமநாதபுரம் மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த இந்த மீனவர்கள் கடந்த மே மாதம் 5 மற்றும் 9 ஆம் திகதிகளில் நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து இலங்கை கடற் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்தநிலையில், குறித்த மீனவர்கள் நேற்று மூன்றாவது தடவை முன்னிலைப் படுத்தப்பட்டபோது இவர்களின் விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது. (செ-281)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## விற்பனையாளர் தேவை

யாழ்.நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும்

சிட்டை எழுதுநர்
ஆண் வயது 40-55
பெண் வயது 18-30

குறிப்பு:-யாழ்.நகரை அண்டிய பிரதேசத்தில் வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும்.

(5082)

தொடர்புக்கு:-0779157883, 0772935095

## பணிநிலை வெற்றிடம்

ஜெயந்திநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் கீழ்வரும் பதவி வெற்றிடமுண்டு.

01.உடற்பயிற்சி ஆசிரியர்

தகைமைகள்

கிரிக்கற், எல்லே, வலைப்பந்து, கூடைப்பந்து, மெய்வல்லுனர் மற்றும் அனைத்து விளையாட்டுக்களையும் பயிற்றுவிக்கசுடிய பட்டதாரிகள் ஒருவருட அனுபவம் இருப்பின் விண்ணப்பிக்கலாம்.

பெண்பாலார் மட்டும் விண்ணப்பிக்க முடியும்

குறிப்பு:

* இல்லத்தில் தங்கியிருந்து பயிற்றுவித்தல் வேண்டும்.
* தங்குமிடம், உணவு இல்லத்தினால் இலவசமாக வழங்கப்படும்
* சம்பளம் மாதம் ரூபா 18000/- க்கு குறையாது வழங்கப்படும்.
* சம்பளத்துக்காக மட்டுமன்றி தியாக மனப்பான்மையும் சமூக சேவையில் ஆர்வமுள்ளவர்கள், ஒழுக்கசீலர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

கடித உறையில் இடது பக்கமேல் மூலையில் உடற்பயிற்சி ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பம் என்பதைத் தவறாது குறிப்பிட்டு (சகல சான்றிதழ்களின் போட்டோப் பிரதிகளும் கிராம சேவையாளரது நற்சான்றிதழ் பிரதியும் விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்) அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்

விண்ணப்பமுடிவுத் திகதி :- 10.07.2016

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி :-

தி.இராசநாயகம், தலைவர், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,
ஜெயந்திநகர், கிளிநொச்சி.
தொலைபேசி இல : 077 060 4950, 021 492 3118
மின்னஞ்சல் முகவரி: mahadevasuwamigalchildrenhome@gmail.com
rasa46@yahoo.com

(C-5051)

# புதிய கண்டுபிடிப்பு கண்காட்சி இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.பாதுகாப்பு படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் புதிய கண்டு பிடிப்பு கண்காட்சி இன்றைய தினம் காலை 9 மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

பனங்காட்டில் ப்த்தி கூர்மை எனும் தொனிப்பொருளில் நடைபெறவுள்ள இப் புதிய கண்டுபிடிப்பு கண்காட்சி இன்றும் நாளையும் காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் புதிய கண்டு பிடிப்புக்களை பார்வையிட ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.(செ-9)

## SLEAS இறுதி விசேட கருத்தரங்குகள்

யாழ்ப்பாணத்தில்
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில்
(யாழ் ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கியருகில்
நடைபெறுகின்றது.)

வவுனியாவில்
CBA கல்வி நிலையம் (கதிரேசன் வீதி)

வெள்ளவத்தையில்
உருத்திரா மாவத்தை தமிழ் சங்க
வளாகம் கல்வி நிலையம்

5047

மேலதிக விபரங்களுக்கு
T.P 076 688 3394

## உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD,VCD க்கள் அனுப்ப

நாட வேண்டிய ஒரே இடம் (சி-5044)

ஸ்ரீமுருகன்
தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392

## ஒத்துமாறல்

வடமராட்சியிலுள்ள மாகாண அரச அலுவலகங்களிலிருந்து யாழ்ப்பாணம் வட மாகாண கல்வியமைச்சிற்கு (முத்திரை சந்தி) முகாமைத்துவ உதவியாளர் ஒருவருடன் (MA) ஒத்துமாற விரும்புபவர்கள் தொடர்பு கொள்க

0772294277

## காணி விற்பனைக்குண்டு

சுவாமி தோட்டம் முன்பாக 3ம் கட்டை முல்லைத்தீவில் 25 ஏக்கர் அறுதி உறுதிக் காணி தென்னை, மா, தேசி மரங்களுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு-0768712766

(சி-5050)

## அழகுக்கலை பயிற்சி வகுப்புக்கள்

அவுஸ்திரேலியாவிலிருந்து வருகை தந்திருக்கும் பிரபல அழகுக்கலை நிபுணர் **திருமதி தர்சினி றஞ்சன்** அவர்களால், மணப்பெண் அலங்காரம், சிகை அலங்காரம், முக அலங்காரம் போன்ற அலங்கார வகுப்புக்கள் (Workshop) நடாத்தவுள்ளன.



வகுப்புக்கள்:- 03.07.2016 ஞாயிறு தொடக்கம் 08.07.2016 வெள்ளி வரை

இலவச அறிமுக வகுப்புக்களும் அதனைத் தொடர்ந்து குறைந்த கட்டணத்தில் பயிற்சி வகுப்புக்களும் நடைபெறும்.

அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்!

தொடர்புகளுக்கு:- திருமதி *தர்சினி றஞ்சன்*

தொ. பே இலக்கம்
071 110 3612
021 222 5158
Email - harishi09@gmail.com

179/5 பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ நாவாந்துறை றோ.க.த.க வித்தியாலயத்தின் வளர்ச்சிப் பாதையில் தனக்கென ஓர் தடம் பதித்து யாழ்ப்பாண கல்விக் கோட்டத்தில் அதிபர் சங்க தலைவராய்த் திகழ்ந்து அதனை சிறந்த முறையில் வழிநடத்தி நல்லூர்க் கல்விக் கோட்ட கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்ற



**திரு. F.X. அன்ரன்**

(B.A,Dip.in.Edu,M.A,M.Phil,SLPS I)

அவர்கள் மேலும் பல சிறப்புகள் பெற்று கல்விப்பணியில் உயர்வு பெற வாழ்த்துகின்றோம்.

அதிபர் சங்கம்
யாழ்ப்பாண கல்விக்
கோட்டம்

(5077)

# தென் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் 331 பேருக்கு தடை

(கொழும்பு)

அம்பாறை - ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ பீட இரண்டாம் வருட மாணவர்கள் 331 பேருக்கு, அப் பல்கலைக்கழகத்தின் வளாகத்துக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளதாக, தெரியவந்துள்ளது.

புதிய மாணவர்களை பகிடிவதைக்கு உட்படுத்த மாட்டோம் என, ஏனைய பீடங்களிலுள்ள அனைத்து மாணவர்களும் வாக்குறுதி அளித்துள்ள நிலையில், முகாமைத்துவத்தின் இரண்டாம் வருட மாணவர்கள் மாத்திரம் அதற்கு இணங்கவில்லை என, அப் பல்கலைக்கழக மாணவர் சேவைகள் பணிப்பாளர் பேராசிரியர் ரமேஷ் அபுபக்கர் தெரிவித்தார்.

இதனையடுத்து, பல்கலைக்கழகத்தின் நிர்வாக அதிகாரிகள் மீண்டும் தெரியப்படுத்தும் வரை அவர்களுக்கு இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி முகாமைத்துவ பீடத்தின் இரண்டாம் வருடத்தில் கல்வி பயிலும் சிங்கள மாணவர்கள் 214 பேர், தமிழ் மாணவர்கள் 97 பேர் மற்றும் 20 முஸ்லிம் மாணவர்களுக்கு எதிராகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எதுஎவ்வாறு இருப்பினும், பகிடிவதை எனக் கூறி பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தி நிர்வாகிகளால் இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளதாக, அப் பல்கலைக்கழகத்தின் மாணவ பிரதி நிதிகள் தெரிவித்தனர். (இ-10)




# பாதுகாப்பை நீக்க வேண்டாம் என்று கோத்தபாய இன்னும் கோரவில்லை

## பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

**இராணுவ பாதுகாப்பை நீக்க வேண்டாம் என்று கோத்தபாய ராஜபக்ஷ இதுவரை எழுத்துமூலம் கோரிக்கைகள் எதனையும் முன்வைக்கவில்லை என, பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.**



முன்னாள் பாதுகாப்புச் செயலாளரான கோத்தபாய ராஜபக்ஷ தமது பாதுகாப்பு குறித்து ஊடகங்கள் மூலம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும், பாதுகாப்பு செயலாளரான தன்னிடம் இது தொடர்பில் எழுத்து மூலம் வேண்டுகோள் எதுவும் முன்வைக்கவல்லை எனவும் அவர் தெரிவித்தார்.


தனக்கு வழங்கப்பட்டுள்ள இராணுவ பாதுகாப்பை நீக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும், அவ்வாறு செய்ய வேண்டாம் என தான் பாதுகாப்புச் செயலாளரிடம் கோருவதாகவும், கோத்தபாய ராஜபக்ஷ நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இந்தநிலையில் இது குறித்து கருணாசேன ஹெட்டியாராச்சியிடம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கோத்தபாயவுக்கு வழங்கப்பட்டுள்ள இராணுவப் பாதுகாப்பை நீக்க தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் எனினும் விரைவில் அவரது பாதுகாப்புக்காக பொலிஸாரை அனுப்பி வைக்கவுள்ளதாகவும் கருணாசேன ஹெட்டியாராச்சி மேலும் தெரிவித்தார். (இ-10)

# மின்சக்தி அமைச்சில் நிதி நெருக்கடியில்லை

## அமைச்சர் ரஞ்சித் தெரிவிப்பு



(கொழும்பு)

மின்சக்தி அமைச்சில் எவ்வித நிதி நெருக்கடிகளும் இல்லை என அமைச்சர் ரஞ்சித்சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 6 மாதங்களுக்குள் மின்சார அமைச்சில் அன்றாட செயற்பாடுகளை முன்னெடுப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படும் நிலையில், அமைச்சின் நிதிப் பிரிவு மற்றும் திறைசேரிக்குள் ஏற்பட்டுள்ள தவறான புரிந்துணர்வே குறித்த நிதி நெருக்கடிக்கான காரணம் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை குறித்த நிதி நெருக்கடி தொடர்பில் எந்தவொரு அறிக்கையும் தனக்கு கிடைக்கவில்லை என்று அமைச்சர் தெரிவித்துள்ளதோடு, தங்களுக்குள் புரிந்துணர்வுடன் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகவும் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

அத்துடன் திறைசேரியின் முன்னாள் பிரதி செயலாளரே தற்போது மின்சக்தி அமைச்சின் செயலாளராக பதவி வகிப்பதாகவும், தான் ஒவ்வொரு வாரமும் அமைச்சின் நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதாகவும், எனினும் எவ்வித அறிக்கையும் தன்வசம் கிடைக்கவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# விசாரணைக்கு உட்படுத்தப்பட்டோரின் வெளிநாட்டுப் பயணங்களுக்குத்தடை

(கொழும்பு)

நிதி மோசடி விசாரணைப் பிரிவில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட 50இற்கும் மேற்பட்டவர்களின் வெளிநாட்டு பயணங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மேலதிக செயலாளர் காமினி செனரத், தொலைத்தொடர்பு கட்டுப்பாட்டு ஆணையகத்தின் முன்னாள் ஆணையாளர் அனுச பெல்பிட்ட உள்ளிட்ட நிதி மோசடி விசாரணைப் பிரிவில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட 50 இற்கும் அதிகமானோரின் வெளிநாட்டுப் பயணங்கள் தடை செய்யப்பட்டுள்ளன.

காமினி செனரத் உள்ளிட்ட பலர் நீதிமன்ற உத்தரவிற்கு அமைய ஞாயிறு தினங்களில் நிதி மோசடி விசாரணைப் பிரிவில் முன்னிலையாகி கையொப்பமிட்டு செல்கின்றனர்.

பயணத் தடை விதிக்கப்பட்டுள்ள பலர் கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் உயர் பதவிகளை வகித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அமைச்சுக்கள், திணைக்களங்கள், அதிகாரசபைகள் உள்ளிட்ட பல நிறுவனங்களில் இடம்பெற்றுள்ள பல கோடி ரூபா மோசடிகள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

மேலும் சிலருக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## பேருந்து விபத்தில் 28 பேர் படுகாயம்

பதுளை-கலவுட பிரதான வீதியில் உள்ள போகஸ் தென்ன பகுதியில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்று மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விபத்து நேற்றுக்காலை இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இதே வேளை இவ்விபத்தில் 26 பயணிகள், பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநர் படுகாயத்திற்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-10)

# வீடு திரும்பினார் ரோஹித

(கொழும்பு)

ஆர்ப்பாட்டத்தின் போது காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட முனனாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன வீடு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 24ஆம் திகதி மத்திய வங்கி ஆளுநருக்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சியினால் கொழும்பில் முன்னெடுக்கப்பட்டிருந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

தற்போது அவர் சிகிச்சைகள் அனைத்தும் நிறைவடைந்துள்ள நிலையில், வீடு திரும்பியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



அத்துடன், தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த இவரை நலம் விசாரிப்பதற்காக பல அரசியல்வாதிகளும், மகிந்த ராஜபக்ஷவின் மனைவி சிராந்தி உள்ளிட்டவர்களும் வைத்தியசாலைக்கு வந்து சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# இலங்கை அரசின் நிலைப்பாடு மங்கள இன்று பதிலளிப்பார்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான பொறுப்புக்கூறல் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு குறித்து வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இன்று புதன்கிழமை அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜெனிவாவில் கடந்த 13ஆம் திகதி ஆரம்பமான ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 32ஆவது கூட்டத்தொடரில் இன்று இலங்கை தொடர்பான விவாதம் நடைபெறவுள்ளது.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் இலங்கை தொடர்பான தனது வாய்மூல அறிக்கையை வெளியிட்டதும், இந்த விவாதம் ஆரம்பமாகவு ள்ளது.

இதன்போது ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கை தொடர்பான தமது கருத்துக்களையும், யோசனைகளையும் முன்வைக்கவுள்ளனர்.

இத்னையடுத்து, இலங்கையின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் உரையாற்றவுள்ளார்.

இதன்போது ஏற்கெனவே உத்தியோக பூர்வபற்றற்ற முறையில் வெளியிடப்பட்டுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைனின் இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கைக்கு அவர் பதிலளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.


அத்துடன், ஐ.நா தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் விசாரணைப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு என்பன தொடர்பிலும் அவர் கருத்துக்களை வெளியிடுவார் என நம்பப்படுகின்றது.

பொறுப்புக்கூறல் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு அவசியம் என ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழு, சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சிவில் அமைப்புக்கள் வலியுறுத்தி வருகின்றன.

இந்நிலையில், வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பை ஜனாதிபதியும், பிரதமரும் நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# இ.போ.ச பேருந்து மீது தாக்குதல்

## சாரதி படுகாயம்





(மல்லாவி)

காரைநகர் ஊடாக வவுனியாவிற்கான போக்குவரத்து சேவையில் ஈடுபட்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து மீதான தாக்குதலில், பேருந்தின் சாரதி படுகாயமடைந்துள்ளார்.

காரைநகரிலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த பேருந்து மீது, யாழ்ப்பாணம் உரும்பிராய் சந்தியில் வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை காலை 6.15 மணியளவில் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், காயமடைந்த நபர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

காய மடைந்தவர், வரணி கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய கதிர்காம குமார் குலசிங்கம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பேருந்து மீது ஏற்கெனவே சண்டிலிப்பாய் பகுதியில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இந் நிலையில் குறித்த தாக்குதல் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (செ-15)

# திறைசேரி முறி விசாரணை அறிக்கையை ஜனாதிபதி, பிரதமரிடம் கையளியுங்கள்-கபே

சர்ச்சைக்குரிய திறைசேரி முறி விநியோகம் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணை அறிக்கை ஜனாதிபதியிடமும், பிரதமரிடமும் கையளிக்கப்பட வேண்டும் என இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவிடம் கபே அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் டில்ருக்ஷி டயஸ் பண்டாரநாயக்கவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதம் ஒன்றிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில், ஊழல் மோசடிகள் குறித்து விசாரணை செய்வதற்கும் அவற்றைத் தடுப்பதற்கும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு கொண்டிருக்கும் திறமை பற்றி எமக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

திறைசேறி முறி விநியோக மோசடி தொடர்பில் ஆணைக்குழு முழுமையான விசாரணையை நடத்தியிருந்தது. இந்த விசாரணையின் அறிக்கை ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் கையளிக்கப்பட வேண்டும்.

நாளை 30ஆம் திகதியுடன் தற்போதைய மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுனா மகேந்திரனின் பதவிக்காலம் பூர்த்தியாகிறது. இதனைத் தொடர்ந்து பிரதமரின் பரிந்துரைக்கு அமைய ஜனாதிபதி புதிய மத்திய வங்கியின் ஆளுநரை நியமிப்பார்.

ஜனாதிபதியும், பிரதமரும் இவ்விடயத்தில் சரியானதொரு முடிவை எடுப்பதற்கு ஏதுவாக திறைசேறி முறி மோசடி குறித்த விசாரணை அறிக்கையை இலஞ்ச ஊழல் விசாரணை ஆண்ணக்குழு அவர்களிடம் கையளிக்க வேண்டும்.

நாட்டில் இலஞ்ச ஊழல் மோசடிகளை ஒழிக்கும் விடயத்தில் ஆணைக்குழுவுடன் இணைந்து கபே செயற்பட்டு வரும் நிலையில், விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(செ-12)

## போர்க்குற்ற...

தணிக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக அண்மைய கால அறிக்கைகளில் புதிய ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சுயாதீனமான பக்கசார்பற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவலகம் கோரிக்கை விடுக்கிறது.

34.பாதுகாப்பு மறுசீரமைப்புக்களை அரசாங்கம் எவ்வாறு செய்யப் போகிறது என்பது முக்கிய சவாலாகும். இலங்கை இராணுவப் படைகள் சர்வதேச மட்டத்தில் உறுதியான இடத்தை பெற்றுக் கொள்ள வேண்டும்.

35.இலங்கை அரசாங்கம் ஜெனிவா பிரேரணை அமுலாக்கத்தில் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் நீதிப்பொறிமுறையை தயாரிக்கும் விடயத்திலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவலகம் ஊக்கமடைகிறது. அரசியலமைப்பு பேரவை உருவாக்கம் சுயாதீன மனித உரிமை ஆணைக்குழு உருவாக்கம் காணாமல்போனோர் பற்றிய சாசனத்தில் கைச்சாத்திடல் போன்றவைகள் இலங்கையின் எதிர்காலத்திற்கு பாரிய செல்லுபடியான செயற்பாடுகளாகும். காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் அமைக்கப்பட்டதும் காணாமல் போனோர்களது உறவினர்களுக்கு ஏதோ ஒரு வகையில் நிவாரணம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. உருவாக்கப்படும் நீதி வழங்கும் பொறிமுறையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பரந்துப்பட்ட ரீதியில் ஆராயப்பட வேண்டுமென்பதுடன் அவை மீண்டும் இடம்பெறால் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

36.காணி விடுதலை மற்றும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுப்பிலுள்ளவர்கள் தொடர்பில் கடந்த காலத்தில் மேலும் முன்னேற்றத்தை அடைந்திருக்கலாம். இது சிறுபான்மை மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கும். பலாத்கார கைதுகள், சித்திரவதைகள், பாலியல் வல்லுறவுகள், இராணுவ கண்காணிப்பு போன்றன தொடர்பில் தொடரும் குற்றச்சாட்டுகள் விரைவாக விசாரிக்கப்பட வேண்டும்.

37.ஜெனிவா பிரேரணையை அமுல்படுத்துவதில் பரந்துபட்ட உபாய மார்க்கத்தை வெளியிட வேண்டுமென ஐ.நர். மனித உரிமை ஆணையாளர் எதிர்பார்க்கிறார். இது சர்வதேச உதவிக்கு வலுசேர்க்கும் இதில் தற்போதைய சிவில் சமூகத்துடனான ஆலோசனைகளை பலப்படுத்துவதாக அமையும். நீதிப்பொறிமுறையை நிறுவுவதற்கும் பக்க பலமாக அமையும். இந்தவிடயத்தில் ஐ.நா. அலுவலகம் தொடர்ந்து ஆலோசனைகளையும், தொழில்நுட்ப உதவிகளையும் வழங்குவதற்கு தயாராகவுள்ளது.

38.இலங்கையின் செயற்பாடுகளுக்கு கால அவகாசம் தேவையாகும். பல்வேறு செயற்பாடுகளை கையாளுதல், நிலைமாறு கால நீதி, பொருளாதார மீள்கை, பாதுகாப்பு துறை மறுசீரமைப்பு என்பன எந்தவோர் அரசாங்கத்தினதும் செயற்பாட்டில் சவாலை ஏற்படுத்தும். ஆனால் அனைத்து தரப்பினருக்கும் நம்பிக்கை ஏற்படும் வகையில் குறிப்பாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் செயற்பட வேண்டுமென ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் எதிர்பார்க்கிறார். ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் 34ஆவது கூட்டத்தொடரில் முழுமையான அறிக்கையை வெளியிடுவார். (செ-11)

## பழிவாங்கப்பட்ட...

ஆளும் கட்சிக்கு ஆதரவான ஊழியர்கள் 58 பேருக்கு பதவி உயர்வை வழங்க அமைச்சரவை தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளதாக தெரிவித்தார்.

வங்கி சட்ட விதிமுறைகளுக்கு அமைய இவ்வாறு பதவி உயர்வுகளை அளிப்பதை அனுமதிக்க முடியாதென்று இலங்கை வங்கி ஊழியர்களின் சங்கம் தெரிவித்தது.

இவ்வாறு பதவி உயர்வுகள் நடைமுறைபடுத்தப்பட்டால் அரசு வங்கி நிர்வாகத்தில் பெரிய சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புக்கள் இருப்பதாக வழக்கறிஞர் எச்சரித்தார்.

இந்த கருத்துக்களை ஆராய்ந்த நீதிமன்றம் சம்பந்தப்பட்ட பதவி உயர்வுகள் வழங்குவதை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி வரை தடை செய்யும் உத்தரவை பிறப்பித்தது.

அன்றைய தினம் இந்த குற்றச்சாட்டு தொடர்பாக விளக்கமளிக்குமாறு பிரதமர் உட்பட அமைச்சரவையின் உறுப்பினர்களுக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (செ-12)

## 'இருப்போர்...

மன் ஆலய மணிமேகலை உணவுக்கூடம திறப்புவிழாவும் அன்னதானம் வழங்கல் நிகழ்வு நேற்றைதினம் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்று எம் தமிழ் மக்களிடையே கொடுக்கும் பழக்கம், கொடை அளிக்கும் பழக்கமானவை முக்கியத்துவம் பெற்றுவருகின்றன. வெளிநாட்டில் உள்ளவர்கள் இங்குள்ளவர்கள் உருப்படியாகச் செலவு செய்யும் படியாகக் கொடைகளை வழங்க வேண்டும். வெறும் ஆடம்பரச் செலவுகளுக்கு இடங்கொடுக்கக் கூடாது. எம்மைச் சுற்றிதேவைகள் தாண்டவமாடுகின்றன. வறுமைவாட்டுகின்றது. இருப்போர் இல்லாதோரின் இடர்களைக் களையமுன்வர வேண்டும்.

இதனால் தான் நாங்கள் உதவிப் பாலம் என்ற ஒரு கொடை அலகை உருவாக்கியுள்ளோம். பெரியகொடைகளை எதிர் பாராமல் எத்துணை சிறியகொடையாக இருந்தாலும் மக்கள் மனமுவந்து தரும் உதவிகளை அல்லல்படும் மக்களுக்குப் பிரித்துக் கொடுத்து அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தி வருகின்றோம். நாங்கள் கொடுத்த ஒரு சிறு தொகைப் பணத்தில் எவ்வாறு ஒருவயது முதிர்ந்த அம்மையார், அதுவும் உற்றார் உறவினர்களைப் போரில் பறி கொடுத்த ஒருவர் இதன் வாழ்க்கையை மறுசீரமைப்புச் செய்து கொண்டார் என்பதைக் கூற விரும்புகின்றேன்.

புதன்கிழமைகளில் மக்கள் என்னை நாடி வருகின்றார்கள். அன்றுகுறைகேட்கும் நாள். இந்த அம்மையார் ஒருசிறுபணத் தொகையைக் கேட்டார். நீங்கள் எனக்குக் கொடை உதவிசெய்யத் தேவையில்லை. கடனாகவே தாருங்கள் என்றார். பணத்தைப் பெற்றுவிட்டுப் பல்டி அடிக்கும் பலரைநான் பார்த்துள்ளேன். ஆனால் அந்த அம்மையாரின் கண்களில் ஒரு ஒளி தெரிந்தது. வாக்கில தெளிவிருந்தது. கேட்டதைக் கொடுத்தேன். சுமார் 6 மாதம் கழித்து வந்து இந்தாருங்கள் உங்கள் பணம் என்றார். என்னநடந்தது என்று கேட்டேன். நீங்கள் தந்தபணத்திற்கு ஏலம், கறுவா, கராம்பு, வெந்தயம் போன்ற உணவிற் சேர்க்கும் மூலிகைஉணவு களை வாங்கினேன். அவற்றைச் சிறுசிறு பக்கெட்டுக்களாக ஆக்கினேன். பள்ளிக்கூடங்கள் காலை 10, 11 மணியளவில் சிறிய இடைவேளை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் கொடுப்பார்கள்.

அந்தநேரத்தைப் பயன்படுத்தி கல்லூரிகளில். பாடசாலைகளிலசென்று இந்தப் பொதிகளை விற்றேன். அதிகம் அல்ல. ஒவ்வொரு பொதியும் 10, 20 ரூபாய்தான். ஒவ்வொரு நாளைக்கும் ஒருபள்ளிக்கூடம். சில பள்ளிக் கூடங்கள் உள்ளே விடமாட்டார்கள். அதிபர்களைக் கண்டுபோரில் பாதிக்கப்பட்ட என்னை நேர்மையுடன் வாழவழி விடுங்கள் என்று கேட்டேன். பலர் எனக்கு அனுமதி அளித்தார்கள். அந்தவாறு விற்றதில் தான் என் கடனைஅடைக்க முடிந்துள்ளது என்றார். நான் திருப்பிவாங்கவில்லை. அவரின் ஊக்கத்திற்கான பரிசுஎன்று கூறிஅனுப்பி விட்டேன். இல்லாதவர்களுக்கு இருப்பவர்கள் கொடுப்பதால் இடர்ப்பட்டஎங்கள் மக்கள வாழ்வில் ஒளிஏற்ற முடியும் எனஅவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

### ஆயுத பரவல் தடுப்பு

# அமெரிக்க இராணுவத்தினர் கொழும்பில் விசேட பயிற்சி



பேரழிவு தரும் ஆயுதங்களின் பரவலை தடுப்பது தொடர்பில் இலங்கை பாதுகாப்பு தரப்பினருக்கு அமெரிக்கா பயிற்சிகளை வழங்கியுள்ளது.

இலங்கையின் துறைமுக மற்றும் சுங்க அதிகாரிகள், பொலிஸார், கடற்படை மற்றும் கடற்பாதுகாப்பு படை உறுப்பினர்களுக்கு இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

சர்வதேச பரவலை தடுக்கும் திட்டம் தொடர்பான அமெரிக்க இராணுவத்தின் விசேட நிபுணர்களால் இந்த பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எல்லைப் பாதுகாப்பு, தொழில் நுட்பம் மற்றும் அச்சுறுத்தலை கணித்தல் உள்ளிட்ட தலைப்புக்களில் ஐந்து நாள் பயிற்சி பட்டறை நடத்தப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் கூறியுள்ளது.

இந்து சமுத்திரத்தில் பாதுகாப்பு தொடர்பான ஒத்துழைப்பை மேம்படுத்துதல் உள்ளிட்ட அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான கூட்டுறவை வலுப்படுத்தும் வகையில் இந்தப் பயிற்சி பட்டறை நடத்தப்பட்டுள்ளதாக தூதரம் மேலும் சுட்டிக் காட்டியுள்ளது. (இ-10)

# இரண்டாவது பொதுவாக்கெடுப்பு நடத்த ஒருபோதும் வாய்ப்பில்லை பிரித்தானியா தேர்தல் ஆணையம்

ஒன்லைன் மூலம் பதிவு செய்யப்படும் கையெழுத்து கோரிக்கைகள் அடிப்படையில் இரண்டாவது பொதுவாக்கெடுப்பு நடத்த சட்டத்தில் இடம் இல்லை என பிரித்தானியா தேர்தல் ஆணையம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரித்தானியா விலகுவது தொடர்பாக நடைபெற்ற பொது வாக்கெடுப்பில் 'விலக வேண்டும்' என வலியுறுத்தி 52 சதவிகித மக்கள் வாக்களித்தனர்.

இதனை தொடர்ந்து ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரித்தானியா விலகியதை தொடர்ந்து பிரதமர் கமரூன் தனது பதவியை இராஜினாமா செய்தார்.

இந்நிலையில், நடந்து முடிந்த பொதுவாக்கெடுப்பில் பங்கேற்றவர்கள் 75 சதவிகித வாக்காளர்கள் இல்லை என்பதாலும், வாக்கெடுப்பின் முடிவுகள் 60 சதவிகிதத்தை எட்டவில்லை என்பதாலும், இரண்டாவது பொது வாக்கெடுப்பு நடத்த வழிவகை செய்யும் புதிய விதிமுறையை அறிமுகப்படுத்த வேண்டும் என அரசுக்கு கோரிக்கை வைக்கப்பட்டது.

ஒன்லைன் மூலம் தொடங்கப்பட்ட கையெழுத்து கோரிக்கைகளில் இதுவரை 3.7 மில்லியன் மனுக்கள் அரசுக்கு வந்துள்ளன.

இந்த கோரிக்கை மனுக்கள் குறித்து தேர்தல் ஆணையம் நேற்று முன்தினம் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் ஒன்லைன் மூலம் கையெழுத்து போராட்டம் நடத்தினாலும் கூட இரண்டாவது பொது வாக்கெடுப்பு நடத்த அரசியலமைப்பில் எந்த சட்டமும் இல்லை. இரண்டாவது பொதுவாக்கெடுப்பிற்கு ஒன்லைன் கையெழுத்து மட்டும் போதாது.

எனவே, இப்போதைய சூழ்நிலையில் இரண்டாவது பொது வாக்கெடுப்பு நடத்த வாய்ப்பில்லை என தேர்தல் ஆணைய அதிகாரி தெரிவித்துள்ளார். (இ-10)

# ஆசிய நாடுகளின் உறவை வலுப்படுத்த அரசு தீர்மானம்

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து இங்கிலாந்தின் விலகல் காரணமான உத்தேச பொருளாதாரச் சரிவிலிருந்து தப்பித்துக் கொள்ள ஆசிய நாடுகளின் உறவை வலுப்படுத்த இலங்கை தீர்மானித்துள்ளது.

இதன் ஒருகட்டமாக இந்தியாவுடனான தொழில்நுட்ப மற்றும் பொருளாதார (எட்கா) புரிந்துணர்வு ஒப்பந்தத்தை விரைவுபடுத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

இதற்காக சர்வதேச வர்த்தக விவகாரங்கள் அமைச்சர் மலிக் சமரவிக்கிரம இரண்டொரு தினங்களுக்குள் இந்தியாவுக்கு விஜயம் செய்து இருதரப்புக் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளதாக தெரிய வந்துள்ளது.

தற்போதைக்கு சீனாவில் விஜயமொன்றை மேற்கொண்டிருக்கும் அமைச்சர் மலிக் சமரவிக்கிரம, அங்கிருந்தே நேராக இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

அவருக்குத் துணையாக பிரதமரின் சிரேஷ்ட ஆலோசகர் எம். பாஸ்கரலிங்கம் தலைமையிலான குழுவொன்று இலங்கையிலிருந்து இந்தியா புறப்பட்டுச் செல்லவுள்ளது. (இ-10)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர்களான




ஆகியோர் கடந்த 09.05.2016 தொடக்கம் இலங்கை அதிபர் சேவை தரம் III இற்கு பதவி உயர்வு பெற்றுள்ளனர். இவர்களை மனதார வாழ்த்துவதோடு இவர்கள் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

(சி-5037)

நலன்புரிக் கழகம், கிளி/கிளிநொச்சி மத்திய ம.வி.

எங்கள் வீட்டில் நடமாடி சுவரில் படமான எமது குடும்பத்தலைவரின்

13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர். திரு.கந்தையா சிவராசா (சின்னக்கிளி)

தாயின் மடியில் 28.02.1933 தாயக மண்ணில் 19.06.2003



யாழ். கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் கட்டுவனை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் திரு. கந்தையா சிவராசா (சின்னக்கிளி)**

(யாழ்.தெல்லிப்பழை சுதேச வைத்தியசாலை -அற்றெண்டன்)

ஆண்டு பல சென்றாலும் உங்கள் நினைவுகள்
அகலவில்லை எங்கள் நெஞ்சை விட்டு பாசத்தை
வேராக்கி உங்கள் நினைவுகளை பதித்து விட்டீர்
எம்மனதில் உறவுகளை அரவணைத்து எங்கள்
குடும்பத்தில் உயர்ந்து நின்றீர்கள். உங்கள்
நினைவுகள் என்றும் மலர்ந்து நிற்கும் எம்மனதில்
அரவணைத்து வாழ்வளித்தீர் உங்கள் நினைவுகள்
என்றும் மறையவில்லை எங்கள் இதயங்களில்
எங்கள் நினைவுகளில் நிறைந்த நல்லவரே தங்கள்
நினைவுகள் என்றும் எம்மனதில்
நிலைத்திருக்க விழி நீர் சொரிந்து
அஞ்சலிக்கின்றோம்.

(5071)

என்றும் பாச நினைவுடன்
அன்பு மனைவி சி.அன்னரத்தினம்,
பாசமிகு பிள்ளைகள், மருமக்கள், பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

கட்டுவன் மேற்கு,
தெல்லிப்பழை.

## இராசி பலன்

29.06.2016
(ஆனி 15, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
நவமி காலை 6.34 மணிவரை
தசமி பின்னிரவு 4.07 மணிவரை
அச்சுவினி பின்னிரவு 2.30 மணிவரை
சுபநேரம் 4.26-5.56 மணிவரை
இராகுகாலம் 11.56-1.26 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சந் | | சூரி புத சுக் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அத்தம் | | |
| | | | குரு ராகு |
| | சனி | செவ் | |

**மேடம்**: வீட்டில் சில மாற்றங்களை செய்ய முற்படுவீர்கள், தொழிலில் பணியாளர்களின் ஒத்தாசைகள் குறையலாம், கற்பனை மிகுதியான நாள், வழிபாட்டால் நலம் காண வேண்டிய நாள்.

**இடபம்**: ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், தேவையற்ற மனஸ்தாபங்களைத் தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்**: தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**கடகம்**: திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் சரியாக நடைபெறலாம், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு, நண்பர்களின் உதவியுண்டு.

**சிம்மம்**: மறைமுகப் போட்டிகளையும் எளிதில் சமாளிப்பீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கன்னி**: உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, கொடுத்த வாக்கை கடைசி நேரத்தில் காப்பாற்றுவீர்கள், தேகநலனில் கவனம் தேவை, போசன சுகக் குறைவுண்டு.

**துலாம்**: உறவினர் வருகையால் உற்சாகம் பெருகும் நாள், சுபகாரியச் செலவுகள் ஏற்படலாம், புதிய அனுபவங்கள் கிடைக்கலாம், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**விருச்சிகம்**: பொருளாதார நிலை உயர்வதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**தனுசு**: அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்**: பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், வாகன சுகமுண்டு, தொழில் முன்னேற்றத்துக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கும்பம்**: சமுதாயப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, வாய்ப்புக்கள் தேடி வரலாம், சுதந்திரமாகச் செயற்படுவீர்கள்.

**மீனம்**: மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் குடிகொள்ளும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், வார்த்தைகளில் நிதானம் தேவை, காரிய வெற்றிக்கு கணபதியை வழிபட வேண்டிய நாள்.

# யாழில் 5 ஆயிரம் பேர் எச்.ஐ.வி. பரிசோதனை

## வைத்திய அதிகாரி தகவல்

(யாழ்ப்பாணம்)

தேசிய எச்.ஐ.வி (HIV) பரிசோதனை தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கையில் 5 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளனர் என யாழ். போதனா வைத்தியசாலை பாலியல் தடுப்பு நோய் சிகிச்சைப்பிரிவின் வைத்திய அதிகாரி தாரணி குருபரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய எச்.ஐ.வி.(HIV) பரிசோதனை தினத்தை முன்னிட்டு தேசிய எச்.ஐ.வி.(HIV) பரிசோதனை தினம் "இன்றே பரிசோதியுங்கள்" எனும் தொனப்பொருளில் நேற்றைய தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

வடபகுதியில் எச்.ஐ.வி. தொற்று ஏற்படக்கூடிய ஆபத்து அதிகளவில் காணப்படுவதனால் இப் பரிசோதனை செயற்திட்டத்தையும் விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் மேற்கொண்டோம்.

அந்த வகையில்நேற்றைய தினம் யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் எச்.ஐ.வி. பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதாவது யாழ். மாவட்டதல்உள்ள அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும்விசேடமாக பரிசோதனை முகாம் அமைத்திருந்தோம். அதன் ஆரம்ப நிகழ்வு யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள பாலியல் தடுப்பு நோய் சிகிச்சைப் பிரிவிலும் மார்புநோய் தடுப்புபிரிவிலும் காலையில் காலை 8.30 மணிக்கு நடைபெற்றது. அதில் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர்எஸ்.சத்தியமூர்த்தி, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கே.நந்தகுமார் உட்பட பலர் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

மேலும் மக்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களில் அதிகளவான முகாம்கள் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு யாழ். மாவட்டத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் 75 முகாம்கள் அமைக்கப்பட்டன.

இதற்கென மருத்துவ பீட மாணவர்கள் மற்றும் மருத்துவ ஊழியர்களுக்கு விசேட பயிற்சி வழங்கப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

பிற்பகல் ஒரு மணிவரை நடைபெற்ற இந்த நிகழ்வு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதுடன் சந்தேகத்துக்கிடமான முறையில் முடிவுகள் கிடைத்த 3 நபர்களை மேலதிக பரிசோதனைக்காக வரும்படி அழைத்துள்ளோம்.

அவர்களின் தகவல்களில் பூரண இரகசியம் பேணப்படும்.

தொடர்ச்சியாக இப் பரிசோதனை யாழ்.போதனா வைத்தியசாலையில் நடைபெறுவதால் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# வாழ்வாதார உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பலாலி வடக்கு அன்ரனிபுரம் கிராமத்தில் உள்ள மீனவ குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகளை விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற கொள்வதாக மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் உறுதியளித்துள்ளதாக ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வி.கே.ஜெகன் தெரிவித்துள்ளார்

வலி.வடக்கில் 201.3 ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்காக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்,பாதுகாப்பு அமைச்சின் உதவிச் செயலாளர், மீள்குடியேற்ற புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி, வட மாகாண ஆளுநர், யாழ். மாவட்ட அரச அதிபர் உட்பட பல அதிகாரிகள் வருகை தந்திருந்தனர்.

குறித்த நிகழ்வின் பின்னர் மீள்குடியேற்றப்பட்ட இடங்களுக்கு கள விஜயத்தினை மேற்கொண்டிருந்தனர்.

பலாலி வடக்கு பகுதியில் மேலும் சில பகுதிகளை விடுதலை செய்ய வேண்டும் எனவும், அன்ரனிபுரத்தில் மீள்குடியேறியுள்ள 190 குடும்பங்களுக்கு எந்தவிதமான வாழ்வாதார உதவிகளும் வழங்கப்படவில்லை எனவும், வீடுகள் கட்டுவதற்கு கட்டடப்பொருட்களின் விலை அதிகரித்து காணப்படுவதால் வீட்டுத்திட்டத்துக்கு கொடுக்கப்படும் நிதி போதியதாக இல்லை எனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

மேலும் பொருத்து வீடுகள் தமக்கு வேண்டாம் எனவும் கல் வீடுகள் தான் வேண்டும் எனவும் மக்களால் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக செயற்படுத்த கூடிய விடயமாக அப்பகுதி மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்குவதற்கு பெயர் விபரங்களை வழங்குமாறு மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் கேட்டுக் கொண்டதற்கமைவாக பிரதேச செயலர் ஊடாக குறித்த விபரங்களை கையளிக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் வடக்கு மாகாணத்திலுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களிற்கு பின்வரும் கற்கை நெறிகளினை கற்பிக்கும் போதனாசிரியர்களிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அழகுக்கலைமற்றும்சிகையலங்கரிப்பவர்(Beauty Culture & Hair Dresser ), காய்ச்சி ஒட்டுபவர் (Welder), மோட் டார் வாகனதிருத்துநர்(Automobile Mechanic), மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டி திருத்துநர் (Motorcycle Threewheeler Mechanic), விவசாயஇயந்திர, உபகரணங்கள் திருத்துநர்(Agriculture Equipment Mechanic), பெண்கள், சிறுவர்களிற்கான ஆடை வடிவமைப்பாளர்( Ladies & Children Tailor), சமையலாளர்(Cook), வெதுப்பகஉற்பத்தியாளர் (Baker), முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி (Preschool Teacher), வெளியிணைப்பு படகு இயந்திர திருத்துநர் (Outboat Motor Mechanic) கட்டட கைவினைஞர் (Construction Craftsman).

கல்வித்தகைமை–க.பொ.த. சாதாரண தரத்தில் ஒரு அமர்வில் தமிழ் மற்றும் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல். அத்துடன் தொழில்தகைமை - குறித்த தொழிற்பயிற்சி கற்கைநெறியில் NVQ மட்டம் – 5 அல்லது அதற்கு மேலான தகைமையைக் கொண்டிருத்தல். அத்துடன் அனுபவம் - குறித்த துறையில் குறைந்தது ஒரு வருடம் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு அனுபவம் இருத்தல் வேண்டும்.அத்துடன் வயதெல்லை – 18 வயது தொடக்கம் 45 வயதுக்குட்பட்டவர்கள். மேலேகுறிப்பிடப்பட்ட போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவர்கள் தங்கள் சுய விபரக்கோவை மற்றும் சான்றிதழின் பிரதிகளுடன் 07.07.2016 ஆம் திகதிக்கு முன்னர் உதவிப் பணிப்பாளர், இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை, வீரசிங்கம் மண்டபம் (1 ஆம் மாடி), இல. 12 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும் என உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ

# தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் தமிழ் விழா நாளை மறுதினம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை க்ாலை 9 மணியளவில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கௌரி முகுந்தன் கலந்து கொள்வதுடன் யாழ்.வலய தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் தி.தயாபரன், பழைய மாணவர்கள் திருமதி காங்கேசன் தம்பதியினர் (டென்மார்க்) ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்வதுடன்கௌரவ விருந்தினராக யாழ். வலய தமிழ்ப் பாட ஆசிரிய ஆலோசகர் திருமதிரஜனிபிரதீபன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)




# புகைத்தல் மறுப்பு தினத்தை முன்னிட்டு புங்குடுதீவில் விழிப்புணர்வு நிகழ்வு





சர்வதேச புகைத்தல் மறுப்பு தினத்தை முன்னிட்டு மாணவர்களை போதைப்பொருட்களின் பாவனையில் இருந்து பாதுகாப்பதற்காகவும் சிறுவர் துஷ்பிரயோகங்களில் இருநது பாதுகாப்பதனை நோக்கமாகக் கொண்ட விழிப்புணர்வு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் சு. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் போதைப்பொருள்பாவனையை மாணவர்கள் மத்தியில் எவ்வாறு பழக்க திட்டமிடுகின்றனர் மற்றும் அதனால் ஏற்படும் சமுதாய சிக்கல்கள், விளைவுகள் மற்றும் அதனுடன் மாணவர்களை துஷ்பிரயோகங்களில் இருந்து எவ்வாறு தப்பித்து கொள்ளலாம் என்றும், சட்டரீதியற்ற போதைப் பொருள் பாவனை தொடர்பில் 1984 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு பிரச்சினைகளை முறையிட்டு அதற்கு தீர்வு காணமுடியும் என்பதோடு போதைப்பொருட்பாவனையால் பாதிக்கப்பட்ட நபர்களை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பமுடியும்என்றும்மாணவர்களுக்கு கருத்துக்களை வழங்கி தெளிவுபடுத்தினர்.

இந்நிகழ்விற்கு வேலணை பிரதேச செயலகத்தின் செயலாளர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ரு.ரவிராஜ், சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் திருமதி. வி.தர்மினி, மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல்நிலைய மாவட்ட இணைப்பாளர் கோடீஸ்வரன் மற்றும் தேசிய அபாய ஔடதங் கள் கட்டுப்பாட்டுச்சபையின் யாழ். மாவட்ட உளவளத் துணையாளர் எட்வின் றொஜர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

மேலும் வேலணை பிரதேசத்தில் போதைப்பொருட் பாவனையை கட்டுப்படுத்தும் முகமாக தொடர்ச்சியான விழிப்புணர்வு நிகழ்வுகளை பாடசாலை மட்டத்திலும் கிராம மட்டத்திலும் நடத்த திட்டமிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-9)







பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சி. இன் சேவை நிலையம் ஒன்று நெல்லியடியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சி. இன் பிரதம நிறைவேற்று அதிகாரி டி.பீ.குமாரகே சேவை நிலையத்தை நாடாவெட்டி திறந்து வைப்பதையும் வாடிக்கையாளர் ஒருவருக்கு வாகனம் ஒன்று லீசிங் முறையில் வழங்கப்பட்டதையும் படங்களில் காணலாம்.

# இலங்கையிலிருந்து மலேரியா முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்டதா?

## ஆராய வருகின்றனர் உலக சுகாதார பிரதிநிதிகள்

மலேரியாவானது இலங்கையில் இருந்து முற்றுமுழுதாக ஒழிக்கப்பட்டு விட்டதா என உறுதிப்படுத்துவதற்கு உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதிகள் சிலர் இலங்கை வரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இலங்கையில் இருந்து மலேரியாவானது முற்றாக அழிக்கப்பட்டு விட்டதை உறுதி செய்து உலக சுகாதார அமைப்பினால் சான்றிதழ் வழங்குவதற்காகவே குறித்த பிரதிநிதிகள் இலங்கை வருவதாக இலங்கையின் மலேரியா ஒழிப்பு பிரிவின் பணிப்பாளரான வைத்தியர் எச்.டீ.பி.ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த 3 வருடங்களாக இலங்கையில் எந்தவொரு மலேரியா நோயாளியும் இனங்காணப்படவில்லை என சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (இ-10)

# அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தடைப் பரீட்சை குழப்ப நிலை நீக்கம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச் சேவைக்குட்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைக்காண் தடைப்பரீட்சை மற்றும் பதவியுயர்வு தொடர்பாக உத்தியோகத்தர்கள் மத்தியில் காணப்படும்குழப்ப நிலையை நீக்குமுகமாக வடமாகாண அரசசேவைப் பட்டதாரிகள் சங்கம் இச்செய்தியினை வெளியிடுகின்றது.

1999 ஆண்டு தொடக்கம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பினை வழங்குகின்ற அரசாங்கத்தின் கொள்கை அடிப்படையிலான செயற்றிட்டத்தின் கீழ் வித்தியாசமான வெவ்வேறு பதவிப் பெயர்களில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணிகள் ஆணைக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் MN 4- 2006 (A) என்ற வேதன அளவுத்திட்டத்தில் அமர்த்தப்பட்டிருந்த அலுவலர்களுக்கான வினைத்திறமைக்காண் தடைப்பரீட்சை மற்றும் தரம் II இற்கான பதவியுயர்வு தொடர்பாக பல்வேறு குழப்பநிலைகள் அலுவலர் மத்தியில் காணப்பட்டு வந்தன.

மேற்படிப் பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக எமது வடமாகாண அரச சேவைப் பட்டதாரிகள் சங்கம் வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) ஊடாக எடுத்த முயற்சியின் பலனாக NP/02/02/D/Gen-V/2016 இலக்க 16.06.2016 திகதியில் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்தின் மூலம் தீர்வு எட்டப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் தமது சேவைக் காலத்தில் பத்து (10) வருடங்களைப் பூர்த்தி செய்திருப்பதுடன் பத்து (10) வருடத்திற்குரிய வேதன ஏற்றங்களையும் உரிய முறையில் பெற்று பதவியுயர்வுக்குத் தேவையான தகைமைகளைக் கொண்டிருப்பார்களேயானால் அவர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் II இற்கு பதவியுயர்வினைப் பெற்றுக் கொள்ள முடியுமென்பதுடன் அப்பதவி உயர்வுக்குரிய விண்ணப்பங்களை எதிர்வரும் 30.07.2016 இற்கு முன்னர் தங்கள் திணைக்களத் தலைவரூடாக பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) இற்கு அனுப்பிவைக்க வேண்டும். அவர்களால் தரம் II இற்குரிய பதவியுயர்வு வழங்கப்பட்ட பின்னர் தரம் II இல் சித்தியடைய வேண்டிய வினைத்திறமை காண் தடைப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

அதேவேளை 07.03.2014 இல் வடமாகாண பிரதிப் பிரதம செயலாளரால் (நிர்வாகம்) வெளியிடப்பட்ட NP/02/02/PA/Gen-V/2014 இலக்க சுற்று நிருபத்தில் (2) என்ற பந்தியில் குறிப்பிடப்பட்டதன் அடிப்படையில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (தரம் III) எனும் பதவிப் பெயர் பயன்படுத்தப்பட்ட காலப்பகுதியில் இருந்த சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளில் தோற்றி இரண்டு பரீட்சைகளிலும் சித்தியடைந்தவர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்டதன் பின்னர் குறித்த வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளில் இருந்து விலக்களிக்கப்படுவார்கள்.

எனவே ஏற்கனவே நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (தரம்- III) பதவியில், இரண்டாவது வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்த அலுவலர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் II இல் தோற்ற வேண்டிய வினைத் திறமைகாண் தடைப் பரீட்சையில் இருந்து விலக்களிப்புப் பெறுவர் என அச்சங்கத்தின் செயலாளர் நடராஜா ஐங்கரன் அறிவித்துள்ளார். (இ)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா:52 செவ் 8 இல்<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்:A/L/ அரசதொழில்<br>தொ.இ: B/6001 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 24 செவ் 7 இல்<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/6006 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 54செவ் 2 இல்<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்:A/L/ அரசதொழில்<br>தொ.இ: B/6002 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 54<br>உயரம்: 5’5"<br>தகைமை/தொழில்:HNDA/ அரசதொழில்<br>தொ.இ: G/6008 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 51<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/6003 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 31செவ் 12 இல்<br>உயரம்: 5’<br>தகைமை/தொழில்:BSc/ விரிவுரையாளர்<br>தொ.இ: G/6017 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 23சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 171cm<br>தகைமை/தொழில்:BSc Eng/ விரிவுரையாளர்<br>தொ.இ: B/6004 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 38<br>உயரம்: 152cm<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/6019 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



பாராட்டி வாழ்த்துகின்றோம்



அதிபர் சேவை தரம் III போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த கௌரவ கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அவர்களிடமிருந்து அதிபர் சேவை தரம் III நியமனத்தைப் பெற்ற

திருமதி கிருஸ்ணலதா குலசங்கர்

அவர்களையும் மற்றும்

திரு. ஜெயமோகன், திரு.நவநீதன்

(யா/ அல்வாய் வடக்கு இ.த.க.பாடசாலை)

பாராட்டி வாழ்த்துவதுடன் மென்மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று சிறப்புற வாழ வாழ்த்துகிறோம்.

மந்திகை, புலோலி.

வாழ்த்துவோர்:
நாவலர் புத்தகசாலை

(சி-5048)



பாராட்டி வாழ்த்துகின்றோம்

இலங்கை அதிபர் சேவை தரம் III பரீட்சையில் சித்தியடைந்தமைக்கான நியமனத்தைப் பெற்ற யா/ விக்ரோறியாக் கல்லூரியைச் சேர்ந்த எமது ஆசிரியர்களை அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.



திரு.வி.மதிதரன்
SLPS-III, B.Sc with Edu (Hons)

(5057)



திரு.கு.கண்ணதாசன்
SLPS-III, B.Sc PGDE



திரு.தி.தவரட்ணம்
SLPS-III, B.A, PGDE, Dip in Fsc SP Trd W.R.



திரு.செ.சுதாகரன்
SLPS-III, B.Com (Hons), PGDE, M.A in Eco (Hons)



திரு.வி.சிவஞானம்
SLPS-III, B.Sc, PGDE



திரு.வி.பிரகலாதன்
SLPS-III, B.Com, H.N.D.A. PGDE

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/ விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.



மன்னாரில் புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனைக்கெதிராக நேற்று முன்தினம் ''போதைப்பொருள் அற்ற சமுதாயத்தை உருவாக்குவோம்'' எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்ற போது... (படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# ஜப்பான் - இலங்கை நட்புறவின் அடையாளமாக கட்டடம் அமையும்

## கிளி/மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் ஜப்பானியத் தூதுவர் தெரிவிப்பு









ஜப்பான்- இலங்கை நட்புறவின் அடையாளமாக கிளி/ மத்திய ஆரம்ப வித்தியாலயத்திற்கான புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஜப்பானிய தூதுவர் டக்கே சுழி சட்டோ தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்திற்கான புதிய கட்டடம் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் ஜப்பானிய தூதுவரால் கையளிக்கப்பட்டது.

நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, ஜப்பானிய தூதுவர்கள், கல்வி அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். கட்டடத்தினை வடக்கு மாகாண கல்வி அமைச்சர் நாடா வெட்டி திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து நினைவுக்கல்லை ஜப்பானிய தூதுவர் திறந்து வைத்தார். அதன் பின்னர் உரையாற்றிய போதே அவர் மேற் கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஜப்பானிய மக்களினதும், ஜப்பான் அரசினதும் நிதிப் பங் களிப்புடன் குறித்த கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது;

ஜப்பானிய மக்களினதும், ஜப்பான் அரசினதும் நிதி பங்களிப்புடன் ஜப்பான்- இலங்கை நட்புறவின் அடையாளமாக குறித்த பாடசாலை கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு இன்று (நேற்றுமுன்தினம்) கையளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பாடசாலை கல்வியினை மேம்படுத்த முடியும் என அவர் தெரிவித்தார்.


இதனையடுத்து வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கூறுகையில்,

பாடசாலைவளங்கள்குறைவான நிலையில் இப் பாடசாலைக்கு இக்கட்டடம் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.

வடக்கில் கல்வி வீதம் குறைவடைந்து வருகின்றமை தொடர்பில் ஊடகங்களில் செய்திகள் வெளிவருவதாக தெரிவித்த அமைச்சர், யுத்தம் காரணமாக வயிற்றில் குழந்தைகளை சுமந்தவாறு முகாம்களுக்கு சென்றவர்கள்,அங்கு குழந்தைகளை பிரசவித்தனர். யுத்தம் காரணமாக வயிற்றில் குழந்தை இருந்தபோதே பல்வேறான தாக்கங்களுக்கு உள்ளாகியுள்ளனர். தற்போது குறித்த குழந்தைகள் ஆரம்ப கல்வியை தொடர்ந்து வருகின்றனர்.

யுத்தத்தின் தாக்கத்திற்கு உள்ளான நிலையிலேயே தற்போது கல்வி பெறுபேறுகள் குறைவடைந்துள்ளன. குறித்த குறைபாடுகள் இன்னும் 15 வருடங்களுக்கு காணப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இக்குழந்தைகளின் கல்விக்காக ஜப்பான் அரசினால் வழங்கப்பட்ட இக்கட்டடத்தின் மூலம் மாணவர்களின் கல்வி உயர்வடையும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார். இதற்காக நிதி வழங்கிய ஜப்பான் அரசுக்கும் அவர் நன்றி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (2-6-12)





# வவுனியா அபிவிருத்தி திட்டங்கள் நகருக்கு அருகில் அமைவது சிறந்ததாகும்

## வவுனியா மாவட்ட விவசாயிகளின் சம்மேளனத்தலைவர் தெரிவிப்பு

(குருமன்காடு)

தாண்டிக்குளத்தில் பொருளாதார மையம் அமைந்தால் வடக்கு மாகாணத்தின் ஒரேயொரு விவசாய பாடசாலை பாதிக்கும் என வவுனியா மாவட்ட விவசாயிகளின் சம்மேளனத் தலைவர் எஸ்.ரங்கன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட இடத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

வவுனியா மாவட்டத்தில் 253 விவசாய அமைப்புக்களும் 8 கமநல கேந்திர நிலையங்களும் உள்ளன. இந் நிலையில் விவசாயிகளின் பிரச்சினையை தீர்மானிப்பது யார் என்பது தெளிவாக்கப்பட வேண்டும்.

பொருளாதார மத்திய நிலையமொன்று வவுனியாவில் அமைவதற்கான இடப்பிரச்சினையொன்று இடம்பெற்று வருகின்றது. ஒரு சிலர் நகரத்திற்கு அண்மையில் இந்த நிலையம் அமையவேண்டும் என்பதனை முன் வைக்கின்றனர்.

ஆனால் யுத்தத்தின் காரணமாக இடப்பெயர்வுகளை சந்தித்த பின்னர் வவுனியா மாவட்டத்தின் நகர்ப்புறம் சனநெரிசல் மிக்கதாக காணப்படுகின்றது.இந்நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகம் வவுனியா நகரில் இருந்து 8 கிலோமீற்றருக்கு அப்பால் கொண்டு செல்லப்பட்டுள்ளது. அதேபோல் தொழில்நுட்ப கல்லூரி, ஆயுர்வேத வைத்தியசாலை என்பனவும் வவுனியாவிற்கு அப்பால் கொண்டு செல்லப்பட்டுள்ளன. அத்துடன் அரச குடியிருப்பாளர்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்படும்போதும் கூட ஏ-9 வீதியில் ஓமந்தைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்நிலையில் வட பகுதியில் அமைந்துள்ள ஒரேயொரு விவசாய பாடசாலைக்கு முன்பாகவே தற்போது பொருளாதார மத்திய நிலையத்திற்கான இடத்தினை தருமாறு கோருகின்றனர். இப்பாடசாலையில் 30 இருந்து 80 ஆக மாணவர்களை அதிகரிப்பதற்கான வேலைகள் இடம்பெற்று வருகின்றன. எனவே இப்பாடசாலை மற்றும் இப்பிரதேசத்தின் சுற்றுச்சூழலில் ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்களும் வசிக்கின்றன. இவை தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

ஆகவே இவ்விடத்தில் வரக்கூடிய வாகன நெரிசல் மற்றும் வவுனியாவில் தற்போது ஏற்பட்டு வரும் விபத்துக்கள் தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும். ஆகவே வவுனியாவிற்கு வரும் அபிவிருத்தி திட்டங்கள் நகருக்கு அருகில் வரவேண்டும் என எண்ணுவது சிறந்ததாக அமையாது.

அத்துடன் நெடுங்கேணி பிரதேசம் அதிகளவான விவசாயிகளை கொண்ட பிரதேசமாகும். ஆகவே அப்பகுதி விவசாயிகளுக்கும் கனகராயன்குளம் விவசாயிகள் உட்பட அதிகளவான விவசாயிகளை கொண்டமைந்த கிராமங்களுக்கு இலகுவான ஓர் இடமாக ஓமந்தை காணப்படுகின்றது.

இந்நிலையில் இன்று இடம்பெற்ற உண்ணாவிரதப்போராட்டத்திற்கு விவசாயிகள் எத்தனை பேர் கலந்து கொண்டனர் என்பது கேள்வியே. ஆகவே அனைத்து விவசாயிகளின் கோரிக்கைக்கு இணங்க ஓமந்தைப் பகுதிக்கே பொருளாதார மத்திய நிலையத்தை அமைக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (2-250)

# போதைப்பொருள் பாவனைக்கெதிராக மன்னாரில் விழிப்புணர்வு பேரணி

மன்னாரில் புகைத்தல் மற்றும் போதைப் பொருள் பாவனைக்கெதிராக நேற்று முன் தினம் போதைப்பொருள் அற்ற சமுதாயத்தை உருவாக்குவோம் எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. சர்வ தேச போதைப்பொருள் ஒழிப்புதினத்தையொட்டி மன்னார் திருப்புமுனை மையத்தின் ஏற்பாட்டில் விழிப்புணர்வு பேரணி முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் சித்தி விநாயகர் இந்து தேசிய பாடசாலை, மன்.புனிதசவேரியார் ஆண்கள் கல்லூரி மற்றும் மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை மாணவர்கள் ஒன்றிணைந்து குறித்த விழிப்புணர்வு பேரணியில் கலந்து கொண்டனர்.

மாணவர்கள் பதாகைகளை ஏந்தியும், கோஷங்களை எழுப்பியவாறும் பிரதான வீதியூடாக, மன்னார் நகர மத்திய பகுதியில் ஒன்றுதிரண்டு விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இந்த பேரணியில் மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் செலின் சுகந்தி செபஸ்தியன், மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அஜந்த றொற்றிகோ, மன்னார் திருப்புமுனை புதுவாழ்வு மைய இயக்குநர் அருட்தந்தை கியூபேட் அடிகளார், மன்னார் சமாதான அமைப்பின் தலைவர் பீ.ஏ.அந்தோனிமார்க் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# கல்லாறு - சுண்டிக்குளம் பிரதான வீதி இரண்டு மில்லியன் செலவில் புனரமைப்பு

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்லாறு - சுண்டிக்குளம் பிரதான வீதி, இரண்டு மில்லியன் ரூபாய் செலவில் தற்காலிகமாக புனரமைப்பு செய்யப்படவுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபைத்தகவல்கள் தெரிவிக்கின்றன. கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கல்லாறு சுண்டிக்குளம் பிரதான வீதி எதுவித புனரமைப்பு பணிகளுமின்றி மிக மோசமாக சேதமடைந்து மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.



பருவமழை காலங்களில் சாதாரண துவிச்சக்கர வண்டிகளில் கூட பயணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் இவ்வீதியை பிரதான வீதியாகக் கொண்டு வாழும் 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அன்றாடம் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருவதாக தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியை புனரமைத்து தருமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் இப்பகுதி மக்கள் விடுத்த கோரிக்கையையடுத்து தற்காலிகமாக இவ் வீதி புனரமைக்கப்படவுள்ளதாகவும் அத் தகவலில் தெரிவிக்கப்படுகின்றது. (2-312)

# ஓமந்தையில் பொருளாதார மத்திய நிலையத்தை அமைக்கக்கோரி விவசாயிகள் அமைதிப்பேரணி






(குருமன்காடு)

வவுனியாவில் அமையவுள்ள பொருளாதார மத்திய நிலையத்தினை ஓமந்தையில் அமைக்கவேண்டியும் முதலமைச்சரின் கரங்களை பலப்படுத்துவோம் எனவும் தெரிவித்து வவுனியா மாவட்ட விவசாய சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்த அமைதிப் பேரணியொன்று நேற்றுக்காலை வவுனியாவில் இடம்பெற்றது.




வவுனியா காமினி மகா வித்தியாலயத்திற்கு முன்பாக ஒன்று கூடிய விவசாயிகள் தமது கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை தாங்கியிருந்ததுடன் மன்னார் வீதி ஊடாக அமைதியான முறையில் பேரணியாக நகர்ந்து மாவட்ட செயலகம் வரை சென்றிருந்தனர். இதன்போது "முதலமைச் சரின் கரங்களை பலப்படு த்துவோம், சுற்றுச்சூழலை பாதுகாப் போம், மத்திய அரசே ஓமந்தையில் பொருளாதார மத்திய நிலையத்தினை அமையவிடு" போன்ற வாசகங்களை பதாதைகளில் ஏந்தியவாறு பேரணியில் கலந்துகொண்டிருந்தனர்.

இப்பேரணியில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஆர். இந்திரராசா ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன் நிறைவில் வவுனியா மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர் தி. திரேஸ்குமாரிடம் பிரதமர், வடக்கு மாகாண முதலமைச்சர் ஆகியோரிடம் கையளிப்பதற்கான மகஜர்கள் கையளிக்கப்பட்ட பின்னர் பேரணியில் கலந்து கொண்டவர்கள் கலைந்து சென்றிருந்தனர். (2-250-281)

# ஸ்ரீ நரசிங்கர் ஆலயத்தின் உண்டியல் பணம் திருட்டு

## சந்தேகத்தின் பேரில் இளைஞன் கைதானார்

தண்ணீரூற்று ஸ்ரீ நரசிங்கர் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த காணிக்கை உண்டியல் உடைக்கப்பட்டு பணம் திருட்டுப்போயுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு இடம்பெற்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,



பூசைவழிபாட்டிற்காகநேற்று அதிகாலை பூசகரால் ஆலயம் திறக்கப்பட்ட வேளை காணிக்கை உண்டியல் உடைக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது.

இதனை அடுத்து பூசகர் முள்ளியவளை பொலிஸாருக்கு தகவல் வழங்கினார்.

உடனடியாக அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் மேற்கொண்ட விசாரணையை அடுத்து மாமூலையைச் சேர்ந்த 18 வயது இளைஞன் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைதானார். இதன்போது பிரஸ்தாப நபரிடம் நடத்தப்பட்ட முதற்கட்ட விசாரணையில், தொடர்ச்சியாக பல்வேறு இந்து மற்றும் கிறிஸ்தவ ஆலயங்களில் வைக்கப்பட்டிருந்த காணிக்கை உண்டியல்களை உடைத்து பணத்தை களவாடியிருந்ததாகவும் அது தொடர்பில் குறித்த ஆலய பரிபாலன சபையினர்களினால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்படாமையால் தனது திருட்டை தொடர்ச்சியாக செய்து வந்துள்ளதாக கூறியுள்ளார்.

இதனால் கைதான சந்தேக நபர் இன்றையதினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-310)




# வயற்காணி பதிவு, விதைப்பு— பட்டியல் பதிவுகள் ஜூலை ஆரம்பம்

உருத்திரபுரம் கமநல சேவை நிலையத்திற்கு உட்பட்ட குஞ்சுப்பரந்தன் விவசாயிகளின் நன்மை கருதி வயற்காணிப் பதிவு ஏக்கர்வரி மற்றும் கமநல வங்கிக்கணக்கு ஆரம்பித்தல் தொடர்பான பதிவுகள் மற்றும் 2016, 2017 ஆகிய ஆண்டுகளுக்கான கால போகத்திற்கான விதைப்பு பட்டியல் பதிவுகள் எதிர்வரும் ஜூலை மாதம் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 7 ஆம் திகதி வியாழக்கிழமை 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய நாட்களில் குஞ்சுப்பரந்தன் நெற்களஞ்சிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பதிவிற்கு விவசாயிகள் வருகை தரும்போது காணி உறுதி அல்லது அனுமதிப்பத்திரம், தே.அ.அட்டை, ஏக்கர் வரியின் முன்னைய காலத்து பற்றுச்சீட்டு ஆகியவற்றையும் தம்முடன் கொண்டு வருமாறு குஞ்சுப்பரந்தன் திட்டக்குழுவினர் அறிவித்துள்ளனர். (2-254)

# பாலத்தின் தடுப்பாணைகளை உடைத்து கூலர் வாகனம் விபத்துக்குள்ளானது



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் நேற்று அதிகாலை யாழ்ப்பாணம் நோக்கி சென்று கொண்டிருந்த கூலர் வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகி மேற்படி பகுதியில் காணப்பட்ட பாலமொன்றின் தடுப்பாணைகளை உடைத்து விபத்துக்குள்ளானது.

இதன்போது வாகனம் சேதமடைந்ததுடன் அதில் பயணித்தவர்கள் எதுவித காயமுமின்றி தெய்வாதீனமாக உயிர் தப்பினர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணையை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டனர். (2-281)

# முகத்துவாரத்துக்கும் புல்மோட்டைக்குமிடையிலான பாலத்தை புனரமைத்து பயணத்தை இலகுபடுத்துக

வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் கொக்கிளாய் முகத்துவாரத்துக்கும் புல்மோட்டைக்கும் இடையிலான பாலத்தை புனரமைப்பு செய்வதற்கு தமிழ் மக்கள் பிரதிநிதிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

வடக்கில் இருந்து திருகோணமலை மாவட்டத்துக்கு பயணிப்பதற்கு இலகுவான வழிகள் இருக்கின்ற போதிலும் அவை சீர்செய்யப்படாமல் இருப்பதால் பொதுமக்கள் பல அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

குறிப்பாக பலமைல் தூரம் சுற்றியே தமது பயணத்தை மேற்கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் வடக்கில் இருந்து திருகோணமலை மாவட்டத்திற்கு கோவில்களை தரிசிப்பதற்காக அதிகளவான பொது மக்கள் சென்று வருகின்றனர். எனவே பொது மக்களின் நன்மை கருதி வெகு விரைவில் குறித்த பாலத்தினை புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஆரம்ப பகுதியில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரனால் குறித்த பாலத்தினை புனரமைப்புச் செய்ய வேண்டும் என கோரி வடக்கு மாகாண சபையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-9)

# கோரைப்புற்கள் நெற்பயிரை மூடி வளர்ந்தமையால் வளர்ச்சிக்குத்தடை

## விவசாயிகள் கவலை

கிளிநொச்சி புதுமுறிப்புக் குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயிகளின் வயல் நிலங்களில் கோரைப் புற்களின் தாக்கம் அதிகமாக காணப்படுவதாக தெரிவிக் கப்படுகின்றது.

பெரு வெள்ளத்தால் ஏற்பட்ட கடுமையான சேதத்தில் இருந்து ஓரளவு தலை நிமிர்ந்த வேளையில் கோரைப் புற்கள் நெற்பயிரை மூடி பயிரின் வளர்ச்சியை தடை செய்துள்ளதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கோரைப்புற்களைக் கட்டுப்படுத்துவதற்கு பல தடவைகள் மருந்துகள் விசிறியும் பலன்கிடைக்கவில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் தற்போது நெற்பயிர்களிடையே காணப்படும் கோரைப்புற்களின் பூக்களை புல்லு வெட்டப் பயன்படுத்தும் இயந்திரக் கருவி மூலம்வெட்டும் நடவடிக்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

இதன்மூலம் சிறந்த விளைச்சல் கிடைக்குமா என இப்பகுதி விவசாயிகள் கேள்வி எழுப்பியுள்ளனர். (2-254)

# 34 விவசாய திட்டங்களுக்கு 47 மில். ரூபா நிதி ஒதுக்கீடு

## கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாய நடவடிக்கைகளுக்காக 47.27 மில்லியன் ரூபா நிதி, 34 திட்டங்களுக்காக கிடைக்கப்பெற்றுள்ளதாக மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்துள்ளார். கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாய நடவடிக்கைகளுக்காக பல்வேறு திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் இந்த ஆண்டில் 34 திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த ஆண்டிலேயே 34 வகையான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு இதற்காக 47.27 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. இந்நிலையில் இந்த ஆண்டின் ஆரம்பத்தில் ஏற்பட்ட கடும் வரட்சி காரணமாக கூடுதலான செயற்பாடுகள் ஆரம்பிக்க முடியாமல் போனது. தற்போது இத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

நெற்செய்கையில் இயந்திரப்பாகங்களை அதிகரிக்கும் வகையில் 4 நெல் நாற்று நடும் இயந்திரங்கள், அதே போல் களைகளை கட்டுப்படுத்தும் வகையில் ஒன்பது களை கட்டுப்படுத்தும் கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படவுள்ளன. மறுவயற் பயிர்களை மேற்கொள்ளும் பொருட்டு நிலக்கடலை, பயறு உள்ளிட்ட பயிர்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை பழப்பயிர்கள் மற்றும் வாழைச் செய்கை என்பவற்றை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அவர்மேலும் தெரிவித்துள்ளார். (2)








புகைத்தல் மற்றும் போதைப் பொருள் பாவனைக்கு எதிராக நேற்று முன்தினம் மு/கலைமகள் வித்தியாலய மாணவர்கள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். இதன் போது மது என்ற அரக்கனை மாநிலத்தில் அழிப்போம். குடும்ப மரத்தை வேரோடு சாய்க்கும் குடியை அழிப்போம், கூடி வாழ்வோம் ஆகிய வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தம்முடன் ஏந்தியிருந்தனர்.

(படங்கள் -வற்றாப்பளை செய்தியாளர்)

# யுத்த வெற்றிக்காக உழைத்த படையினரை கைவிடமாட்டேன்

## ஜனாதிபதி மைத்திரி உறுதி

(கொழும்பு)

**ஓய்வுபெற்ற அல்லது சேவையிலுள்ள யுத்த வெற்றிக்காக உழைத்த படைவீரர்கள், உதவிகள் அற்றவர்களாக மாறுவதற்கு தாம் இடமளிக்கப் போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**



பாதுகாப்பு தரப்பினரின் பலம் மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்கு தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஹிங்குராங்கொடை ராஜரட்ட வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற யுத்த வெற்றிவீரர்களுக்கான விருசர சிறப்பு சலுகை அட்டைகளை வழங்கும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும் போது அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

பாதுகாப்பு தரப்பினரை பலவீனப்படுத்தும் வகையில் பாதுகாப்பு முகாம்களை அரசாங்கம் அகற்றுவதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டையும் ஜனாதிபதி நிராகரித்துள்ளார்.

பாதுகாப்பு தரப்பினரின் பலவீனம் காரணமாகவே சாலாவ படைமுகாமிலுள்ள ஆயுத களஞ்சியசாலை வெடித்ததாக தலைவர் ஒருவர் கூறியுள்ளதையும் ஜனாதிபதி நினைவுகூர்ந்துள்ளார்.

எனினும் இவ்வாறான வெடிச் சம்பவம் முதல் தடவையாக இடம்பெறவில்லை என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இதனை விட பாரிய அளவான வெடிச் சம்பவங்கள் இடம்பெற்றதாக தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் பீல்ட் மாஷல் சரத் பொன்சேகா, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன, நாடாளுமன்ற உறுப்பினர்களான நாலக்க கொலன்னே, பாதுகாப்பு செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஏ.பீ.பீ.கித்சிறி, முப்படைகளின் தளபதி உள்ளிட்ட பலர் பங்கேற்றிருந்தனர். (இ-10)

# பிக்கு ஒருவர் உள்ளிட்ட மூவர் விளக்கமறியலில்

வெலிமடை, திவுரும்பொல ரஜமகா விகாரையிலுள்ள பழைமை வாய்ந்த அரச மரத்தை வெட்டி பலகை அறுத்த விகாராதிபதி உட்பட மூவர் கடந்த ஏப்ரல் 29ஆம் திகதி கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இவர்களை நேற்று முன்தினம் வெலிமடை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதை தொடர்ந்து எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 06ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வெலிமடை நீதவான் தம்மிக்க ராமநாயக உத்தரவிட்டுள்ளார்.

இராமாயண இதிகாச வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி இராவணனால் இலங்காபுரிக்கு கடத்தி வரப்பட்ட சீதை மீண்டும் அயோத்திக்கு செல்ல முன்பு தான் கற்புடன் இருப்பதை நிரூபிப்பதற்காக தீக்குளித்ததாக இதிகாசங்கள் கூறுகின்றன.

இவ்வாறு சீதை தீ குளித்த இடமாக நம்பப்படுகின்ற இடமே இவ் 'திவுரும்பொல' விகாரையாகும்.

இவ்வாறு வரலாற்று சிறப்பு மிகு விகாரையிலுள்ள போதி மரத்தைவெட்டிய குற்றத்திற்காகவே இவ் விகாராதிபதி பிக்கு உட்பட மேலும் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

உணபானே சந்திர விமல தேரர் உட்பட மூவருக்கே இவ்வாறு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

வெலிமடை பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-10)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## விஷ்ணுகிராந்தி/ விஷ்ணுகாந்தி



**Botanical Name-** Evolvulus alsinoides
**Family-** Convolvulaceae
**Sinh:** Vishnukironthi

இதன் பூக்கள் கார்மேக வண்ணனுடைய நிறத்தைப் பெற்றிருப்பதால் விஷ்ணுகாந்தி என்ற பெயர் வந்திருக்கலாம்.

இது சுமார் 15, 20 செ.மீ தூரம் வரைக்கும் தரையோடு ஒட்டிப் படரும். கணுக்களில் வேர் விடுவதில்லை. சுமார் 10 மி.மீ நீளமும் 7.மி.மீ அகலமுள்ள நீண்ட விருத்த வடிவமான சிறிய இலைகள் கொடியில் வரிசையாக மாறி மாறி அமைந்துள்ளன. இலை, கொடி ஆகியவற்றில் மெல்லிய பஞ்சு போன்ற சுணைகள் உண்டு. சிறிய வட்ட வடிவான பூக்கள். நீலமேக நிறமுடையதாகவும் மிக மெல்லியதாகவும் இருக்கும். இரண்டு கடுகளவுள்ள காயினுள் சுமார் 4,5 விதைகளுண்டு. இது ஓராண்டுப் பயிராகும். மணற்பாங்கான இடத்தில் அதிகமாக இதன் பரம்பலைக்காண முடியும். செம்மண், மணல் கலப்புள்ள எல்லா இடங்களிலும் விதைகளைத் தூவிப் பயிரிடலாம். இதில் இருவகையுண்டு. வெள்ளை நிறப் பூக்களைக் கொண்ட விஷ்ணுகிராந்தி மிகவும் அரிதாகவே பரம்பிக் காணப்படும்.

**மருத்துவப் பயன்கள்**

**விடாக்காய்ச்சலுக்கு விஷ்ணு கிராந்தி என்பது பழமொழி.**

பொதுவாகச் சித்தமருத்துவத்தில் வைரஸ் தொற்றுக்களால் வரும் காய்ச்சலுக்கு பயன்படும் முக்கிய மூலிகைகளுள் விஷ்ணு கிராந்தி முக்கியமானது. இதன் முழுக் கொடியுடன் (வேருடன் கூடிய ) கருந்துளசியிலை, நிலவேம்பு சேர்த்து ஒவ்வொன்றும் சம அளவு எடுத்து 4 பங்கு நீர்விட்டு 1/4 பங்காக வற்றக் குடிநீர் காய்ச்சி 30-60 மில்லி அளவு காலை, மாலை அருந்த சிறுநீர் நன்கு வெளிப்பட்டு, வியர்வையும் பெருகிக் காய்ச்சல் குறையும். அத்துடன் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கும். வேருடன் இக் கொடியை பிடுங்கி நன்றாகக் கழுவி சீரகம் சேர்த்தரைத்து பாலில் உட்கொள்ள (5கிராம் அளவு) நரம்புத் தளர்ச்சி நீங்கும்.

சில கிராமங்களில் இன்றும் சிறுவர்களுக்கு ஏற்படும் காய்ச்சலுக்கு கைம்மருந்தாக இதனைக் குடிநீரிட்டு கொடுப்பது வழக்கம்.

அரைக் கைப்பிடியளவு விஷ்ணு கிராந்தியுடன் மூன்று வெள்ளைப் பூண்டு பற்கள், அரைத் தேக்கரண்டி அளவு சீரகம் சேர்த்து மை போல அரைத்து தினமும் ஒரு வேளை 5 கிராம் அளவு 20 நாட்கள் கொடுத்துவர உடலில் வீரிய விருத்தி உண்டாகும்.

சுத்தம் செய்த விஷ்ணுகிராந்தி இலைகள் ஒரு கைப்பிடியளவு எடுத்து ஒரு மண் சட்டியில் போட்டு அடுப்பில் வைத்து வதக்கி 200 மில்லி அளவு தண்ணீர்விட்டு பாதியளவிற்கு வற்றக் காய்ச்சிய குடிநீரை காலை, மாலை கொடுத்துவர வயிற்றுப் போக்கு நிற்கும்.

இதன் முழுக் கொடியுடன் துளசியும் சேர்த்துக் குடிநீர் செய்து கொடுத்துவர செரியாமையோடு சேர்ந்த காய்ச்சல் நீங்கும். 50 கிராம் இலைகளை தானிய மாவுடன் சேர்த்து அடை தயாரித்து புசித்து வரினும் உடல் வீரிய விருத்தியுண்டாகும்.

20கிராம் விஷ்ணுகிராந்தியை ஒன்றிரண்டாக இடித்து ஒரு மட்கலயத்தில் போட்டு 500 மில்லி நீர்விட்டு 1/4 பங்காகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி 30-60 மில்லி தினமும் இருவேளை பெரியவர்கட்கு கொடுக்க இருமல் , கசம் தீரும். இதைப் பசுப்பாலில் கலக்கிக் கொடுக்க கண்களுக்கு பிரகாசம் கொடுக்கும்.

விஷ்ணுகிராந்திப் பொடியை , தினமும் 2 கிராம் அளவுக்கு வெந்நீரில் கலந்து குடித்தால் குழந்தைப் பேறு உண்டாகும்.

விஷ்ணுகிராந்தியுடன் சீரகத்தைச் சேர்த்து அரைத்து 5 கிராம் அளவு 200 மில்லி பாலில் கலந்து குடித்தால் நரம்புத் தளர்ச்சி குணமாகும்.

விஷ்ணுகிராந்தி, கருந்துளசி இலை,நில வேம்பு,கொத்துமல்லி

ஒவ்வொன்றும் சம அளவு எடுத்து 8 பங்கு நீர்விட்டு 1/8 பங்காக சுண்டக் காய்ச்சி 30-60 மில்லி அளவு 6 மணிக்கு ஒரு தடவை கொடுத்து வர விடாக் காய்ச்சல் தணியும்.

விஷ்ணுகிராந்தியை தினமும் 2 கிராம் அளவுக்கு சாப்பிட்டு வந்தால் வெட்டைச் சூடு தணியும். வெள்ளை சாய்தல் உள்ள பெண்கள் இதனைப் பயன்படுத்தலாம்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

விஷ்ணுகிராந்தி, சுக்கு, மிளகு திப்பிலி சம அளவாகச் சேர்த்து பொடி செய்து தினமும் 2 கிராம் அளவுக்கு சாப்பிட்டு வர சளி இருமல், கோழைக்கட்டு போன்றவை குணமாகும்.

விஷ்ணு கிராந்திச் சாற்றில் சீரகத்தை ஒரு மண் சட்டியில் போட்டு ஊறவைத்து வெயிலில் வைக்க சாறு ஒன்றாக சீரகத்தில் சுவறி உலர்ந்ததும் பொடித்து அரித்து வைத்துக் கொள்ள வேண்டும். 1-2 கிராம் அளவு வெந்நீரில் அருந்த வயிற்றுப் புண், வெள்ளை சாய்தல் , உடல் உஷ்ணம் நீங்கும்.

விஷ்ணுகிராந்தி , வேப்பம் பட்டை, சுக்கு சேர்த்து மேற் கூறிய விதிப்படி குடிநீர் காய்ச்சி 30-60 மில்லி எடுத்துவரினும் காய்ச்சல் தணியும்.

# சூழலியல் அதிகாரிகள் இருக்கிறார்களா?

(கொழும்பு)

**நாட்டில் இடம்பெறுகின்ற சுற்றுச்சூழல் அழிவுகளை பார்க்கும் போது சூழலியல் அதிகாரிகள் இருக்கிறார்களா? என சந்தேகம் ஏற்படுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி மைத்திரி கேள்வி



கொழும்பில் நேற்று இடம்பெற்ற பிரதேச சூழலியல் அதிகாரிகளின் மாநாட்டில் இது தொடர்பாக சந்தேகம் வெளியிட்டஜனாதிபதி மாவட்ட ரீதியாக இடம்பெறும் சூழல் அழிவுகளை ஜனாதிபதி ஊடகப் பிரிவு ஊடாக ஒளிப்பதிவு செய்து மாவட்ட சூழல் குழு கூட்டத்தில் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

இவ்வாறான தரவுகள் மூலம் மாவட்டத்தில் இடம்பெறும் சூழல் பாதிப்புக்கள் தொடர்பாக அதிகாரிகளை தெளிவூட்டுவதாகவும் சூழலைப் பாதுகாப்பதில் சூழலியல் அதிகாரிகள் மீது பாரிய பொறுப்பு காணப்படுவதாகவும் தெரிவித்தார். (இ-10)

## விவாதப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம் கலட்டிச் சந்திக்கு அருகே உள்ள சுகதாமம் மண்டபத்தின் ஓராண்டுப்பூர்த்தியை முன்னிட்டு க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு இடம்பெறும் விழுமியங்கள் பற்றிய விவாதப் போட்டியில் நேற்று 28.06.2016 நடைபெற்ற விவாதப் போட்டி முடிவுகள் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாம் சுற்று

போட்டி 1

யா/இராமநாதன் கல்லூரி (215 புள்ளிகள்),மு/முல்லைத்தீவு மகாவித் தியாலயம் (192 புள்ளிகள்)

போட்டி 2

யா/ காரைநகர் இந்துக்கல்லூரி (249 புள்ளிகள்), யா/கனகரத்தினம் ம.ம.வி (225 புள்ளிகள்)

இரண்டாம் சுற்று

தலைப்பு:சிறந்த நினைவாற்றலுக்குக் காரணம் மனநிம்மதியா? மன மகிழ்ச்சியா?

யா/இராமநாதன் கல்லூரி (232 புள்ளிகள்),யா/காரைநகர் இந்துக் கல்லூரி (246 புள்ளிகள்)

மூன்றாம்சுற்றுக்குதெரிவாகியஅணி யா/ காரைநகர் இந்துக்கல்லூரி

நடுவர்கள்

பிரதான நடுவர்கள்:ஓய்வு பெற்ற அதிபர் சிற்றம்பலம் துரைராசா

நடுவர்: 2 கரவெட்டி பிரதேசெயலர் ச.சிவஸ்ரீ

நடுவர் 3: மட்டக்களப்பு பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையங்களின் மாவட்ட கூட்டிணைப்பாளர் பிரம்மகுமார் சுரேஷ்

திங்கட்கிழமை 27.06.2016 இடம்பெற்ற போட்டிகளின் நடுவர்கள்.

பிரதான நடுவர்: டாக்டர் எஸ். சேதுராஜா PH.D (Edu) ஓய்வுபெற்ற SLEASஅதிபர் நெல்லியடி மத்திய கல்லூரி.

நடுவர் 2: டாக்டர் சிவசங்கர் (உளநலத்துறை)

நடுவர் 3: மட்டக்களப்பு பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையங்களின் மாவட்ட கூட்டிணைப்பாளர் பிரம்மகுமார் சுரேஷ்

இன்றைய போட்டி விபரங்கள் (29.06.2016)

காலை 9.00-1.00

போட்டி 1 ஒத்துழைப்பைப் பெற்றுத்தருவது ஒழுக்கமா? தாராளமனமா?

போட்டி 2 ஒற்றுமைக்கு இடையூறாவது குறுகிய மனப்பான்மையா? அதிகார மனோபாவமா? (இ-5)

## பயணிகளுக்கு பல தரப்பட்ட சிரமங்கள்

(கரணவாய்)

வடக்கு மாகாண தனியார் பேருந்துகள் நேற்று முன்தினம் மேற்கொண்ட பணிப்புறக்கணிப்பு காரணமாக வடமராட்சிப் பகுதியிலுள்ள பயணிகள் பல தரப்பட்ட சிரமங்களை எதிர்நோக்கியதாக தெரிவிக்கப்பட்டது.

தனியார் பேருந்து உரிமையாளர் ஒன்றியத்திற்கும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குமிடையில் கையெழுத்திடப்பட்ட 60:40எனும் நேர அட்டவணையை உடனடியாக அமுல்படுத்தப்பட வேண்டும் என தனியார் மற்றும் இ.போ.ச. பேருந்துகள் பொதுவான பேருந்து நிலைய தரிப்பிடத்தில் இருந்து சேவையை வழங்க வேண்டும் என்ற இரு கோரிக்கைகளை முன்வைத்து வடமாகாண தனியார் பேருந்து உரிமையாளர்களினால் நேற்று முன்தினம் மாகாணம் தழுவிய பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

இத்தன்காரணமாக வடமாகாணத்தில் உள்ள பயணிகள் பலரும் பல தரப்பட்ட சிரமங்களை எதிர்நோக்கினர். (இ-5-60)

# கிராமங்களில் பொருளாதாரம், கல்வி, ஒழுக்கம் என்பவற்றை கட்டியெழுப்புதல்

எமது நாட்டில் 80% ஆனவை கிராமங்களாகும்.வடக்கு,கிழக்கு மாகாணங்களும் அதற்கு விதிவிலக்கல்ல.இருந்தும் மூன்று தசாப்த போரினால் செழிப்பாகவிருந்த எமது கிராமங்கள் பற்றைக்காடுகளாக, வனாந்தரங்களாக மாறின.அன்று கிராமங்கள் செழிப்பாக இருந்தமைக்கு இயற்கை வளத்தை பாதுகாத்தமை, விவசாயம், கல்வி, ஒழுக்க விழுமியங்கள் என்பன காரணமாக விருந்தன. கிராமங்களில் விவசாயிகள் உணவுப்பயிர், பணப்பயிர் என்பவற்றை பயிரிட்டார்கள்.சிறு சிறு கைத்தொழில்கள் மற்றும் பட்டறைத் தொழில்களை மேற்கொண்டார்கள். மிகச்சிறந்த ஆரம்பப் பாடசாலைகளும் இடைநிலைப் பாடசாலைகளும் இருந்தன. நகரங்களில் இருந்த மிசனரிப் பாடசாலைகளுக்கு இணையான கல்லூரிகள், கிராமங்களில் அரசினாலும் சமய நிறுவனங்கள், கல்விமான்கள் போன்றோரினால் தோற்றுவிக்கப்பட்டன. கிராமங்களின் வளர்ச்சியில் சனசமூக நிலையங்கள் காத்திரமான பங்கை வகித்தன. சனசமூக நிலையங்கள் வாசிப்புப்பழக்கம், கிராமிய விளையாட்டுக்கள், கிராமிய அபிவிருத்தி போன்றவற்றை ஊக்குவித்தன. கோவில்க்ள் இயல்,இசை,நாடகம் போன்ற கலைகளை ஊக்குவித்தன. அன்று இரவிரவாக எத்தனை நாட்டுக்கூத்துக்கள், அரிச்சந்திரன் நாடகம், நல்லதங்காள் நாடகம் பார்த்திருப்போம். கிராமங்களுக்கு இந்திய அறிஞர்களை வரவழைத்து திருக்குறள் மாநாடு போன்ற மாநாடுகளை ஊர்ப் பெரியோர்கள் நடத்தினார்கள். கிராமங்களில் ஆலயங்களுக்கு பக்கத்தே நீர்த்தடாகங்கள், குளங்கள் இருந்தன. இதனால் அனைவரும் நீந்தக் கற்றுக்கொண்டனர்.

1983 கலவரம், அதனைத் தொடர்ந்து நடைபெற்றஉள்நாட்டுமோதல் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்தார்கள்.இதனால் வடக்கு,கிழக்கில் பாரம்பரியமான, செழிப்பான கிராமங்கள், ஆள் அரவமற்ற பற்றைக் காடுகளாக, வனாந்தரங்களாக மாறின. 2009 இல் போர் முடிவுற்ற பின்னர் மக்கள் படிப்படியாக குடியேறத் தொடங்கினர். இப்பொழுதும் மீளக்குடியேறுவதற்காக போராடிக் கொண்டிருக்கின்றார்கள். தற்பொழுது கிராமங்களில் மிகக்குறைவான மக்களே வாழ்கின்றார்கள். குறிப்பிட்ட தொகையினர் நகரங்களிலும் ஓரளவு வசதியான இடங்களிலும் நிரந்தரமாக குடியேறி விட்டார்கள். இன்னும் அதிகமானோர் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து விட்டார்கள். போருக்கு முன்னர் இருந்த கிராமங்களில் மக்கள் சிக்கனம், சுயசார்பு, விடாமுயற்சி நிறைந்தவர்களாக இருந்தார்கள். தற்போதுள்ள எமது கிராம மக்கள் நிவாரணம், வெளிநாட்டுப்பணம்,குறுக்கு வழியில் பணம்தேடல் என்பவற்றிலேயே தங்கியுள்ளார்கள். இந் நிலையில் கிராமங்களில் விவசாய மேம்பாடு மற்றும் சுயதொழில் முயற்சிகளுக்காக அரசும் அரசசார்பற்ற நிறுவனங்களும் பல்வேறு உதவிகளையும் ஊக்குவிப்புக்களையும் செய்து வருகின்றன. இருந்தும் வடமாகாணக்கிராமங்களில் ஆள் வீத வருமானம் ஏனைய மாகாணங்களின் ஆள் வீத வருமானத்தை விட குறைவாகவேயுள்ளது.

ஒரு கிராமத்தின் வளர்ச்சிக்கு கல்வி இன்றியமையாதது. தெல்லிப்பழை ஜூனியன் கல்லூரி, மகாஜனக்கல்லூரியால் அக்கிராமமே வளர்ந்தது. இவ்வாறாக ஊர் தோறும் அமைந்த பாடசாலைகளால் அக் கிராமங்கள் வளர்ந்தன. ஆகையால் போரினால் இவ்வாறான பாடசாலைகள் இடம்பெயர்ந்தன. இடம்பெயர்ந்த பாடசாலைகளில் தரமான கல்விகள் பேணுவதில் அதிபர், ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்கள். போர்க் காலத்திலும் மாணவர்கள் சாதனை படைத்தார்கள். போர் முடிவுக்கு வந்த பின்னர் பாடசாலைகளின் பௌதீக வளங்கள் அதிகரித்தன. பாடசாலைகள் பின்னர் நேயப் பாடசாலைகள் ஆவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பாடசாலைகளுக்கான உள்ளீடுகள் அதிகரிக்கப்பட்டன. ஆனால் வெளியீடுகளோ எதிர்பார்த்த அளவுக்கு அதிகரிக்கவில்லை. இதற்கான காரணங்களாக வெளிநாட்டு மோகம், வெளிநாட்டுப் பணம், விழாக்கள், பாராட்டுக்கள் அதிகரிப்பு, படிப்பதில் ஊக்கமின்மை, நாட்டமின்மை, திருமணத்திற்காக பெண் ஆசிரியர்களின் புலம்பெயர்வு என்பவற்றைக் குறிப்பிடலாம். இவற்றை போக்குவதற்காக பல்வேறு பரிகார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இன்று கிராமங்களில் ஒழுக்க விழுமியங்கள் சீர்குலைந்துள்ளன. அண்மைக்கால சம்பவங்கள் இவற்றுக்கு கட்டியம் கூறுகின்றன. குறிப்பாக கிராமங்களில் பாலியல் வன்புணர்வுகள், கொலைகள், கொள்ளைகள், குழுச்சண்டைகள் மேலோங்கியுள்ளன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு என்றுமில்லாதவாறு நீதிபதிகள் சட்டத்தைப் பிரயோகிப்பது பாராட்டுக்குரியது. அத்தோடு கிராமங்கள் தோறும் சட்டம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். கிராமங்களில் ஆலயங்கள் யாவும் புனரமைக்கப்பட்டு ஏட்டிக்குப்போட்டியாக கோபுரங்கள் வானளாவ உயரும் அளவுக்கு மனித மாண்புக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது போதுமாக இருப்பதில்லை. கிராமங்களை நோக்கி உயர்கல்வி நிறுவனங்களை நகர்த்த வேண்டும். கிராமங்களில்உள்ள இயற்கைவனப்புமிக்க இடங்களைப் பாதுகாத்து மக்கள் தமது ஓய்வைக் கழிக்கின்ற இடங்களாக மாற்ற வேண் டும். ஆலயங்கள், சனசமூக நிலையங்கள் தோறும் பட்டிமன்றங்கள், விவாதங்கள் என்பவற்றை நடத்தி இளைஞர்கள், யுவதிகள் மத்தியில் சிந்தனைக் கிளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். கிராமங்கள் தோறும் தொண்டர் படைகள், விழிப்புக்குழுக்களை உருவாக்கி கிராமங்களைப் பாதுகாக்க வேண்டும்.

கிராமங்களில் வேலை வாய்ப்பின்மை பாரிய பிரச்சினையாகும். க.பொ.த (உ/த) சித்தியடைந்தோர், தொழில்நுட்பம் கற்றோர், பட்டதாரிப் பட்டம் பெற்றோர் அனைவரும் அரசாங்கத்திடம் வேலையை எதிர்பார்க்கின்றனர். அன்று எமது கிராமங்களில் ஆரம்ப இடைநிலைக்கல்வியுடன் நகரங்களை நோக்கி சென்றோர் இன்று பெருந்தொழில் அதிபர்களாகவுள்ளனர்.

எனவே கற்றோரும் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடத்தக்க வகையில் மாகாண சபையும் புலம்பெயர் அமைப்புக்களும் வழிகாட்ட வேண்டும். பொதுவாக நுகர்வுப்பொருளா தாரம் சார்ந்த வர்த்தக நிறுவனங்களை விட உற்பத்தி சார்ந்த முயற்சிகளை ஆரம்பிப்பதே சிறந்தது. எமது கிராமங்களின் இயற்கை வளங்கள் மூலப்பொருட்களுக்கு ஏற்ற உற்பத்திப் பொருட்களைக் கண்டுபிடிக்க வேண்டும். இவ்வாண்டு தென்மராட்சிக் கல்வி வலயம் நடத்திய வர்த்தக கண்காட்சியில் தென்மராட்சியில் உள்ள தொழில் முயற்சிகளையும் அவற்றின் உற்பத்திப் பொருட்களையும் பார்க்கக் கூடியதாகவிருந்தமை நல்லதொரு வழிகாட்டலாகும். எனவே கிராமங்களின் பொருளாதாரம், கல்வி, ஒழுக்கம் என்பவற்றை ஒன்றிணைத்து செயற்படுவோமாக.

பி.முத்துலிங்கம்
ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி.

# க.பொ.த.(உ/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

★ வலம்புரி கல்விப்பிரிவு ★

## கணக்கீடு பகுதி-II

Teacher: K.B. KAJAN, B.COM (Jaf), H.N.Dip in-Acc (ATI), Dip in Edu (OUSL), M.Com (Acc), (St. Partick's College, Jaffna)

01).வரையறுத்த பாத்திமா பொதுக்கம்பனியின் புத்தகங்களில் இருந்து 2015.03.31 இல் எடுக்கப்பட்ட மீதிகள் பின்வருமாறு,

| | ரூபா '000' | ரூபா '000' |
|---|---|---|
| நடைமுறையல்லாச் சொத்துக்கள்- குறிப்பு 01 | | 1250 |
| இருப்புக்கள் | 45 | |
| வியாபார வருமதிகள் | 60 | |
| காசும் காசுக்கு சமனானவை | 45 | 150 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 1400 |
| **கூறப்பட்ட மூலதனம்** | | |
| சாதாரண பங்கு மூலதனம் (20000 சாதாரண பங்குகள்) | | 800 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | 200 | |
| பொது ஒதுக்கம் | 100 | |
| நிறுத்தி வைத்த வருமானம் | 100 | 400 |
| 10% தொகுதிக் கடன் | | 120 |
| வருமான வரி ஏற்பாடு (2014/2015) | | 40 |
| வியாபாரச் சென்மதிகள் | | 40 |
| உரிமையும் மொத்தப் பொறுப்புக்களும் | | 1400 |

2016.03.31 இல் முடிவடைந்த நிதியாண்டு தொடர்பாக கம்பனியின் காசுப்பாய்ச்சல்கள் பின்வருமாறு காணப்பட்டது.

| பெறுவனவுகள் | ரூபா '000' |
|---|---|
| முதலீட்டு வருமானம் | 20 |
| வியாபார வருமதியாளரிடம் பெற்றவை | 860 |
| பெற்ற வாடகை | 45 |
| வங்கிக் கடன் பெற்றது | 120 |
| | 1045 |
| | |
| **கொடுப்பனவுகள்** | |
| முதலீடுகள் | 200 |
| மோட்டார் வாகனம் கொள்வனவு | 260 |
| கணனி இயந்திரம் கொள்வனவு | 100 |
| தொகுதிக்கடன் வட்டி செலுத்தியது | 5 |
| செலுத்திய பங்கு இலாபம் | 48 |
| | |
| **செலுத்திய வருமான வரி** | |
| 2014/15- ஆண்டுகளுக்கு | 40 |
| 2015/16- ஆண்டுகளுக்கு | 30 |
| வியாபாரச் சென்மதியாளருக்கு செலுத்தியது | 160 |
| நிலைய நிர்வாகக் கிரயம் | 120 |
| விற்பனை விநியோகக் கிரயம் | 40 |
| இயக்குநர் சம்பளம் | 54 |
| | 1057 |

மேலதிக தகவல்கள்:

01. 2016.03.31 இல் உள்ள இருப்புக்களின் கிரயம் ரூபா 80,000 ஆகும். இதனுள் உள்ள பங்கியுள்ள ரூபா 15000 கிரயம் கொண்ட பொருட்கள் அதனை ரூபா 3000 விற்பனைச் செலவுடன் ரூபா 16500 இற்கு விற்பனை செய்ய முடியுமென மதிப்பிடப்பட்டது.

02. நிலைய நிர்வாகக் கிரயம் என்பதனுள் உள்ளடங்கியுள்ள ரூபா 60,000 காப்புறுதிக் கொடுப்பனவிற்குரியதாகும். இக்காப்புறுதி கொடுப்பனவானது 2017.06.30 இல் முடிவடையும் 24 மாதங்களுக்குரியதாகும். எஞ்சியநிலையநிர்வாகக்கிரயத்தினுள்கணக் காய்வுக் கட்டணம் ரூபா 36000, மின்சாரம் ரூபா 24000 என்பன உள்ளடங்கியுள்ளது.

03.இயக்குநருக்கான சம்பளக் கொடுப்பனவானது ஊழியச் சேமலாப நிதிப் பங்களிப்பு (EPF) ஊழியரின் 10% கழிக்கப்பட்ட தேறிய சம்பளமாகும். நிறுவனமானது மொத்தச் சம்பளத்தில் 15% ஊழியர் சேம லாப நிதியத்திற்கு (EPF) பங்களிப்புச் செய்கின்றது. இது தொடர்பாக எப்பதிவும் பதியப்படவில்லை.

04.கொள்வனவுகள், விற்பனைகள் யாவும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப் பட்டவை ஆகும்.

05. 2016.03.31 இல் உள்ள வியாபார வருமதியாளர், வியாபாரச் சென்மதியாளர் மீதிகள் முறையே ரூபா 36000, ரூபா 42000 ஆகும்.

06.தரப்பட்டுள்ள வியாபார வருமதிகள் இறுதி மீதியில் (2016.03.31) இருந்த ரூபா 6000 ஐ அறவிட முடியாக் கடனாகப் பதிவழிப்புச் செய்வதுடன் மிகுதி வியாபார வருமதிகளுக்கு 10% இற்கு ஐயக்கடனுக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

07. 2015.03.31 இல் உள்ள நடைமுறை அல்லாத சொத்து விபரம் வருமாறு,

குறிப்பு 01

ரூபா '000'

| | காணி | கட்டடம் | மோட்டார் வாகனம் | கணனி இயந்திரம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| கிரயம் | 250 | 200 | 850 | 250 | 1550 |
| ஏற்பாடு | - | (60) | (160) | (80) | (300) |
| முன்கொண்டு செல்லும் தொகை | 250 | 140 | 690 | 170 | 1250 |

◆ 2012.04.01 இல் ரூபா 400,000 இற்கு கொள்வனவு செய்த மோட்டார் வாகனம் பரிமாற்றாகக் கொடுத்து 2015.10.01 இல் ரூபா 540,000 கிரயத்தில் புதிய மோட்டார் வாகனம் கொள்வனவு செய்யப்பட்டது. இதற்காக செலுத்திய காசுக்கொடுப்பனவானது பதியப்பட்டதை தவிர வேறு எப்பதிவுகளும் செய்யப்படவில்லை.

◆ 2016.03.31 இல் காணியின் தற்போதைய சந்தை மதிப்பீட்டின்படி பெறுமதியான ரூபா 350,000 ஆக மதிப்பிடப்பட்டு கணக்குகளில் காட்டத் தீர்மானிக்கப்பட்டது.

◆ கணனி இயந்திரக் கொள்வனவு 2015.07.01 இல் இடம்பெற்றது.

நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கு பின்வருமாறு கிரயத்தின் மீது பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.

◆ கட்டடம் ஆண்டொன்றிற்கு 5%
◆ மோட்டார் வாகனம் ஆண்டொன்றிற்கு 10%
◆ கணனி இயந்திரம் ஆண்டொன்றிற்கு 10%

08.காசுப் பெறுவனவில் காட்டப்பட்ட வங்கிக் கடனானது வருடாந்தம் 12% வட்டிக்கு 2015.10.01 இல் பெறப்பட்டது.

09.2014/2015 இற்கான வருமான வரியானது ஏற்றுக்கொள்ளப்பட்டது முழுமையாக செலுத்தப்பட்டது. 2015/2016 இற்கான வருமான வரி ரூபா 160,000 ஆக மதிப்பிடப்பட்டது.

10.நிதியாண்டின் இறுதியில் பொது ஒதுக்கத்திற்கு ரூபா 30 000 ஐ மாற்றுதல் வேண்டும்.

வேண்டப்படுவது: வரையறுத்த பாத்திமா பொதுக்கம்பனியின்

1.2016.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுத்தி வைத்த வருமானக் கணக்கு, பொது ஒதுக்கக் கணக்கு, மீள் மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கு

2.2016.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று (பிரகரிப்பதற்கேற்ற முறையில் குறிப்புக்கள் உட்பட)


3.2016.03.31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று

4.2016.03.31 முடிவடைந்த ஆண்டிற்கான நேர் முறையிலான காசுப்பாய்ச்சல் கூற்று.

02)

(அ) வரையறுக்கப்பட்ட சூர்யா பொதுக்கம்பனி 'M' என்ற பொருளை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றது.

இந்நிறுவனத்தின் இப்பொருள் தொடர்பான மாதாந்த விற்பனைகள் இலாபம்/நட்டம் சார்கின்ற எண்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட இலாப அளவு வரைபடம் கீழே தரப்பட்டுள்ளது.




◆ அலகொன்றிற்கான விற்பனை விலை 200

வேண்டப்படுவது

1.சமப்பாட்டு புள்ளியில் விற்பனைப் பெறுமதி 2.மொத்த நிலையான கிரயம்

3.அலகொன்றிற்கான மாறும் கிரயம் 4.பாதுகாப்பு எல்லை (அலகுகளில்)

5. ரூபா 110000 இலாபம் பெற விற்பனை செய்யவேண்டிய அலகொன்றின் விற்பனை விலை (எதிர்பார்த்த விற்பனை அலகுகள் 3000 எனக்கொள்க)

ஆ) 3:2 என இலாப நட்டங்களைப் பகிரும் அல்பா, பீற்றா என்போரின் பங்குடைமை வியாபாரத்தின் 2015.04.01 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

| நடைமுறையல்லாத சொத்துக்கள் | குறிப்பு | ரூபா '000' | ரூபா '000 |
|---|---|---|---|
| ஆதனங்கள், பொறி, உபகரணங்கள் | 1 | | 5400 |
| | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| சரக்கிருப்பு | | 500 | |
| வியாபார வருமதிகள் | 2 | 950 | |
| காசும் காசுக்கு சமனானவையும் | | 100 | 1550 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | | 6950 |
| **உரிமையும் பொறுப்புக்களும்** | | | |
| மூலதனக் கணக்கு- அல்பா | | 1960 | |
| பீற்றா | | 1740 | 3700 |
| நடைமுறைக் கணக்கு- அல்பா | | 40 | |
| பீற்றா | | 20 | 60 |
| **நடைமுறை அல்லாப் பொறுப்புக்கள்** | | | |
| வங்கிக்கடன் | | | 1910 |
| | | | |
| **நடைமுறைப்பொறுப்புக்கள்** | | | |
| வியாபாரச் சென்மதிகள் | | 1060 | |
| அட்டுறுச் செலவுகள் | | 220 | 1280 |
| உரிமையும் மொத்தப் பொறுப்புக்களும் | | | 6950 |

**குறிப்புக்கள் தொடர்பானவை:**

(ரூபா '000')

| (குறிப்பு 01) | கிரயம் | ஏற்பாடு | தேறியது (முன்கொண்டு செல்லும் பெறுமதி) |
|---|---|---|---|
| காணி, கட்டடம் | 2000 | (300) | 1700 |
| மோட்டார் வாகனம் | 3600 | (400) | 3200 |
| தளபாட உபகரணங்கள் | 600 | (100) | 500 |
| | .6200 | (800) | 5400 |

(குறிப்பு 02) (ரூபா '000')

| | |
|---|---|
| வியாபார வருமதிகள் | 1000 |
| (-) ஐயக்கடன் ஏற்பாடு | (50) |
| | 950 |

(குறிப்பு 03)

ஊழியர்சேமலாபநிதிக்கான சென்மதி ரூபா 10000 அட்டுறுச் செலவுகளில் உள்ளடங்கியுள்ளது.

மேலதிக தகவல்கள்:

01)2015.04.01 இல் சிவி என்பவர் பங்காளராக சேர்த்துக் கொள்ளப்பட்டார். இதன்போது பங்காளரிடையே பின்வரும் உடன்பாடு ஏற்பட்டது.

◆ சிவி பங்காளராக சேரும் போது ரூபா 800 000 காசாகவும் ஒரு மோட்டார் வாகனத்தை அதன் ஒப்புக்கொள்ளப்பட்ட விலை ரூபா 200 000 இலும் பங்குடைமைக்கு மூலதனமாகக் கொண்டு வந்தார்.

◆ இலாப நட்டங்கள் அல்பா, பீற்றா, சிவி என்போருக்கு இடையில் 2:2:1 எனப் பகிரப்படும்.

◆ 2015.04.01 இல் நன்மதிப்பானது ரூபா 300 000 என மதிப்பிடப்பட்டு இது தொடர்பாக சீராக்கம் பங்காளர் மூலதனக் கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

◆ சீராக்கப்பட்ட மூலதன மீதிக்கு ஆண்டுக்கு 10% வட்டியை வழங்குதல்

◆ பங்காளருக்கு மாதாந்தம் பின்வருமாறு சம்பளம் செலுத்தப்படல் வேண்டும்.

| | |
|---|---|
| அல்பா | ரூபா 2000 |
| பீற்றா | ரூபா 1500 |
| சிவி | ரூபா 1000 |

02. 31.03.2016 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தேறிய இலாபம் ரூபா 940000 ஆகவுள்ள அதேவேளையில் அதனைக் கணிப்பிடுவதில் பின்வரும் விடயங்கள் கவனத்திற் கொள்ளப்படவில்லை.

1.நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கு பின்வரும் விதத்தில் கிரயத்தில் பெறுமானத் தேய்வு செய்யப்படல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| கட்டடம் | 50% | (ஆண்டுக்கு) |
| மோட்டார் வாகனம் | 10% | (ஆண்டுக்கு) |
| தளபாடம் | 5% | (ஆண்டுக்கு) |

(2015.04.01 இல் காணப்படுகின்ற காணிக் கட்டத்தினுள் காணியின் பெறுமதி ரூபா 500 000 உள்ளடக்கப்பட்டுள்ளது)

1) 2016.03.31 திகதியிலுள்ள வியாபார வருமதிகள் மீதியில் 5% இற்கு ஐயக்கடன் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

2) 2016.03.31 திகதியில் அட்டுறு செயற்பாட்டுச் செலவு ரூபா 200 000 ஆகும். (இவ் அட்டுறுவானது இவ்வாண்டு தொடர்பாக ஏற்பட்டவற்றைக் குறிக்கின்றது)

3) 2015.10.01 இல் ரூபா 200 000 கிரயமுள்ள அதேவேளையில் ரூபா 160000 முன்கொண்டு செல்லும் பெறுமதியினைக் கொண்டதுமான தளபாட உபகரணங்கள் ரூபா 180000 இற்கு விற்பனை செய்யப்பட்டு அதன் மீதான இலாபம் மட்டும் தேறிய இலாபத்தில் உட்படுத்தப்பட்டுள்ளது. இதனைத் தவிர வேறு எப்பதிவுகளும் மேற்கொள்ளப் படவில்லை. விற்பனை செய்யப்பட்ட இச்சொத்திற்கான இவ்வாண்டிற்கான பெறுமானத்தேய்வும் தேறிய இலாபம் கணிக்கும் போது கருத்திற் கொள்ளப்படவில்லை.

4)காசு தவிர்ந்த ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் ஆரம்ப மீதியுடன் (2015.04.01) இறுதி மீதிகளை (2016.03.31) ஒப்பிடும் போது பின்வரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

| | ரூபா |
|---|---|
| இருப்பு அதிகரிப்பு | 100 000 |
| வியாபார சென்மதிகள் அதிகரிப்பு | 20 000 |
| வியாபார வருமதிகள் குறைவு | 400 000 |

5)ஆண்டுக் காலத்தில் ரூபா 300 000 வங்கிக்கடன் பெறப்பட்டுள்ளது. (வங்கிக் கடனுக்கு வட்டி இல்லையெனக் கொள்க)

6)ஆண்டுக் காலத்தில் அல்பா, பீற்றா, சிவி ஆகியோர் முறையே ரூபா 140 000, ரூபா 44 000, ரூபா 50 000 காசுப் பற்றினை மேற்கொண்டுள்ளனர்.

07)2016.03.31 இல் காசு மீதியில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூபா 2066000

வேண்டப்படுவது

1.2016.03.31இல் முடிவடைந்த ஆண்டிற்கான சரியான தேறிய இலாபத்தினைக் காட்டும் கூற்று
2.2016.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடைமை வியாபாரத்தின் இலாப நட்டத்தைப் பகிர்ந்து கொண்ட முறையைக் காட்டுவதற்கான கூற்று
3.பங்காளர் மூலதனக் கணக்கு
4.2016.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்காளர் நடைமுறைக் கணக்கு
5.2016.03.31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று.

03) அ) விஜய் தனிவியாபார நிறுவனத்தின் 2016.03.31 இல் முடிவடைந்த ஆண்டு தொடர்பாக வியாபார வருமதிகள் இறுதி மீதியில் 10% ஐ ஐயக்கடனுக்கு பொது ஏற்பாடு செய்யப்பட்டு ரூபா 42000 ஐ வருமானக் கூற்றுக்கு மாற்றி இருந்தது. வருமானக் கூற்றுத் தயாரிக்கப்பட்ட பின்னர் பின்வரும் தவறுகள் இனங்காணப்பட்டன.

1.2015.04.01 இல் காணப்பட்ட ஐயக்கடன் ஏற்பாட்டு மீதி ரூபா 35000 கவனத்தில் கொள்ளப்படவில்லை.
2.2016 மார்ச் மாதம் மேற்கொள்ளப்பட்ட விற்பனைப்பட்டியல் தொகை ரூபா 70000 முதன்மையேடுகளில் முழுமையாக பதியப்படாது விடுபட்டு இருந்தது.
3.2016 பெப்ரவரி மாதம் வியாபர வருமதிகளிடம் இருந்து பெற்ற காசோலை ரூபா 60000,கொடுத்த கழிவு ரூபா 6000 முறையாக பதிவு செய்யப்பட்டு காசோலையானது வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது.ஆனால் இக்காசோலை 2016 மார்ச் மாதம் வங்கியால் மறுக்கப்பட்டமை தொடர்பில் எவ்வித பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் கொடுத்த கழிவானது இரத்துச் செய்யப்படுகின்றது.
4.2016.03.31இல் வியாபார வருமதிகள் மீதியில் உள்ள “கமல்” என்பவரின் தொகை ரூபா 40000 அறவிடமுடியாக் கடனாக இனங்காணப்பட்டமை கவனத்தில் கொள்ளப்படவில்லை.
5.உட்திரும்பல் நாளேட்டின் ஒரு பதிவு ரூபா 56000,ரூபா 65000 என நாளேட்டில் பதியப்பட்டு இருந்தது.
6.2016.03.31 இல் உள்ள வருமதியாளர் ராஜாவின் கணக்கு மீதி ரூபா 120 000 இற்கு 40% விசேட ஏற்பாடு செய்தல் என்பது கருத்தில் கொள்ளப்படவில்லை.

குறிப்பு:-இந்நிறுவனத்தின் கொள்கையானது கடன்பட்டோர் மீதியில் இனங்காணப்பட்ட கடன்பட்டோருக்கு விசேட ஏற்பாடும் எஞ்சிய கடன்பட்டோருககு 10% பொது ஏற்பாடு செய்யப்படுவதுடன் அறவிடமுடியாக்கடன் தொடர்பான அனைத்துப் பதிவுகளும் ஐயக்கடன் ஏற்பாட்டுக்கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

**வேண்டப்படுவது:**

1.2016.03.31 இல் திருத்திய கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு
2.2016.03.31 இல் கடன்பட்டோரின் முன்கொண்டு செல்லும் தொகை
3.2016.03.31 இல் அறவிடமுடியாத ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு
4.தவறுகள் திருத்திய பின்னர் 2016.03.31 இல் தேறிய இலாபத்தில் ஏற்படும் அதிகரிப்பு அல்லது குறைவு

ஆ) பானு நிறுவனத்தின் 2016 June 30 இல் தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக் கூற்று பின்வருமாறு

| | ரூபா |
|---|---|
| காசேட்டின் வங்கி மீதி | 12500 |
| + வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலை | 2000 |
| | 14500 |
| (-) செலவு வைக்கப்படாத வைப்புச் செய்யப்பட்ட காசோலை | (1500) |
| வங்கிக்கூற்றின்படி வங்கி மீதி | 13000 |

2016 ஜூலை மாதத்தில் இடம்பெற்ற வங்கிக் கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு,

| விபரம் | வங்கிக் கூற்றின்படி | காசேட்டின் படி |
|---|---|---|
| பதியப்பட்ட வைப்புக்கள் | 12000 | 12500 |
| கொடுப்பனவு செய்யப்பட்டவை | 10000 | 11000 |
| நேரடி வைப்புக்கள் | 4500 | - |
| வங்கிக் கட்டணம் | 250 | - |
| மறுக்கப்பட்ட கா்சோலை | 500 | - |
| (வைப்புச் செய்யப்பட்டவை) | | |

**வேண்டப்படுவது:**

1.2016.07.31இல் திருத்தம் செய்ய முன் காசேட்டு வங்கி மீதி
2.2016.07.31 நிதி நிலமைக் கூற்றில் காட்டப்படும் வங்கி மீதி (திருத்திய காசேட்டின் மூலம்)
3.2016.07.31 இல் வங்கி இணக்கக் கூற்று

04) அ)பின்வரும் தகவல்கள் உற்பத்திக் கம்பனி ஒன்றினால் பயன்படுத்திய மூலப் பொருட்கள் தொடர்பானவை

1.சிக்கனக் கட்டளைத் தொகையானது (EOQ) மறு கட்டளைத் தொகையாகப் பாவிக்கப்படுகிறது.
2.அலகு ஒன்றிற்கான இருப்பு பேணுதல் கிரயம் (CH) ரூபா 0.40 சதம்
3. மார்ச் 2016 மாதத்திற்கான மூலப் பொருள் பெறுவனவுகள் விநியோகச் சுருக்கம்

| | அலகு | பெறுமதி (ரூபா) |
|---|---|---|
| மார்ச் 1 இல் களஞ்சிய இருப்பு மீதி | 6000 | 72000 |
| மார்ச் 6 இல் பெறுவனவு | 14000 | 28000 |
| மார்ச் 12 இல் விநியோகம் | 19000 | |
| மார்ச் 24இல் பெறுவனவு | 14000 | 23000 |
| மார்ச் 30 இல் விநியோகம் | 14000 | |

4.வருடத்தில் 20 கட்டளைகள் இடப்பட்டது
5.கம்பனியானது மூலப்பொருள் விநியோகத்தினை விலையிட நிறையளித்த சராசரி முறை (WAC) பயன்படுத்தப்படுகின்றது.

**வேண்டப்படுவது**

1.மூலப்பொருட்களின் வருடாந்த நுகர்வு (கேள்வி)
2.சிக்கன கட்டளைத் தொகை (EOQ)
3.வருடாந்த கட்டளை இடல் செலவும் ஒரு கட்டளைக்கான செலவு (OC)
4.31.03.2016 இல் மூலப்பொருட்களின் இருப்பு பெறுமதி
5.2016 மார்ச் மாதம் உற்பத்திக்கு பயன்படுத்திய மூலப்பொருட்களின் கிரயம்

ஆ)வரையறுக்கப்பட்ட அசோக் பொதுக்கம்பனியின் “X-100” பொருள் தொடர்பான விபரம் (2016 ஜூலை மாதத்திற்கானது)

| திகதி | 01/07 | 05/07 | 10/07 | 15/07 | 21/07 | 25/07 | 30/07 |
|---|---|---|---|---|---|---|---|
| விபரம் | மீதி | பெறுவனவு | வழங்கல் | பெறுவனவு | வழங்கல் | பெறுவனவு | வழங்கல் |
| அலகுகள் | 250 | 250 | 350 | 150 | 100 | 300 | 450 |
| அலகொன்றின் விலை (ரூபா) | 6 | 7 | - | 8 | - | 9 | - |

வழங்கல் செய்யப்படும் பொருளொன்றின் விற்பனை விலை ரூபா 15 எனக் கொள்க.

**வேண்டப்படுவது**

1.நிறையளித்த சராசரி முறையில் (WAC) களஞ்சிய் பேரேட்டினைத் தயாரித்து இருப்பின் பெறுமதியினைக் காண்க
2. முதல் வந்தது முதல் சென்றது முறையில் (FIFO) இருப்பின் பெறுமதியினைக் கணித்து விற்பனைக் கிரயம், மொத்த இலாபத்தினைக் காண்க.

இ) வரையறுத்த கமல் பொதுக்கம்பனியின் மூலப்பொருள் X தொடர்பான தகவல்கள் வருமாறு:

| | |
|---|---|
| உச்ச இருப்பு மட்டம் | 250 அலகுகள் |
| சராசரி இருப்பு மட்டம் | 200 அலகுகள் |

**வேண்டப்படுவது**

மறுகட்டளைத் தொகையினைக் கணிக்குக (EOQ)

05)

அ) வரையறுத்த சதீஸ் கம்பனி பெரியது சிறியது என்னும் இரண்டு வகையான கைப்பைகளைத் தயாரிக்கின்றது. சந்தோஸ் என்பவர் உற்பத்திற்குத் தேவைப்படும் பதனிட்ட தோலை (Leather) வெட்டுபவராக வேலை செய்கிறார். சரிதா நமிதா என்போர் தையல் முடிவுறுத்தல் மற்றும் பொதியிடல் வேலைகளைச் செய்கின்றனர். பின்வருவன இக்கம்பனியுடன் தொடர்பான தகவல்களாகும்.

1.ஒவ்வொரு ஊழியரும் மாதாந்த பிரயாணப்படி ரூபா 1000 இற்கு உரித்துடையவர்கள்.
2.சரிதா, நமிதா ஒவ்வொருவரும் மாதச் சம்பளமாக ரூபா 11000 பெறுகின்றனர். மேலும் இவர்களுக்கு முடிவுறுத்தலுக்காக கைப்பை ஒன்றிற்கு ரூபா 10 செலுத்தப்படுகின்றது.
3.சந்தோஸ் என்பவருக்கு பெரியது சிறியது கைப்பைகளுக்கான பதனிட்ட தோலை வெட்டுவதற்காக கைப்பை ஒன்றுக்கு முறையே ரூபா 75, ரூபா 50 கொடுப்பனவுடன் செலுத்தப்படுகின்றது.
4.இலக்காக நிர்ணயிக்கப்பட்ட உற்பத்தியைவிட மேலதிகமாக உற்பத்தி செய்யப்படும் பெரியது சிறியது கைப்பை ஒன்றிற்காக உற்பத்தி ஊக்குவிப்பாக முறையே ரூபா 20, ரூபா 10 செலுத்தப்படுகின்றது.
5.பெரியது சிறியது கைப்பைகளுக்கான மாதாந்த இலக்கு உற்பத்தி முறையே 50, 30 அலகுகளாகும்.
6.மாதத்திற்கான உண்மையான உற்பத்தி கீழே தரப்பட்டுள்ளது. ஆரம்ப மற்றும் இறுதி குறைவேலைகள் எதுவும் இருக்கவில்லை.

| ஊழியர் | பெரியது (அலகுகள்) | சிறியது (அலகுகள்) |
|---|---|---|
| சரிதா | 40 | 50 |
| நமீதா | 70 | 30 |
| மொத்தம் | 110 | 80 |

7. வியாபாரத்தின் உரிமையாளர் வியாபாரத்தினை முகாமை செய்வதற்காக மாதச் சம்பளமாக ரூபா 15000 ஐயும் உற்பத்தி செய்யப்பட்ட கைப்பை ஒன்றுக்கு ரூபா 40 வீதம் இறையாகவும் எடுக்கின்றார்.
8.பெரியது சிறியது கைப்பை ஒன்றிற்கான பதனிட்ட தோல், நேர்க்கிரயம் முறையே ரூபா 200, ரூபா 100 ஆகும்.
9. மதிப்பீடு செய்யப்பட்ட மாதமொன்றிற்கான ஏனைய உற்பத்தி மேந்தலைகளும் மேந்தலை உறிஞ்சுதல் அடிப்படைகளும் பின்வருமாறு

| மேந்தலைகள் | தொகை (ரூபா) | உறிஞ்சல் அடிப்படை |
|---|---|---|
| வாடகை | 19000 | உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை |
| நீர் | 2000 | சமமானது |
| மின்சாரம் | 4000 | பெரியது,சிறிய வகைகளுக்கிடையில் 3:1 விகிதத்தில் |
| தொலைபேசிக் கட்டணங்கள் | 5000 | பெரியது, சிறிய வகைகளுக்கிடையில் 3:2 விகிதத்தில் |

10.நேரில் ஊழியக்கிரயமானது பெரியது சிறியது கைப்பைகளுக்கான இடையில் முறையே 3:2 என்னும் விகிதத்தில் உறிஞ்சப்படும்.

**வேண்டப்படுவது**

1.மேற்கூறிய மாதத்திற்கான சந்தோஸ், சரிதா, நமீதா ஆகியோரின் மொத்தச் சம்பளத்தைக் காட்டக்கூடியதான சம்பளப் பட்டியல்
2.பெரியது, சிறியது கைப்பைகளுக்கான இம்மாதத்திற்கான மொத்த நேர் ஊழியக்கிரயம்
3.பெரியது, சிறியது கைப்பைகளிற்கான இம்மாதத்திற்கான மொத்த நேரில் ஊழியக்கிரயம்
4.பெரியது, சிறியது கைப்பைகளினால் உறிஞ்சப்பட்ட மொத்த மேந்தலை
5.பெரியது, சிறியது கைப்பைகளின் இம்மாதத்திற்கான மொத்த உற்பத்தி கிரயம்.

(மிகுதி நாளை வெளிவரும்)



# சிறுவர் அரங்கம்

1469

## எல்லோரையும் நேசி!

...அந்த நேரம், பண்ணை வேலையாள் ஒருவன் ஓடி வந்து, "முதலாளி! பண்ணையில் உள்ள ஆடுகளை, இன்று அதிகாலையிலேயே பிரான்சிஸ் ஓட்டிச் சென்று விட்டான்!" என்று கூறினான்.

உடனே, புல்வெளி பக்கமாக ஓடி வந்தார் பண்ணையார். அங்கே பிரான்சிஸ்சையும் காணவில்லை, ஆடுகளையும் காணவில்லை. ஒரு ரிஷி மட்டும், அந்தப் பாதையின் வழியாக வந்து கொண்டிருந்தார். காவி உடையுட னும், சடையுடனும் இருக்கும் அந்த ரிஷியைப் பார்த்ததும், அவர் முன்னே கைகட்டி நின்று கொண்டார் பண் ணையார்.

"சுவாமி! எனக்கு தாங்கள் ஒரு உதவி செய்ய வேண்டும். தாங்கள் மறுப்பு எதுவும் தெரிவிக்காமல், அந்த உதவியை செய்யும் படி மிகவும் தாழ்மையுடன் கேட்கிறேன்!" என்றவாறு, ரிஷியின் காலில் பயபக்தியுடன் விழுந்து விட்டார் பண்ணையார்.

"உனக்கு என்ன உதவி வேண்டுமானாலும் கேள்! தாராளமாக செய்கிறேன்!" என்றார் ரிஷி.

"சுவாமி! என் வேலைக்காரன் ஒருவன், எனக்கு சொந்தமான ஆடுகளை,



எங்கோ ஓட்டிச் சென்று விட்டான். அவைகள் எல்லாம் மீண்டும் எனக்குத் திரும்பக் கிடைக்குமா? என் ஆடுகள் எங்கே சென்றுள்ளன. அவற்றை நான் மீண்டும் கைப்பற்ற வேண்டும். அதற் காகத்தான் உங்கள் உதவியை வேண்டி நிற்கிறேன்!" என்று கூறினார்.

கண்களை மூடியபடி சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தார் ரிஷி.

"மகனே! நீ செய்த கொடுமைகளின் காரணமாக, உன்னிடமிருந்த வேலைக்காரனும், ஆடுகளும் தப்பிச் சென்று விட்டனர். நீ, ஆடுகளுக்கு சரியான உணவு கொடுக்காமல் கஷ்டப்படுத்தி னாய்! உன் வேலைக்காரனுக்கும், இரண்டு ரொட்டித் துண்டுகளை மட் டுமே கொடுத்து வந்தாய். பசிக் கொடு மையைத் தாங்கிக்கொண்டு, இத் தனை நாட்களும் உன் வேலைக் காரன் உனக்கு வேலை செய்து வந்தி ருக்கிறான். இன்று அவன், தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவே உன் இருப் பிடத்தை விட்டு வெளியேறி விட்டான்!" என்றார்.

அதைக் கேட்ட பண்ணையாரால் பதில் எதுவும் பேச முடியவில்லை. அப்படியே செய்வதறியாது திகைத்த படி நின்று கொண் டிருந்தான். உடனே ரிஷி, மீண்டும் தன் பேச்சைத் தொடர் ந்தார்.

"மகனே! உன் வேலைக்காரனை யும் உன்னைப் போன்று எண்ண வேண்டும். நீ வளர்க்கிற உயிரினாங் களையும் உன் உயிராகவே எண்ண வேண்டும். உன்னை சார்ந்தவர்களி டம் நீ அன்பாக நடந்து கொண்டால், யாருமே உன்னை விட்டுப் பிரியமாட்டார்கள்!" என்று கூறினார்.

"சுவாமி! இதுவரையிலும் நான், பணக்காரன் என்ற ஆணவத்தால், ஏழைகளை மதிக்காமல் நடந்து விட்டேன். இனிமேல், எல்லா மக்களும் மனத்தாலே ஒன்றுபட்டவர்கள் என்பதைப் புரிந்து வாழ்வேன்!" என்றான்.

"மகனே! "எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் மக்கள்' என்று சான்றோர்கள் கூறியுள்ளனர். இனிமேல், பணத்தால் யாரையும் பிரித்துப் பார்க்காதே. ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடு இல்லாமல் வாழக் கற்றுக்கொள்!" என்று கூறினார்.

(முற்றும்)

## 06.2016 29 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1534 - பிரின்ஸ் எட்வேர்ட் தீவு சாக் கார்ட்டியே என்ற ஐரோப்பியரால் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1613 - லண்டனில் உள்ள குளோப் நாடக மாளிகை தீயில் எரிந்து அழிந்தது.
- 1786 - அலெக்சாண்டர் மாக்டொனெல் மற்றும் 500 கத்தோலிக்கர்கள் ஸ்கொட்லாந்தில் இருந்து சென்று ஒண்டாரியோவின் கிளென் கரி என்ற ஊரில் குடியேறினர்.
- 1814 - மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த ஆறு மதப்பரப்புனர்கள் இலங்கையின் காலி நகரை வந்தடைந்தனர்.
- 1850 - வான்கூவர் தீவில் நிலக்கரி கண்டுபிடிக்கப்பட்டது.
- 1864 - கனடாவில் கியூபெக்கில் தொடருந்து விபத்தில் 99 பேர் கொல்லப்பட்டனர்.
- 1880 - பிரான்ஸ் டெஹீட்டி தீவைக் கைப்பற்றியது.
- 1888 - ஜோர்ஜ் எடுவார்ட் கவ்ராட் என்பவர் ஆண்டெலின் எகிப்தில் இசுரேல் என்ற ஆக்கத்தை கிராமபோன் உருளை ஒன்றில் பதிவு செய்தார்.
- 1895 - சாரின் உருசியப் அரசின் படைக்குக் கட்டாய ஆளெடுக்கும் நடவடிக்கையைக் கண்டித்து டுகோபார் தமது ஆயுதங்களை எரித்தனர்.
- 1904 - மொஸ்கோவில் இடம்பெற்ற சூறாவளியினால் சுமார் 1.500 வீடுகள், கட்டடங்கள் அழிந்தன.
- 1914 - கிரிகோரி ரஸ்புட்டீன் சைபீரியா நகரில் உள்ள அவரது வீட்டில் இடம்பெற்ற கொலை முயற்சி ஒன்றில் தப்பினார்.
- 1925 - கலிபோர்னியாவில் 6.3 நிலநடுக்கம் ஏற்பட்டதில் சாண்டா பார்பரா என்ற இடம் முற்றாக அழிந்தது.
- 1976 - சீசெல்சு ஐக்கிய இராச்சியத்தில் இருந்து விடுதலை அடைந்தது.
- 1995 - அட்லாண்டிஸ் விண்ணோடம் ரஷ்யாவின் மீர் விண்வெளி நிலையத்துடன் முதற்தடவையாக இணைந்தது.
- 1995 - தென் கொரியாவின் சியோலில் சம்பூங் பல்பொருள் அங்காடி இடிந்து வீழ்ந்ததில் 501 பேர் கொல்லப்பட்டு 937 பேர் படுகாயமடைந்தனர்.
- 2002 - தென் கொரியாவுக்கும் வட கொரியாவுக்கும் இடையில் இடம்பெற்ற கடல் மோதலில் ஆறு தென் கொரிய மாலுமிகள் கொல்லப்பட்டு ஒரு வட கொரியக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.
- 2007 - ஆப்பிள் நிறுவனம் தனது முதலாவது கைப்பேசி ஐ-போனை வெளியிட்டது.

### பிறப்புகள

- **1945 - சந்திரிகா குமாரதுங்க, இலங்கையின் நான்காவது ஜனதிபதி.**
- 1981 - ஜோ ஜான்சன், அமெரிக்கக் கூடைப் பந்து ஆட்டக்காரர்.
- 1925 - ஜார்ஜியோ நபோலிடானோ, 11வது இத்தாலிய அரசுத்தலைவர்.
- 1978 - நிக்கோல் செர்சிங்கர், அமெரிக்கப் பாடகர், நடிகை.


### இறப்புகள

- 2009 - வ. ஐ. சுப்பிரமணியம், மொழியியல் அறிஞர். (பி. 1926)

### சிறப்பு நாள்

- சீசெல்சு - விடுதலை நாள். (1976)

## சந்திரிகா குமாரதுங்க முன்னாள் ஜனாதிபதி



சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்க இலங்கையின் ஐந்தாவது ஜனாதிபதியும் நான்காவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியுமாவார். இவர் இலங்கை சுதந் தரக் கட்சியின் முன்னாள் தலைவருமாவார. இவரது தந்தையான எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக சந்திரிகாவின் பிறப்பின் போது அமைச்சராக இருந்து பின்னர் இலங்கையின் பிரதமராக உயர்ந்தார். சந்திரிகாவுக்கு 14 வயதாகும் போது அவரது தந்தை கொலை செய்யப்பட்டார். அதன் பின்னர், சந்திரிகாவின் தாயான சிறிமாவோ பண்டாரநாயக்கா 1960 இல் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டார். சந்திரிகா பாரிஸ் பல்கலைக்கழகத்தில் அரசியல் அறிவியல் தொடர்பான பட்டபடிப்பை முடித்தவர். இவர் சிங்களம், ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழிகளில் பரிச்சயம் உள்ளவராவார். இலங்கை திரும்பிய சந்திரிகா, சுதந்திரக் கட்சியில் இணைந்து தமது அரசியல் வாழ்க்கையைத் தொடங் கினார். 1972-1976 காலப்பகுதியின் நில மறுசீரமைப்பின் போது, இலங்கை நில மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு மேலதிக பிரதான இயக்குனராக பணியாற்றினார். 1974 இ.சு.க. பெண்கள் அணியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். 1976 - 1977 காலப்பகுதியில், கொத்தணிப் பண்ணைகளை அமைத்த ஜனவச ஆணைக்குழுவின் தலைவராக பணியாற்றினார்.1976- 1979 காலப்பகுதியில், உணவு மற்றும் விவசாய அமைப்பிற்கு விசேட ஆலோசகராக பணியாற்றினார். 1978 இல் சந்திரிகா இலங்கையின் பிரபல நடிகரும், அரசியல்வாதியுமான விஜய குமாரணதுங்கவை மண ந்தார். 1994 ஆகஸ்ட் 19இல் சந்திரிகா மக்கள் முன்னணி தலைமையிலான அரசில் பிரதமராக தெரிவு செய்யப்பட்டார். அவ்வாண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் வெற்றிப் பெற்று ஜனாதிபதியாக பதவியேற்றார். இவரது ஆட்சியின் ஆரம்பப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். இது தோல்வியடையவே, பிற்பகுதியில் போர் மூலம் புலிகளை அடக்க முற்பட்டார். 1999 ஒக்டோபர் மாதத்தில் ஜனாதிபதி தேர்தலுக்குரிய நாளுக்கு முன்னதாகவே சந்திரிகா தேர்தலை நடத்த திட்டமிட்டார். டிசம்பர் 18 1999 இல் கொழும்பு நகரசபை முன்னரங்கில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தின்போது, அவரை கொலை செய்யும் நோக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொலை குண்டுதாரி என சந்தேகிக்கப்படும் ஒருவர் வெடிக்கச் செய்த குண்டினால் தனது வலது கண்ணை இழந்தார்.

# அரசியலமைப்பு அடிப்படை நகல் இதுவரை தயாரிக்கப்படவில்லை

## பிரதமர் அலுவலகம் தெரிவிப்பு

(கொழும்பு)

**பௌத்த தர்மம் தொடர்பில் தற்போதைய அரசியலமைப்பிலுள்ள எந்தவோர் சரத்தும் திருத்தப்படவோ அல்லது மாற்றப்படவோ மாட்டாது. இது தொடர்பில் வெளியாகும் செய்திகளில் எதுவித உண்மையுமில்லை என பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது. அரசியலமைப்பு தொடர்பான நகலோ அல்லது அதன் அடிப்படையிலான எழுத்து மூலமான விடயங்களோ இதுவரையில் தயாரிக்கப்படவில்லை என்றும் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.**

புதிய அரசியலமைப்பில் ஒவ்வொரு விதத்திலான சரத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக வெளியாகும் செய்திகளை மறுத்துள்ள பிரதமர் அலுவலகம் அது தொடர்பாக விளக்கமளித்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை விசேட அறிக்கையொன்றை வெளியிட்டது. அவ் அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

புதிய அரசியலமைப்பு தொடர்பாக சமூகத்திற்குள் பல்வேறுபட்ட தவறான கருத்துக்களை பரப்பும் அமைப்பு ரீதியான இயக்கங்கள் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன. இது தொடர்பில் எமது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு தொடர்பான நகலோ அல்லது அதன் அடிப்படையிலான எழுத்து மூலமான விடயமொன்றோ இதுவரையில் தயாரிக்கப்படவில்லை.

இவ்வாறானதொரு நிலையில் புதிய அரசியலமைப்பில் ஒவ்வொரு விதத்திலான சரத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக வெளியிடப்படும் தகவல்களில் எந்தவிதமான அடிப்படை உண்மையும் கிடையாது.

விசேடமாக பௌத்த தர்மம் தொடர்பில் அரசியலமைப்பில் முன்மொழியப்பட்டுள்ள சரத்துக்களில் திருத்தங்களை மேற்கொள்ளவோ அல்லது மாற்றத்தை ஏற்படுத்தவோ எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அவ்வாறு வெளிவரும் தகவல்களில் உண்மையுமில்லை.

“தேரவாத ” பௌத்த தர்மத்தை பாதுகாத்து போஷிப்பதற்கான பொறுப்பை அரசாங்கம் எப்போதும் கடைப்பிடிக்கும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசியலமைப்பு வழிநடத்தல் குழுவால் இதுவரையில் தேர்தல் முறைமை, மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை பரவலாக்குதல் தொடர்பான பட்டியல் மற்றும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை தொடர்பிலான விடயங்களே கலந்துரையாடப்பட்டுள்ளன.

புதிய அரசியலமைப்பு தொடர்பாக மக்களின் கருத்துக்கள் கேட்டறியப்பட்டன. இதன்மூலம் அரசியலமைப்பை தயாரிக்கும்போது மக்களின் கருத்துக்களுக்கு பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொடுப்பதே நோக்கமாகும்.

இவ் விடயத்தில் மக்கள் தமது மன விருப்பப்படி பல கருத்துக்களை முன்வைத்தனர். அவ்வாறான கருத்துக்கள் தற்போது பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளன. இதுவோர் அரசியலமைப்பு நகல் அல்ல.

மக்கள் முன்வைத்த கருத்துக்கள் வெளிப்படைத் தன்மையாக இதன்மூலம் வெளிப்படுத்தப்பட்டன.

இக் கருத்துக்கள் அரசியலமைப்பை தயாரிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள பாராளுமன்ற இணைக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும். அந்தந்த இணைக் குழுக்கள் எதிர்காலத்தின் நன்மை கருதி எதிர்காலத்திற்கு ஏற்றவாறு மக்களின் கருத்துக்களை புதிய அரசியலமைப்பின் தயாரிப்பின்போது கவனத்தில் எடுக்கும் என அவ்வறிக்கையில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# தகவலறிவதில் பொதுமக்களின் ஆர்வம் மிகக்குறைவாகவுள்ளது

## அமைச்சர் கயந்த கவலை



தகவலறியும் உரிமைச் சட்டம் மீதான பொதுமக்களின் ஆர்வம் எதிர்பார்த்ததைவிடவும் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது என பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், நம் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தகவலறியும் உரிமைச் சட்டமானது உலகில் 7 ஆவது சிறந்த சட்டமாகும்.

தெற்காசியாவைப் பொறுத்த வரையில் இந்திய சட்டமூலம் முதலாவது இடத்திலும், இந்த சட்டமூலம் இரண்டாவது இடத்திலும் இருக்கின்றன.

இச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டுக்கென அவர்களிடத்தில் கொண்டு செல்ல முன்னர், சட்டத்திலுள்ள அடிப்படை தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்ய கிட்டத்தட்ட ஒரு வருடகாலம் தேவைப்படுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதனைத் தொடர்ந்து ஆறு மாதங்களில் தகவல்களை அறிவதற்கான விண்ணப்பப்படிவங்களை விநியோகிக்க எதிர்பார்த்துள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

தகவலறியும் சட்டத்தை நடைமுறைப்படுத்திய பல உலக நாடுகள் தமது இரண்டாவது ஆட்சிக் காலப் பகுதியிலேயே இச்சட்டத்தைக் கொண்டுவந்துள்ளன.

எனினும் எமது புதிய அரசாங்கம் முதலாவது ஆட்சிக் காலத்தில், ஆட்சியமைத்து ஒன்றரை வருடம் பூர்த்தியடைவதற்கு முன்னரே இச்சட்டத்தை கொண்டுவந்துள்ளது.

இத் தகவல் அறியும் உரிமைச் சட்டம், வரலாற்று ரீதியில் மிகவும் பயனுள்ளதும் நன்மையானதுமான சட்டமாக அமையவுள்ளது என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# இலங்கையர்களின் ஆயுட்காலம் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கை பிரஜைகளினது எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் அதிகரித்துள்ளதாக சனத்தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

2001 ஆம் ஆண்டு மேற்கொள்கொள்ளப்பட்ட புள்ளிவிபரங்களின் படி, ஆண்களின் எதிர்பார்க்கும் ஆயுட்காலம் 68.8 வயதாகவும் பெண்களின் ஆயுட்காலம் 77.2 வயதாகவும் காணப்பட்டது.

இதேவேளை, 2011 தொடக்கம் 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொளப்பட்ட ஆய்வின்படி, ஆண்களின் ஆயுட்காலம் 72 வயதாகவும், பெண்களின் ஆயுட்காலம் 78.6 ஆகவும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# இன்று ஒரு தகவல்

## போற்றுதலுக்குரிய பொறுப்புணர்ச்சி

எதைச் சொல்ல வேண்டுமோ, அதை மட்டும் சொல்லுதல்;

எதைச் செய்ய வேண்டுமோ,அதைக் கட்டாயம் செய்தல்;

எது முக்கியம் , எது முக்கியமில்லை என்று பிரித்து உணர்ந்து செயற்படுதல்;

எதில் பிடிப்புக் காண்பிக்க வேண்டுமோ அதில் மட்டும் பிடிப்போடு இருத்தல்;

எது அவசரமோ அதை அவசரமாகவும், ஆற அமரச் செய்ய வேண்டியதை அதன் படியும் செய்தல்;

நாம் செய்ய வேண்டியது எது, பிறர் செய்ய வேண்டியது எது என்று பிரித்து உணர்தல்;

ஒப்படைக்கப்படும் கடமைகளை எவரும் குறை சொல்ல முடியாதபடி செய்து காட்டுதல்.

ஒப்படைக்கப்படாத கடமைகளையும் முயன்று உணர்ந்து அவற்றைச் செயற்படுத்தல்;

ஒரு நன்மைக்காக எத்தகைய இழப்புக்களையும் கொள்ளுதல்;

எல்லாம் விதிப்படி தான் நடக்கும், அதை மாற்ற முடியாது என்று சித்தாந்தம் பேசிப் பொழுதை வீணாக்காதிருத்தல் அல்லது சந்தர்ப்பங்களை நழுவவிடாது இருத்தல் ஆகிய எண்ணற்ற நல்ல பண்புகளின் கலவையே பொறுப்புணர்ச்சி. இப்படிப்பட்ட மூட்டைக் கணக்கான நற்பண்புகளை உலகம் எவ்வளவு சுலபமாய் நம்மிடம் அவசியம் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறது!

ஆனால் இந்த நினைப்பில் சுயநலம் இருக்கிறது என்று கூறியோ, இவையெல்லாம் இல்லாவிட்டால் என்னவாகும் என்று கூறியோ நாம் சமாதானம் அடைவது பொருத்தமானது.

நினைவோடு செய்தல்; எதையும் திட்டமிட்டுச் செய்தல் ஆகியவற்றில் இருந்து தளறும் போதும் நம் பொறுப்புணர்ச்சி கடுமையாக விமர்சிக்கப்படுகிறது.

பொறுப்புணர்ச்சி மிக்க வேலையாளுக்கு ஒரு முதலாளியோ , ஒரு மேலதிகாரியோ எல்லாச் சலுகைகளையும் தருகிறேன் என்கிறார். அவனுக்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுத்துச் செல்லப் பிள்ளையாக நடத்துகிறார்.

எதையும் பொறுப்போடு செய்பவர்களுக்கு அல்லது நடந்து கொள்பவர்களுக்கு வேலைப் பளு அதிகமாக இருக்கும். அவர்களிடம் கடமைகள் மித மிஞ்சி ஒப்படைக்கப்படும். இது ஒரு நேரத்தில் சலிப்பை ஏற்படுத்தினாலும் அவை அவர்களுக்குக் கிடைத்த பாராட்டுப் பத்திரங்கள் என்றெண்ணி ஆறுதல் கொள்ள வேண்டும். வேறு வழியில்லை.

திடுதிப்பென்று பொறுப்புணர்ச்சியை வரவழைத்துக் கொள்ள எப்படி முடியும் என்று மலைப்பவர்களும் , வியப்பவர்களும் ஒரே விடயத்தை அளவுகோலாகக் கொள்ளலாம்.

அது மற்றவர்கள் நம்மிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார்கள். நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென விரும்புகிறார்கள் என்பதில் சிறிதேனும் கவனம் செலுத்துவது மற்றவர்களது உணர்வுகளைப் பற்றி, அக்கறை கொள்ளாதவர்கள் அல்லது கவலை கொள்ளாதவர்கள் தாம் பொறுப்பற்றவர்களாகத் திகழ்கிறார்கள்.

இதைச் செய்தால் என்ன ஆகும், இதைச் செய்யாவிட்டால் என்ன ஆகும் என்ற கேள்வியை அவசியம் எழுப்பி விடை தேட முயலவேண்டும். ஒரு செயலைச் செய்யாதிருத்தல்–செய்தல் ஆகியவற்றின் விளைவுகளை விரிவாகச் சிந்திக் கிறவர்களுக்கு நிச்சயம் பொறுப்புணர்ச்சி வரும்.

வாழ்க்கையில் பிடிப்பற்றவர்களும் வாழத் தெரியாதவர்களும் பொறுப்பவர்களாய் இருந்தால் அவர்களை மன்னித்துவிடலாம்.

ஆனால் இவர்கள் அல்லாத மற்றவர்கள் பொறுப்பற்று இருப்பது என்பது ஜீரணிக்க முடியாத ஒன்று.

**லேனா தமிழ்வாணன்**

# வதந்திகளை பரப்பி வருவது கூட்டு எதிர்க்கட்சியே-தயாசிறி

(கொழும்பு)

அண்மையில் தன்னை வெறுப்பாக தூற்றிய சம்பவம் கூட்டு எதிர்க்கட்சியின் திட்டமிட்ட சதி என விளையாட்டுத்துறை அமைசசர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பத்திரிகை ஊடகம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டமையினாலே மக்கள் தன்னை தூற்றிப் பேசுவதாக ஊடகங்கள் கூறுவதை தான் மறுப்பதாகவும் அமைச்சர் இதன் போது தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சியின் குடிபோதை ஆதரவாளர்கள், தங்களது வலைத்தளங்களில் தன்னை பற்றி தவறான வதந்திகளை திட்டமிட்டு வழங்கி வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் ஜயசேகர மேலும் தெரிவிக்கையில்,

நடைபெற்ற நிகழ்வு ராஜபக்ஷவின் கூட்டம் அல்ல, அது விகாரை ஒன்றில் நடந்த கலாசார நிகழ்வே என ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷவினால் நடத்தப்படும் எந்த ஒரு கூட்டத்திற்கும் தான் ஒரு போதும் செல்லமாட்டேன் என்றும், அந்த விகாரையில் நீண்டகாலமாக தான் பொறுப்பாளராக இருந்தமையினாலேயே நடைபெற்ற மத விழாவிற்கு தன்னைஅழைத்ததாகவும், தன்னை மத நிகழ்விற்கு அழைத்த போது அரச அமைச்சராகவே தான் இருந்ததாகவும் அமைச்சர் தயாசிறி ஜயசேகர இதன் போது தெரிவித்தார். (இ-10)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-28.06.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 145.60 | 149.44 |
| பிரிட்டன் | பவுண்ட் | 191.97 | 199.98 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 158.89 | 166.58 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 147.96 | 154.21 |
| கனடா | டொலர் | 110.990 | 115.66 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 106.46 | 111.50 |
| சிங்கப்பூர் | டொலர் | 106.76 | 110.91 |
| இந்தியா | ரூபா | 2.1394 | ------- |
| சீனா | யுவான் | 21.8419 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 384.9212 |
| குவைத் | டினார் | 480.7693 |
| ஓமான் | ரியால் | 377.2678 |
| கட்டார் | ரியால் | 39.8891 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.7287 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.5459 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 80 | 60 | 80 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 80 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 600 | 800 | 500 | 500 | 600 | 700 | 600 |
| தக்காளி | 280 | 300 | 160 | 230 | 240 | 280 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 70 | 60 | 70 | 80 | 100 |
| கோவா | 160 | 200 | 140 | 100 | 180 | 160 | 150 |
| கரட் | 280 | 400 | 240 | 180 | 160-300 | 300 | 90 |
| பூசணி | 80 | 120 | 70 | 90 | 80 | 100 | 80 |
| புடோல் | 60 | 100 | 80 | 60 | 70 | 80 | 60 |
| வாழைக்காய் | 80 | 110 | 70 | 80 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 140 | 160 | 140 | 140 | 140 | 200 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 80 | 70 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 180 | 400 | 200 | 170 | 200 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 80 | 70 | 100 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 200 | 120 | 100 | 120 | 160 | 150 |
| பயற்றங்காய் | 80 | 100 | 100 | 50 | 100 | 120 | 140 |
| லீக்ஸ் | 160 | 250 | 160 | 110 | 140 | 200 | 200 |
| பீற்றூட் | 140 | 200 | 180 | 130 | 100 | 200 | 160 |
| கறிமிளகாய் | 350 | 400 | — | 150 | 240 | 320 | 200 |
| முருங்கைக்காய் | 500 | 300 | 500 | 400 | 550 | 600 | 600 |
| போஞ்சி | 200 | 250 | 240 | 200 | 180 | 740 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 50 | — | — | 60 | 80 | — |
| கீரை – 1பிடி | 20 | 50 | 30 | 10 | 30 | 20 | 15 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 180 | 250 | 200 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 30 | 15-25 | 40 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 150 | 300 | — | — | — | 200 | 160 |
| வெங்காயப்பூ | 250 | 300 | — | — | 200 | 400 | 300 |
| முள்ளங்கி | 80 | 100 | 100 | — | 80 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 40 | 15 | 30 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 10 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 100 | 60 | 40 | 60 | 50 | 60 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## பிரபாகரனுடன் தளபதி கருணா மோதல் 215

பதவி ஏற்ற பிறகு புதிய பிரதமர் ராஜபக்ஷ நிருபர்களுக்கு போட்டி அளித்தார். அவர் கூறியதாவது,

### விடுதலைப்புலிகளுடன் பேச்சு

விடுதலைப்புலிகளுடன் விரைவில் அமைதிக்கான சமரசப் பேச்சு வார்த்தையைத் தொடங்குவோம். இதில் இந்தியாவின் பங்கு மிகவும் அவசியமாகும்.

இந்தியாவுடனான நல்லுறவுக்கு முதலிடம் அளிக்கப்படும்.

இவ்வாறு ராஜபக்ஷ கூறினார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரனுக்கும் புலிகளின் கிழக்கு பிராந்திய தளபதி கருணாவுக்கும் இடையே ஏற்பட்ட மோதல், தமிழர் போராட்ட வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும்.

கருணாவின் இயற்பெயர் முரளீதரன் என்பதாகும். மட்டக்களப்பு மாவட்டத்தில், கல்குடா தொகுதிக்குள் அடங்கிய கிரான் என்ற ஊரைச் சேர்ந்தவர்.

1983இல் நாட்டில் இனக் கலவரம் வெடித்த போது விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்ந்தார். அப்போது அவருக்கு வயது 20. புலிகளின் புலனாய்வுப் பிரிவு உட்பட பல பிரிவுகளில் பணியாற்றினார். பிரபாகரனின் மெய்க்காப்பாளராகவும் இருந்தார்.

நாட்டின் இராணுவத்துடன் பல போர் முனைகளிலும் போர் புரிந்து வெற்றி பெற்றார். இதனால் பிரபாகரனின் அன்பையும், நம்பிக்கையையும் பெற்றார்.

விடுதலைப்புலிகளின் கிழக்குப் பிராந்திய தளபதியாக அவரைப் பிரபாகரன் நியமித்தார்.

### மோதல்

2004ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், கருணாவின் போக்கில் மாறுதல் ஏற்பட்டது. கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள விடுதலைப்புலிகள், தலைமையால் புறக்கணிக்கப்படுவதாகக் குற்றம் சாட்டினார்.

இது பற்றிப் பேச்சு நடத்தலாம் என்றும், தன்னைச் சந்திக்கும்படி பிரபாகரன் அழைத்தார். ஆனால், பிரபாகரனைச் சந்திக்கக் கருணா மறுத்துவிட்டார்.

பிரபாகரனுடன் சமரசம் செய்து கொள்ள வேண்டுமானால், விடுதலைப்புலிகளின் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மன், நிதித்துறை தலைவர் தமிழேந்தி, பொலிஸ் தலைவர் பி.நடேசன் ஆகியோரை நீக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்தார்.

### பிரபாகரன் நடவடிக்கை

இதைத்தொடர்ந்து, விடுதலைப்புலிகள் இயக்கத்தை விட்டு கருணாவை 06-03-2004 அன்று பிரபாகரன் நீக்கினார்.

இது குறித்து விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவு தலைவர் எஸ். பி. தமிழ்ச்செல்வன், கிளிநொச்சியில் இருந்து அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதில் கூறப்பட்டு இருந்ததாவது,

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து கருணா நீக்கப்பட்டு உள்ளார். இயக்கத்தில் வகித்து வந்த பொறுப்புகளில் இருந்தும் இவர் விடுவிக்கப்பட்டு இருக்கிறார்.

### துரோகம்

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக செயற்படும் சில தீய சக்திகளின் தூண்டுதலின் பேரில் தமிழ் மக்களுக்கும், தமிழ் ஈழ தேசிய தலைமைக்கும் துரோகம் இழைக்கும் வகையில் செயற்பட்ட அவர் இயக்கத்தை விட்டுப் பிரிந்து செல்லவும் தீர்மானித்து இருந்தார்.

கருணாவின் கீழ் செயற்பட்டு வந்த வட்டார தளபதிகள் மற்றும் போராளிகளால் அவரது இந்தத் துரோக செயலை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதனால் அவர்கள் கருணாவின் உத்தரவுக்குக் கீழ்ப்படிய மறுத்தோடு இயக்கத்தின் தலைமையைச் சந்தித்து அங்குள்ள சூழ்நிலைகள் குறித்து எடுத்துக் கூறினார்கள். இதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து கருணா நீக்கப்பட்டு உள்ளார்.

### புதிய தளபதி நியமனம்

எனவே மட்டக்க்ளப்பு-அம்பாறை மாவட்டத்தின் சிறப்புத் தளபதியாக டி.ரமேசும் தளபதியாக ராமும் துணைத் தளபதியாகப் பிரபாவும், அரசியல் பிரிவுத் லைவராகக் கௌசல்யாவும் நியமிக்கப்பட்டனர்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு இருந்தது.

இதற்கிடையே, பிரபாகரன் ஆதரவு புலிகள் சிலர் தன்னைக் கொலை செய்ய வந்ததாகவும், அவர்களைத் தன்னுடைய விசுவாச புலிகள் சுட்டுக் கொன்று விட்டதாகவும் கருணா கூறினார்.

### பொது மன்னிப்பு

பிறகு, தமிழ்ச்செல்வன் ஓர் அறிக்கை விடுத்தார்.

கருணாவுக்கு எங்கள் தேசிய தலைவர் பிரபாகரன் பொது மன்னிப்பு அளித்துள்ளார்.

இதன் மூலம், கருணா இனி தனது சொந்த வாழ்க்கையில் ஈடுபடலாம் என்று அதில் கூறப்பட்டு இருந்தது.



பிரபாகரனுடன் கருணா நட்புடன் இருந்த நேரத்தில் எடுக்கப்பட்ட படம். பாலசிங்கம், அடேல் பாலசிங்கம், தமிழ்ச்செல்வன் உடன் இருக்கிறார்கள்.

(தொடரும்)

# மு.கா.தலைமையை பணயக் கைதியாக வைத்திருக்க இனி அனுமதிக்கமாட்டேன்

## ஹக்கீம் காட்டம்

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமையை பணயக் கைதியாக வைத்துஇனிமேலும் அரசியல் செய்வதற்கு இடமளிக்கப் போவதில்லை என மு.கா. தலைவரும் நகர அபிவிருத்தி மற்றும் நீர்வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மு.காவின் ஒன்றுகூடல் நிகழ்வு காத்தான்குடி அன்வர் வித்தியாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு அவர்மேலும் உரையாற்றுகையில் ,மு.கா. தலைமையை அவமானப்படுத்துவதற்காககடந்தகாலத்தில்அதை அடிப்படையாக வைத்து தங்களுடைய பதவிகளுக்காக பேரம் பேசியவர்கள் இனிமேலும் இந்தக்கட்சியின்தலைமையை பணயக்கைதியாக வைத்து அரசியல் செய்ய முடியாது என்பதை தெளிவாகக் கூறிக்கொள்ளவிரும்புகின்றேன்

.என்ன நாடகமாடினாலும் பிளவுகள் மற்றும் பிரச்சினைகளை ஏற்படுத்த முயற்சித்தாலும் அந்த முயற்சிகளில் யாரையும் கட்சியிலிருந்து வெளியேற்றும் நோக்கமும் கட்சிக்குக் கிடையாது என்றார்.

மு.கா.எடுத்த தீர்மானங்களை கட்சியினுடைய அரசியல் யாப்பின் படி எங்களுடைய பேராளர் மாநாட்டிலேயே மாற்ற முடியும். அதைத் தவிரவும் எந்த மாற்றமும் செய்யப்படமாட்டாது.இந்த விடயத்தில் கட்சித் தலைமை உறுதியாக இருக்கின்றது.

பதவி நோக்கத்தில் யாரும் இந்தக் கட்சியை அடகு வைத்து பிழைப்பதற்கு இனிமேலும் நாம் இடமளியோம் என்றார்.

இந்த நாட்டு அரசியலில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னணியில் சிறுபான்மைச் சமூகங்களின் அரசியல் தலைமைகளில் மூன்று பிரிவினர்



களாக இருக்கின்ற தமிழ் மக்களின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் முஸ்லிம்களின் அரசியல் தலைமைகள் என்ற வகையில் முஸ்லிம் காங்கிரஸாகிய நாங்களும் மலையகத் தலைமைகளும் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்ற காலகட்டத்தில் இருக்கின்றோம்.

அக்கிரமமான ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து இந்த நாட்டை சுபீட்சத்துக்கு கொண்டு வந்தமை மாத்திரமல்ல இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சி முன்னெடுக்கப்படுகின்றது.

இச்சூழ்நிலையில் ஆளுக்கு ஆள்தூக்கிக்கும்நிலைமையை எங்களுக்குள் உருவாக்காமல் பாதுகாப்பதற்காக நல்லெண்ண முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சில நல்லெண்ண நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் நல்ல ஆலோசனைகள் கூறப்பட்டுள்ளன. அவற்றுக்கான அறிவிப்பு அடுத்த வாரம் வரவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (இ

# வெளிநாடுகளுக்கு வேலைக்கு செல்வோர் அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தல்

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு பணிகளுக்காக செல்பவர்கள் வெளிநாடுகளில்உள்ள வேலை வாய்ப்புகள் தொடர்பில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு காரியாலயம் ஊடாக தகவல்களைப் பெற்று செல்வதே சிறந்தது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவிப்பை வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள விடுத்துள்ளார.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அலுவலகம் ஊடாக சரியான தகவல்களை பெற்றுக் கொள்ளாதவர்கள் ,தொழில மோசடி வர்த்தகர்கள் மற்றும் சட்டவிரோத வெளிநாட்டு முகவர்களிடம் சிக்கி கஷ்டப்பட நேரிடும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இந்த வருடத்தின் 6 மாத காலப் பகுதியினுள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தினால் 56 சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இதன் போது பல போலி முகவர்களை கைது செய்துள்ளதாகவும் அமைச்சர் தலதா தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் தொழில பெற்று தருவதாக கூறி செய்யப்படும் மோசடி வர்த்தகத்தினால் பலர் நிர்க்கதிக்குள்ளாகியிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

கல்வி கற்றுக் கொண்டிருந்த

## மாணவன் மர்ம மரணம்

(கொழும்பு)

புளத்சிங்கள பிரதேசத்தில் தனியார் வகுப்பொன்றில் கல்வி கற்று கொண்டிருந்த பாடசாலை மாணவன் ஒருவன் மர்மமாக உயிரிழந்துள்ளான்.

யடகம்பிட்டிய பகுதியை சேர்ந்த 14 வயதுடைய மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் குறித்த மாணவன் தனியார் வகுப்பில் கல்வி கற்றுக் கொணடிருந்த போது உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த மாணவனுக்கு எவ்வித நோயும் இருக்கவில்லை என உறவினர்கள் தெரிவித்தனர்.

மாணவனின் மரணம் தொடர்பிலான பிரேத பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மாணவனின் சடலம் தற்போது நாகொடை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 764

Search for people, places and things Nagendram Home

சுஜிசிவா





அருள் ஜோன்சன்

தமிழ் ஆசிரியர்:-ஏன்டா...
நான் வகுப்புக்குள்
நுழையும் போது
எல்லோரும் சிரிக்கிறீங்க?
மாணவர்கள்:- நீங்க தான சார்
நேற்றுசொன்னீங்க துன்பம்
வரும் வேளையிலே
சிரிங்கன்னு அதான்...

தனு

டேய் மண்டையா இன்னைக்கு
முட்டாள்கள் தினமாமே




என்னமோ நாம மத்த நாள்
எல்லாம் புத்திசாலியா
இருந்த மாதிரி ....

நிஷாந்தன்

காதலி என்பவள் கார் மாதிரி



இருப்பவனுக்கு
செலவு...

இல்லாதவனுக்கு
கனவு....



நிஷாந்தன்



சுதா



பணம் சம்பாதிக்க
ஆயிரம் கஷ்டப்பட்டாலும்
அவமானப்பட்டாலும்,
அதை மனதோடு
வைத்துக் கொண்டு
புன்னகையால் குடும்பத்தை
நடத்தும் ஒவ்வொரு ஆணும்
புனிதமானவனே!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஏமனில் ஐ.எஸ்.தீவிரவாதிகளின் வெறியாட்டத்துக்கு 42 பேர் பலி!

(ஏடன்)

**ஏமன் நாட்டின் முகால்லா நகரில் ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப் படை தாக்குதல்களில் 42 பேர் கொல்லப்பட்டனர்.**



ஏமன் நாட்டின் ஹத்ர மாவ்த் மாகாணத்தில் உள்ள முகால்லா நகரில் அமைந்திருக்கும் இராணுவ முகாமில் நேற்று முன்தினம் மாலை இராணுவ வீரர்கள் நோன்பை ஆரம்பிக்க காத்திருந்தனர். அப்போது, அங்கு வந்த ஒருவன் 'சாப்பிடுவதற்கு ஏதாவது கிடைக்குமா?' என்று கேட்டுள்ளான்.

இராணுவ வீரர்கள் பதில் அளிப்பதற்குள் தனது உடலில் கட்டியிருந்த குண்டுகளை அவன் வெடிக்கச் செய்தான். இதேபோன்று இராணுவ வீரர்களை குறி வைத்து நேற்று முன் தினம் மாலை முகால்லா நகரின் வேறுசில பகுதிகளில் மேலும் நான்கு பேர் தற்கொலைப் படை தாக்குதல்களை நடத்தினர்.

இதில் ஒரு குழந்தை, ஒரு பெண் மற்றும் 40 இராணுவ வீரர்கள் உடல் சிதறி பலியானதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முன்னர், அல்கொய்தா தீவிரவாதிகளின் பிடியில் இருந்த முகால்லா நகரை கடந்த ஏப்ரல் மாதம் அரசுப் படைகள் மீட்டதாக அறிவிக்கப்பட்டது. எனினும், அல்கொய்தா மற்றும் ஐ.எஸ்.தீவிர வாதி களின் சொர்க்கபூமியாக இந்த நகரம் திகழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

சுமார் 2 இலட்சம் மக்கள் வாழும் முகால்லா நகரில் கடந்த மே மாதம் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப் படை தாக்குதலில் 47 பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# 2022ல் விண்வெளியில் சீன ஆய்வு கூடம்; முதல் கட்ட விண்கல சோதனை வெற்றி

விண்வெளியில் சீனா உருவாக்கி வரும் ஆய்வு கூடம் வரும் 2022ஆம் ஆண்டு முதல் செயற்படத் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக விண்வெளி சென்று பூமி திரும்பக்கூடிய விண்கல சோதனையை சீனா வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பிய யூனியன் ஆகியவை இணைந்து விண்வெளியில் சர்வதேச ஆய்வுக் கூடத்தை அமைத்துள்ளன. அந்த ஆய்வுக் கூடத்துக்கு விண்வெளி வீரர்களுடன் அமெரிக்க, ரஷ்ய விண்கலன்கள் சென்று திரும்பி வருகின்றன.

இதேபோல சீன விண்வெளி ஆய்வு நிறுவனம் சார்பில் தியான் கோங் என்ற பெயரில் விண் வெளியில் தனியாக ஆய்வுக் கூடம் அமைக்கப்பட்டு வருகிறது. இதற்கான முதற் கட்ட பணிகள் கடந்த 2011 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்த ஆய்வுக் கூடம் 2022ஆம் ஆண்டு முதல் செயற்படத் தொடங்கும் என்று சீன விண்வெளி ஆய்வு நிறுவனம் அறிவித்துள்ளது.



**அடுத்தகட்ட சோதனை?**

இதற்கு முன்னோட்டமாக விண்வெளிக்கு சென்றுவிட்டு பூமி திரும்பக்கூடிய விண்கல சோதனையை சீனா வெற்றிகரமாக நடத்தியுள்ளது. கடந்த சனிக்கிழமை 'மார்ச் 7' என்ற விண்கலம், வென்சாங் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து விண்ணில் செலுத்தப்பட்டது.

இந்த விண்கலம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வடக்கு சீனாவின் பாடைன் ஜரான் பாலைவனத்தில் பத்திரமாக தரையிறங்கியது. தற்போது வீரர்கள் இல்லாமல் வெறும் விண்கலம் மட்டுமே விண்வெளி சென்று திரும்பியுள்ளது. அடுத்த கட்டமாக வீரர்கள் அனுப்பப்படுவார்கள் என்று மூத்த விஞ்ஞானி பாங் தெரிவித்துள்ளார்.

அதன்படி அடுத்த செப்டெம்பரில் சீன விண்வெளி ஆய்வுக் கூடத்துக்கு தேவையான உபகரணங்களுடன் 2 வீரர்கள் 'மார்ச் 7' ரக விண்கலத்தில் அனுப்பப் படவுள்ளனர்.

**இந்தியாவின் முயற்சி?**

மீண்டும் பயன்படுத்தக் கூடிய வகையில் விண்ணுக்கு சென்று விட்டு திரும்பும் ஆர்.எல்.வி-டிடி என்ற ரொக்கெட்டை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் கடந்த மே மாதம் விண்ணில் செலுத்தியது. அந்த ரொக்கெட் விண்வெளிக்கு சென்றுவிட்டு பத்திரமாக பூமி திரும்பி கடலில் விழுந்தது. தண்ணீரில் மிதக்கும் வகையில் ரொக்கெட் வடிமைக்கப்படாததால் அது உடைந்துவிட்டது.

இந்த ரொக்கெட் முழுமை பெற 15 ஆண்டுகள் ஆகும் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். ஆனால் சீனா இப்போதே விண்வெளிக்கு சென்று விட்டு பூமிக்கு திரும்பும் விண்கலத்தை உருவாக்கி விட்டது. (இ-10)

# டொனால்ட் டிரம்பை கொல்ல முயன்றது ஏன்?

அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடும் குடியரசு கட்சி வேட்பாளரான டொனால்ட் டிரம்பை இளைஞன் ஒருவர் துப்பாக்கியால் சுட்டு கொல்ல முயன்றது ஏன் என்பதற்கான காரணம் தற்போது வெளியாகியுள்ளது.

லாஸ் வீகஸ் நகரில் கடந்த வாரம் நடைபெற்ற டொனால்ட் டிரம்பின் பிரசாரக் கூட்டத்தில் பிரித்தானியா நாட்டை சேர்ந்த மைக்கேல் ஸ்டான்போர்ட் என்ற 20 வயது இளைஞன் பங்கேற்றுள்ளார்.

அப்போது, டொனால்ட் டிரம்ப் உரையாற்றிக் கொண்டு இருந்தபோது அந்த இளைஞன் காவலாளி ஒருவரின் துப்பாக்கியை பறிக்க முயன்றுள்ளார். ஆனால், விரைந்து செயற்பட்ட பொலிஸார் இளைஞனை மடக்கி பிடித்து கைது செய்தனர்.

மேலும் அவரை நவாடா நகரில் உள்ள சிறையில் அடைத்துள்ளனர். இந்நிலையில், இளைஞனின் தந்தை, மகனை பார்ப்பதற்காக பிரித்தானியாவிலிருந்து அமெரிக்கா புறப்பட்டுள்ளார்.

தந்தைக்கு அனுமதி கிடைத்ததும் சிறையில் மகனை சந்தித்துள்ளார். அப்போது, டொனால்ட் டிரம்பை சுட்டு கொலை செய்ய முயன்றது ஏன்? என மகனிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

"டொனால்ட் டிரம்ப் ஜனாதிபதியாக பதவி ஏற்றுக்கொண்டால், உலகமே மாறி விடும். அதேபோல், அமெரிக்காவை காப்பாற்ற யாராவது ஒருவர் முன் வர வேண்டும்" என் அவர் தந்தைக்கு பதிலளித்துள்ளார்.

இந்நிலையில், பிரித்தானியாவில் உள்ள இளைஞனின் தாய் அமெரிக்க பொலிஸாருக்கு கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அதில், எனது மகன் மனநிலை குறைபாடு காரணமாக சிகிச்சை பெற்று வருகின்றார். தயவு செய்து, அவரது சிகிச்சையை தொடர பிரித்தானியாவிற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். (இ-10)

# சுற்றாடல் மாசுபடுவதை தடுக்காவிட்டால் பாரிய உயிரிழப்புகள் ஏற்படும் வாய்ப்பு

## சர்வதேச அமைப்பு எச்சரிக்கை

சுற்றாடல் மாசுபடுவதைத் தடுப்பதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத பட்சத்தில், பாரிய உயிரிழப்புகளை எதிர் நோக்க வேண்டிவரும் என்று சர்வதேச சக்தி முகாமைத்துவ முகவர் அமைப்பு எச்சரித்துள்ளது.

தற்போது வருடாந்தம் சுற்றாடல் மாசு காரணமாக 65 இலட்சம் பேர் மரணிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச அளவில் நான்காவது அதிகபட்ச மரணங்கள், சுற்றாடல் மாசினாலேயே ஏற்படுவதாகவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

உலக அளவில் திராவகம், உலோகங்கள், மாசுபட்ட மண், தூசு துணிக்கைகள் மற்றும் கந்தக ஒக்சைட் போன்றவையே சுற்றாடல் மாசுபடுவதற்கான முக்கிய காரணிகள் என கருதப்படுகிறது.

இந்த நிலை தொடரும் பட்சத்தில்2040ஆம்ஆண்டை எட்டும் போது, சுற்றாடல் மாசினால் ஏற்படும் மரணங்கள் பாரிய அளவில் அதிகரிக்கும் என்று எச்சரிக்கப் பட்டுள்ளது.

குறிப்பாக ஆசிய நாடுகள் இதனால் பாரிய பாதிப்புகளை சந்திக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# ஹெலிகொப்டர் விபத்தில் 17 படைவீரர்கள் மரணம்

## கொலம்பியாவில் சம்பவம்



கொலம்பியாவில் பாதுகாப்புப் படையினரின் ஹெலிகொப்டர் நேற்று முன்தினம் மாலை விபத்துக்குள்ளானதில் 17 பாதுகாப்புப் படை வீரர்கள் பலியாகியுள்ளனர்.

கொலம்பியாவில் சாகோ பகுதியிலிருந்து புறப்பட்டுச் சென்ற எம்.ஐ-17 என்ற பாதுகாப்புப் படைக்கு சொந்தமான அந்த ஹெலிகொப்டர் ஆன்டீயன் வனப்பகுதியில் விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 17 பாதுகாப்பு படை வீரர்கள் பலியானார்கள். சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்புப் படையினர், உயிரிழந்தவர்களின் சடலங்களை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். மோசமான வானிலையே ஹெலிகாப்டர் விபத்துக்குகாரணமாக இருக்கலாம் என்று கொலம்பிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இதனிடையே விபத்து குறித்து விசாரணை நடத்த அந்நாட்டு ஜனாதிபதி சாண் டோஸ் உத்தரவிட்டுள்ளார். கொலம்பியாவில், கடந்த ஓகஸ்ட் மாதம் ஹெலிகொப்டர் ஒன்று விழுந்து விபத்துக்குள்ளானதில், 16 பொலிஸார் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# நல்லாட்சி அரசுக்கு பல பில்லியன் கடன்

## பந்துல குற்றச்சாட்டு

(கொழும்பு)

**இந்த நல்லாட்சி அரசு அதிகமாக பல பில்லியன் டொலர் கடன் வாங்குவதாகவும், இலங்கையின் அனைத்து வங்கிகளிலும் கடன் பெற்றுள்ளதாகவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன குற்றம் சாட்டியுள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மேலும் மத்திய வங்கியினூடாக மற்றைய பல வங்கிகளிடமிருந்து அரசு கடன் பெற்றிருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தற்பொழுது நாட்டில் ஒரு ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும், இதனால் நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் போது 20.4 பில்லியன் மட்டுமே கடன் பெற்றிருந்ததாகவும், ஆனால் இந்த அரசு அதையும் விட அதிகமானதொகையைகடனாக பெற்றுள்ளதாக பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நம்நாடு எதிர்நோக்கியுள்ள பிரச்சினையை மக்களுக்கு எடுத்து சொல்லும் காரணத்தினால், அரசு எங்கள மீது போலியான குற்றச்சாட்டுக்களை சுமத்தி கைது செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சுமத்தினார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், எங்களுடைய ஆட்சியில் ஒருபோதும் சில்லறை வியாபாரிகள் பாதிக்கப்பட்டதில்லை. ஆனால் தற்போது சில்லறை வியாபாரிகள் தமது வியாபாரத்தை மூடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.

மேலும் நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பல பிரச்சினைகளுக்கெல்லாம் நல்லாட்சி என்று கூறும் இந்த அரசாங்கமே காரணம் என இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன குற்றம் சாட்டினார். (இ-10)

# அலசு பொருளாகும் ஆசிரியம்!

## அனைவரும் நிதானம் காப்போம்

அண்மைக் காலமாக ஆசிரியர்கள் தொடர்பான பல செய்திகள் அதிர்ச்சிக்கு உரியனவாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

அறையில் ஆராய்ந்து உண்மையைக் கண்டறிய வேண்டிய பல சம்பவங்கள் - அம்பலத்தில் அரங்கேற்றப்பட்டுக் கொண்டு இருக்கின்றன.

உண்மைகளைக் கண்டறிந்து உரிய நடவடிக்கைகளை எடுக்க நீதி அமைப்புக்கள் உண்டு. அவை உரியபடி பணி யாற்றும். ஆனால் களநிலைமைகளை அறிந்தும் அறியாதது போல- சம்பவங்களை ஊதிப் பெருப்பித்து தலைப்புச் செய்திகளாக்கி சமூகத்தை சாக்கடைக்குள் தள்ளக் கூடிய செயல்களை செய்யக்கூடாது.

யாழ்ப்பாணம், தென்மராட்சிப் பிரதேச பாடசாலைகள் இரண்டில் ஏற்பட்ட பாலியல் சார்பான சம்பவங்கள் - தென்மராட்சிப் பாடசாலை ஒன்றில் நடந்த மாணவன் மீதான தாக்குதல் சம்பவம் என்பன இன்று பிரதான பேசு பொருளாக மாறியிருக்கிறது.

கசிப்பு கடைகளிலும் கள்ளுத் தவறணைகளிலும் சந்தை தெருக்களிலும் தலையும் வாலும் வைத்து சுவையூட்டிக் கதைக்கப்படும் மலிவான சம்பவங்களாக இவை மாற்றப்பட்டுள்ளன. மாணவர் ஆர்ப்பாட்டம், வர்த்தகர் சங்க பேரணி என எல்லோருமே பிரச்சினையைத் தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டு தீர்ப்பெழுத முயல்கிறார்கள்.

கல்வி உலகோடு தொடர்பில்லாத கடைத் தெருக் கூட்டங்கள் பல - குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க முனைந்து - எமது இளசுகளின் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்க முயன்று கொண்டிருக்கிறார்கள்.

திசை. மாறி, சிந்தனையை இழந்து, சீரழித்து கொண்டி ருக்கும் எங்கள் மாணவரை செம்மைப்படுத்தவேண்டிய பெரும் பொறுப்புக்குரிய ஆசிரியர்களை - ஒரு சில சம்பவங்களை வைத்துக் கொண்டு - செல்லாக் காசுகள் ஆக்கி விடும் ஆபத்தைச் செய்து விட்டால் நாளை மாணவரின் எதிர்காலம் என்னாவது என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

சமூகத்தின் கண்களிலே ஒட்டுமொத்த ஆசிரியர் சமூகத்தையும் சந்தேகத்துடன் நோக்கக் கூடிய அவலத்தைச் செய்வதை நாம் நிறுத்திக் கொள்ளவேண்டும். அர்ப்பணிப்பான தம் சேவையால் எம் சமூகத்தை அடையாளப் படுத்திக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான ஆசிரி யர்களை - அற்பதர்களாக கருதி - ஆர்ப்பாட்டங்கள் நடத்தி அசிங்கப்படுத்தும் செயல்களை நம்மவர் நிறுத்திக் கொள்ளவேண்டும்.

கற்பித்தலுக்கு அப்பால் - எம் மாணவர்களை சமூகப் பிறழ்வுகளிலிருந்தும் காப்பாற்றும் ஆபத்தான பணியை எம் ஆசிரியர்கள் முன்னெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அடிதடிகள், கோஷ்டி மோதல்கள், போதைவஸ்து பாவனை, கைபேசி அசிங்கங்கள், காதற்கூத்துக்கள் என எத்தனை கேவலங்களிலிருந்து எம் இளசுகளை ஆசிரியர்கள் காப்பாற்ற வேண்டியிருக்கிறது.

*கண்டிப்பான சேவையை,* ஒழுக்க உறுதியை நிலைநாட்ட முனைந்து அடிவாங்க வேண்டிய நிலை கூட எமது ஆசிரியர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. உயிரைப் பணயம் வைத்து செயற்படவேண்டிய கொடூர பரிதாபக் காலம் ஒன்று எமது ஆசிரியர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

பெற்றோர்களே தமது பிள்ளைகளைக் கட்டுப்படுத்த முடியாத இந்தக் காலத்தில் - சிலுவை சுமந்து எம் மாணவரைக் கரை சேர்க்கும் தியாகிகள் ஆசிரியர்கள்தான் - ஆசிரியர்கள் மட்டும் தான் என்ற உண்மையை இன்றைய நிலையில் நாம் கருத்திற்கொள்ள வேண்டும்.

(காதுகுத்தி கடுக்கண் போட்டு - தாடி வளர்த்து, தம் அடித்து, தண்ணியடித்து வாழ்வதுதான் நாகரிகம் எனக் கருதும்) இன்றைய காலத்தில் நாடு காக்க வேண்டிய சிற்பிகளாக விளங்குபவர்கள் ஆசிரியர்கள், கண்டிப்பான ஆசிரியர்களைக் கவிழ்த்து விடுவது எப்படியெனத் திட்டம் போடும் இந்தக் காலத்தில்-ஆசிரியர்களாகிய நாம் எதிர்கொள்ளும் ஆபத்துக்களையும் கருத்திற்கொள்ளுங்கள்.

நான்கு மாணவர்கள் நினைத்தால்-ஆசிரியர்களையே கவிழ்த்து விடலாம்- பழிவாங்கலாம் என்ற நிலையை மாணவர்கள் எய்த விட்டு விடக்கூடாது.

*பிறர் பிள்ளை தலை தடவ தன் பிள்ளை தானே வளரும்* என்ற தத்துவம் உணர்ந்து பெரும்பாலான ஆசிரியர்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

எமக்கு ஏன் வீண் சோலி என மனம் நொந்து - அவர்கள் கலங்கும் நிலை ஏற்படாமல் காக்க வேண்டியது சமூகப் பொறுப்புள்ள அனைவரதும் அவசிய கடமையாகும்.

நடைபெற்ற சம்பவங்கள் நீதித்துறையின் கைகளில் இருக்கிறது. அவர்கள் நியாயத்தை வெளிக் கொணர்வார்கள், நீதித்துறை அணுகவேண்டிய பிரச்சினைகளை தெருவில் உள்ளவர்கள் கையில் எடுத்துக் கொண்டு- எல்லா ஆசிரியர்களையும் அவமதிக்க முனையும் அநியாயம் நிறுத்தப் படவேண்டும்.

*பிச்சை வேண்டாம் நாயைப் பிடி* என்ற நிலையில் மன உளைச்சலோடு ஆசிரியர்கள் நொந்து கொண்டிருப்பதை நாம் உணர்ந்து கொள்ளமுடிகிறது.

ஊடகங்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும். எதுகை மோனை சேர்த்து-அடுக்கு மொழி எழுதும் அற்புதங்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஊதிப் பெருக்க வைத்து உள்ளதையும் உடைத்து விடக்கூடாது.

தவறுகள் சில நடந்திருக்கலாம்-சந்தர்ப்ப சூழ்நிலைகள், தள நிலைமைகளை ஆராய்ந்து - நீதி வழங்குவோர் - அதைச் செய்வார்கள் - வெளிக் கொணர்வார்கள் ஏனைய அமைப்புக்கள், ஊடகங்கள் தனி நபர்கள் கால அபாயத்தை புரிந்து கொண்டு அடக்கி வாசிப்பது அனைவருக்கும் நல்லது.

**த.நாகேஸ்**
**ஆசிரியர்**

## பெரஹறாவுக்கு அனுப்பப்படாத யானைகளின் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படலாம்

பெரஹறா நிகழ்வுக்கென வளர்க்கப்படும் யானைகளுக்கான அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர்கள், பெரஹறா நிகழ்வுகளுக்கு அந்த யானைகளை வழங்க மறுப்புத் தெரிவித்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வனத்துறை அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பெரஹறாவுக்கு அனுப்பப்படாத யானைகளுக்கான அனுமதிப் பத்திரம் இரத்து செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-10)

## காட்டு யானை தாக்கி ஒருவர் பலி

அம்பாறை, உஹன பிரதேசத்தில் மோட்டார் சைக் கிளில் பயணித்த நபரொருவர் காட்டு யானை தாக்கியதில் உயிரிழந்துள்ளார்.நேற்று முன்தினம் உஹன, கரங்காவ கல்லறை பகுதிக்கு அருகில் வைத்து குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காட்டு யானை தாக்கியதில் பலத்த காயங்களுக்குள்ளாகிய நிலையில் அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதே குறித்த நபர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்த நபர் உஹன, திஸ்ஸபுர பகுதியை சேர்ந்த டபிள்யூ.ஏ.சம்பத் என பொலிஸார் தெரிவித்தனர். (இ-10)

## மாட்டிறைச்சி கைப்பற்றல்; விற்றவர் பொலிஸாரால் கைது

(கரணவாய்)

சுகாதாரச் சீர்கேட்டுடன் விற்பனை செய்யப்பட்ட மாட்டிறைச்சி நெல்லியடிப் பொலிஸாரால் நேற்றைய தினம் கைப்பற்றப்பட்டதுடன் அதனை விற்ற நபரும் கைது செய்யப்பட்டார்.வடமராட்சி திக்கம் மாணாண்டிச் சந்தைப் பகுதியில் உள்ள மாட்டிறைச்சிக் கடையில் இருந்தே மேற்படி இறைச்சி கைப்பற்றப்பட்டது.

மேற்படிச் சந்தையில் சுகாதார சீர்கேட்டுடன் இறைச்சி விற்பனை செய்யப்படுவதாக பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்தே பொலிஸார் அவ்விடத்திற்குச் சென்று இறைச்சியைக் கைப்பற்றியதுடன் அதனை விற்ற நபரையும் கைது செய்தனர். (இ-5-60)

## பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரல்

ஆன்மீகம் மற்றும் மானுட மேம்பாட்டுடன் தொடர்புடைய அறிவை மேம்படுத்தி அவ் அறிவைப் பெற்றவர்களைப் பயன்படுத்தி சமூகத்தில் ஆன் மீகம் மற்றும் மானுட மேம்பாட்டுடன் தொடர்புடைய வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்காக மூன்று நாட் கள் வதிவிடப் பயிற்சி நெறி யொன்று எதுவித கட்டணமு மின்றி, தொண்டைமானாறில் அமைந்துள்ள செல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்தில், சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனத்தின் நெறிப்படுத்த லில் நடத்தப்படவுள்ளது.

இப் பயிற்சிக்கு விண்ணப் பிக்க விரும்புபவர்கள் தபால் மூலம் விண்ணப்பப் படிவத் தைக் கோரி சிவன் மானிட மேம்பாட்டு நிறுவனம், 48 , புனித மரியாள் வீதி, திருகோணமலை எனும் முகவ ரிக்கு கடிதம் அனுப்பப்படல் வேண்டும் என சிவன் மானுட மேம்பாட்டு நிலையம் அறிவித்துள்ளது. (இ

★★★★★★★★★★★

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்கால வேலைவாய்ப்பினை மையமாக கொண்டு முழுநேர மற்றும் பகுதிநேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது.

பின்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு இவற்றுக்கான பதிவுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இக் கற்கை நெறிகளாவன விருந்தோம்பல் கற்கை நெறிகளான சமையலாளர், வெதுப்பாளர், அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குடிபானம் பரிமாறுபவர், காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), இரு சக்கர மற்றும் முச்சக்கர வண்டி திருத்துநர், அலுமினியபொருத்துநர், வீட்டுமின்னிணைப்பாளர், மரவேலை தொழில்நுட்பவியலாளர், பெண்கள், சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், கட்டட நிர்மாண உதவியாளர் ஆகும்.

இக் கற்கை நெறிகளை கற்க விரும்புபவர்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அல்லது வலந்தலைசந்தி காரைநகரில் உள்ள காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 04.07.2016 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ

## ஞானச்சுடர் வெளியீடு

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வெளியீடான ஞானச்சுடர் இதழின் 222 ஆவது மலர் வெளிவந்துள்ளது. (இ-5)


# தமிழ் சினிமா வரலாறு

194

## சிவாஜிகணேசனின் முதல் இரட்டை வேடப்படம் உத்மபுத்திரன்

எனினும், அந்தக் காலகட்டத்தில், தொழில் நுட்பம் வளர்ச்சி அடையவில்லை. இரண்டு சின்னப்பாக்களும் சந்தித்துக்கொள்ளும் கட்டங்கள் குறைவு. பல இடங்களில் ஒரு சின்னப்பாவின் முகமும், இன்னொரு சின்னப்பாவின் முதுகும் தெரியும். அதாவது ஒரு சின்னப்பா ஓரிஜினல், மற்றது டூப்!

நவீன தொழில்நுட்பத்துடன் உத்தம புத்திரனை தயாரித்தால் பெரும் வெற்றி கிடைக்கும் என்று வீனஸ் பிக்சர்ஸ் முடிவு செய்தனர். இரட்டை வேடத்தில் நடிக்க சிவாஜிகணேசன் ஒப்பந்தம்செய்யப்பட்டார். திரைக்கதை-வசனத்தை ஸ்ரீதர் எழுதினார்.



சிவாஜிகணேசன் இரட்டை வேடத்தில் நடிக்கும் உத்தமபுத்திரன் என்ற அரைப்பக்க விளம்பரத்தை பத்திரிகைகளுக்கு வீனஸ் பிக்சர்ஸ் கொடுத்தது.

இந்த விளம்பரம் பிரசுரமான அதே நாளில், எம். ஜி. ஆர்.இரட்டை வேடத்தில் நடிக்கும் உத்தமபுத்திரன் என்ற அரைப்பக்க விளம்பரம் வேறு பக்கத்தில் பிரசுரமாகியது! இந்தப்படத்தை எம். ஜி.ஆர்.பிக்சர்ஸ் தயாரிக்கப்போவதாகவும் அந்த விளம்பரம் கூறியது. அதாவது எம்.ஜி. ஆரின் சொந்தப் படம்!

இதைப் பார்த்த ரசிகர்கள் வியப்பும், திகைப்பும் அடைந்தனர். திரை உலகில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. சிவாஜி-எம்.ஜி.ஆர். இடையே பெரும் மோதல் உருவாகி விட்டது என்று எல்லோரும் நினைத்தனர்.

ஏற்கனவே இரு தரப்பு ரசிகர்களும் மோதிக்கொண்டிருந்த நேரம் அது. எனவே, ரசிகர்களிடையே எந்த நேரத்தில் பெரிய அடிதடி-ரகளை ஏற்படுமோ என்று பலரும் கவலைப்பட்டனர்.

இரண்டு பேர் சந்தித்துக் கொண்டால், இரு உத்தம புத்திரன்களும் தயாரிக்கப் படுமா? அல்லது இருவரில் ஒருவர் வாபஸ் பெற்றுக் கொள்வார்களா? என்று ஒருவரை ஒருவர் கேட்டுக் கொண்டனர்.

### கலைவாணர் சமரசம்

இந்த விவகாரத்தில் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் தலையிட்டார். எம்ஜி. ஆருக்கு போன் செய்து, நீங்கள் ஏற்கனவே நாடோடி மன்னன் படத்தை தயாரித்து வருகிறீர்கள். அதில் இரட்டை வேடத்தில் நடித்துக்கொண்டிருக்கிறீர்கள். சிவாஜி கணேசன் வளர்ந்து கொண்டிருக்கும் பிள்ளை. உத்தமபுத்திரனை சிவாஜிக்கு விட்டுக்கொடுங்கள் என்று கூறினார்.

கலைவாணரிடம் அளவு கடந்த மதிப்பும்,மரியாதையும் உடையவர் எம். ஜி. ஆர். கலைவாணர் வார்த்தைக்கு மறுவார்த்தை சொல்லமாட்டார். எனவே, போட்டியில் இருந்து அவர் விலகிக் கொண்ட தாக, அதிகார பூர்வமாக அறிவித்தார்.

உத்தமபுத்திரனில் சிவாஜியுடன் பத்மினி, தங்கவேலு, எம்.கே. ராதா, கண்ணம்பா, ராகினி ஆகியோர் நடித்தனர். ஜி.ராமநாதன் இசை அமைத்தார்.

படம் 07-02-58இல் வெளிவந்து, வெற்றிகரமாக ஓடி யது. எம்.கே.ராதா நடித்த ஜெமினியின் அபூர்வ சகோதரர்கள் படத்துக்குப் பிறகு சிறந்த இரட்டை வேடப் படத்தை பார்த்த திருப்தி ரசிகர்களுக்கு ஏற்பட்டது.

இரட்டை வேடத்தில் சிவாஜிகணேசன் அருமையாக நடித்ததுடன், யாரடீ நீ மோகினி என்ற பாடலுக்கு, ஹெலனுடன் மேல் நாட்டுப் பாணியில் ஆடி, ரசிகர்களை அசத்தினார்.

உத்தமபுத்திரன் பற்றி சிவாஜிகணேசனிடம் பிறகு கேட்டதற்கு, இரட்டை வேடம் என்பது அந்தக் காலக் கட்டத்தில், மிகவும் கஷ்டமான வேலை. இப்போது போல கம்யூட்டர் டெக்னாலஜி எல்லாம் அப்போது கிடையாது. இருந்தாலும் அதை நன்றாக எடுத்திருந்தார்கள்.

அந்தப் படத்தில் நான் ஆடிய டான்ஸ் அப்படியொன்றும் பெரிய சமாச்சாரம் இல்லை. சிறு பிள்ளையிலேயே நன்றாக ஆடுவேன் என்றார்.

(தொடரும்)

# மகிந்த அணியின் பிரசாரத்துக்கு வாய்த்திருக்கும் சிறந்த துரும்பு

2015 ஆம் ஆண்டு ஜனவரி ஆட்சி மாற்றத்தின் பின்னர் தற்பொழுது எதிரணியில் உள்ளவர்கள் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படுவது, கைது செய்யப்படுவது என்பன அடிக்கடி இடம் பெறும் நிகழ்வுகளாகும். இந்த வரிசையில் அண்மையில் இடம் பெற்ற ஒரு கைது பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும், மகிந்த ஆதரவு அணி பாராளுமன்றஉறுப்பினருமானஉதய கம்மன் பிலவுடையது. 1997 ஆம் ஆண்டு போலியான அட்டோனி ஆவணங்களைப் பயன்படுத்தி அவுஸ்திரே லிய பிரஜை ஒருவருக்கு பங்குகளை விற்பனை செய்தமை தொடர்பில் விசேட பொலிஸ் பிரிவினால் கைது செய்யப்பட்டுகம்மன்பில விளக்க மறியலில்வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலிலும் அதன் பின்னர் இடம் பெற்ற பொதுத் தேர்தலிலும் மகிந்தவின் விசுவாசியாக விருந்த கம்மன்பில, மகிந்த ஆதரவணியினர் உருவாக்கியிருக்கும் ஒன்றிணைந்த எதிரணி எனக் கூறும் குழுவின் முக்கிய உறுப்பினராகவும் செயற்பட்டு வருகின்றார். தினேஷ் குணவர்த்தன,விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார போன்றவர்களைப் போல நல்லாட்சி அரசாங்கத்தை விமர்சிப்பது, இன வாத ரீதியான கருத்துக்களை முன் வைத்து மக்களை உருவேற்றுவது என்பன இவருடைய முழுநேர அரசியல் செயற்பாடுகளாகும்.



நல்லாட்சி அரசாங்கத்தினால் பாராளுமன்ற உறுப்பினர்கள் நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்படுவதாக ஜெனிவாவில் உள்ள பாராளுமன்றங்களுக்கு இடையிலான சங்கத்திற்குச் சென்று முறையிடுவதற்கும் இவர் தலைமை தாங்கிச் செயற்பட்டவர். இவ்வாறான ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பது அரசியல் பழிவாங்கலா இல்லை உண்மையில் குற்றம் செய்தமை தான் காரணமா என்ற வாதப் பிரதி வாதங்களை அண்மைய நாட்களில் ஊடகங்களில் காணக்கிடைக்கிறது.

எதற்கெடுத்தாலும் அரசாங்கத்தைக் குற்றஞ் சொல்வதை வழமையாகக் கொண்ட தினேஷ் குணவர்த்தன, வீரவன்சமற்றும் வாசுதேவ நாணயக்கார போன்றவர்கள் தமது சகாவான கம்மன்பிலவின் கைது அரசியல் பழிவாங்கலே, இதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லையென ஆணித்தரமாக கூறியுள்ளனர். மறுபக்கத்தில் இது திட்டமிட்டோ அல்லது பழிவாங்கும் நோக்கிலோ மேற்கொள்ளப்பட்ட கைது அல்ல. அவர் செய்த பிழைக்காக பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் போதிய சாட்சியங்கள் இருப்பதால் இடம் பெற்ற கைது என அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் கூறுகின்றனர். அவ்வாறாயின்1997 ஆம் ஆண்டு இடம் பெற்ற சம்பவம் ஒன்று தொடர்பில் இதுவரை எடுக்கப் படாத நடவடிக்கைகள் ஏன் 19 வருடங்களின் பின்னர் முன்னெடுக்கப்படுகின்றன என்ற கேள்வியும் இங்கு எழுகிறது. இதுவரை பொலிஸ் விசேட பிரிவுக்குத் தெரிந்திராத விடயம் தற்பொழுது தான் தெரியவந்ததா?

அரசாங்கத்தின் குறைபாடுகளையும் முறைகேடுகளையும் மக்களுக்கு எடுத்துச் சொல்லும் முயற்சிகளை முடக்குவதற்கே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது. இது அரசியல் பழிவாங்கல் தவிர வேறு எதுவும் இல்லை என்பது மகிந்த ஆதரவு அணியினரின் கருத்து. எதையாவது ஒன்றை பிடித்துக் கொண்டு தமது அரசியல் நிலைப்பாட்டை உறுதி செய்வதையே அவர்கள் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலான தமது செயற்பாடாகக் கொண்டிருக்கின்றனர். எந்தவொரு பிழையும் செய்யாத தம்மை அரசாங்கம் வீணாகப் பழிவாங்குகிறது என்ற பிம்பத்தைத் தோற்றுவித்து அதனை மக்கள் மத்தியில்ஒருவிற்பனைப்பொருளாக்கியுள்ளனர். கம்மன்பிலவின் கைதும் அவ்வாறானதொரு ஒன்றாகவே அவர்களால் கையாளப்படுகிறது. மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் அவர்களுக்கு எதிரானவர்கள் பலர் காணாமல் போயிருந்தனர். அவருடைய ஆட்சிக்காலத்தில் இராணுவத் தளபதியாக இருந்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மகிந்தவை எதிர்த்தார் என்ற ஒரே காரணத்துக்காக சிறையில் அடைக்கப்பட்டார். இவ்வாறான கைதுகள் எந்தவித அடிப்படையும் அற்ற நிலையில் இடம்பெற்ற போதும், மகிந்தவின் அரசாங்கத் தில் அங்கம் வகித்த கம்மன்பிலவோ, தினேஷ் குணவர்த்தனவோ, வீரவன்சவோ அல்லது வாசுதேவவோ இதுபற்றி வாய் திறக்கவில்லை.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் இடம்பெறும் கைதுகள் மாத்திரம் அரசியல் பழிவாங்கல் எனக்கூற அவர்கள் விளைவது அவர்களுடைய வங்குரோத்து அரசியல் நிலைமையைபுலப்படுத்துவதாக அமைந்துள்ளது. தமக்கு எதிரான தனிப்பட்ட வழக்குகளை சட்டரீதியாக எதிர்கொள்ள முடியாதவர்கள் சகலவற்றையும் ஒன்றாக முடிச்சுப் போட்டு ஒட்டு மொத்த எதிரணியினரும் பழிவாங்கப்படுகின்றனர் என்ற எண்ணப்பாட்டைத் தோற்றுவிக்க கடுமையாக முயற்சிக்கின்றனர்.

சாரங்கன்

சுதந்திரமான மனிதன் என்றால், தான்சிந்தித்ததை செய்துமுடிக்கும் வலிமையுடையவன் என்று பொருள்.
*~ வால்ட்டேர்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பொருண்மிய உபகுழுவின் தலையாய கடமை இது!

தமிழ் மக்கள் பேரவையின் ஓர் அங்கமாக சமூக, பொருண்மிய வலுவூட்டலுக்கான உபகுழு உருவாக்கப்பட்டுள்ளது.

தேவையின் அடிப்படையில் துறைசார் நிபுணர்களை உள்ளடக்கியதான உபகுழுக்களின் உருவாக்கம் தமிழ் மக்கள் பேரவையின் மக்கள் நலப்பணிக்குபேருதவியாக அமையும் என்பது திண்ணம்.

ஏற்கெனவே அமைக்கப்பட்ட அரசியல் நிபுணர் குழு ஒரு பெரும் சாதனையாக அரசியல் தீர்வுத்திட்ட வரைபு ஒன்றை தயாரித்து வெளியிட்டிருந்தது.

தமிழ் மக்கள் பேரவையால் அரசியல் தீர்வுத்திட்டம் வெளியிடப்பட்டதன் காரணமாக வடக்கு மாகாண சபையும் தீர்வுத்திட்டம் ஒன்றை தயார் செய்யவேண்டியதாயிற்று.

இப்போது தமிழ் மக்கள் பேரவையின் மூன்று உபகுழுக்களின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்று பொறுப்புக்கூறலுக்கான உபகுழு,

இரண்டாவது கலை, கலாசார பேணுகைக்கான உபகுழு, மூன்றாவது சமூக, பொருண்மிய வலுவூட்டலுக்கான உபகுழு.

இந்த மூன்று உப குழுக்களும் செம்மையாக செயற்படும் போது அதன் முடிவு தமிழ் மக்களுக்கு சாதகமான விளைவுகளை தரும் என்பது உறுதி.

அதேநேரம் மூன்று முக்கிய உப குழுக்களில் சமூக, பொருண்மிய வலுவூட்டலுக்கான உபகுழுவின் பணி என்பது மிகவும் முக்கியமானதாகவுள்ளது.

அதாவது தமிழர் தாயகத்தில் இன்றிருக்கக் கூடிய மிகப்பெரிய பிரச்சினை தொழிலின்மை; உற்பத்தியின்மை; அபிவிருத்தியின்மை என்பதாகும்.

எனவே மேற்கூறிய மூன்று விடயங்களுக்கும் தீர்வு காணப்பட வேண்டுமாயின் எங்கள் தாயகத் தின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதென்பது அவசியமாகின்றது.

தமிழர் தாயகத்தில் பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல் என்ற விடயம் முன்வருகின்ற போது, எத்தகைய நிறுவனங்களை உருவாக்க முடியும்? எங்கே உருவாக்க முடியும்? எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்? சந்தைப்படுத்துவதற்கான சாத்தியங்கள் எவ்வாறு உள்ளன? என்ற அடிப்படையில் திட்டம் ஒன்றை தயாரிப்பது அவசியமாகும்.

அதாவது தமிழர் தாயகத்தில் எங்கள் புலம் பெயர் உறவுகள் அல்லது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் இங்கு முதலிடக் கூடிய தொழில்துறைகள் பற்றிய அடையாளப்படுத்தல்கள் அவசியமாகின்றன.

அதேவேளை எத்தகைய தொழில்துறைகளுக்கு இங்கு வாய்ப்பு உள்ளது. எங்கள் இளைஞர் யுவதிகள் எத்தகைய தொழிற் பயிற்சிகளை மேற்கொள்வது வேலைவாய்ப்புக்கான களத்தைத் தரும் என்ற விடயங்களும் உள்ளடக்கப்படுவது தேவையே.

ஆக, ஒட்டுமொத்தத்தில் சமூக, பொருண்மிய வலுவூட்டல் உபகுழுவினால் தயாரிக்கப்படும் முன்மொழிவு என்பது தமிழர் தாயகத்தில் முதலிடக் கூடியவர்களுக்கு உள்நாட்டில் தொழில் துறைகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு, வேலைவாய்ப்பு தேடுபவர்களுக்கு, புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க முற்படுகின்ற இளைஞர்களுக்கு வழிகாட்டுதல் என்பவற்றை உள்ளடக்கிய ஆவணமாக அமைதல் வேண்டும்.

இந்த ஆவணம் என்பது துறைசார் நிபுணர்கள், பல்கலைக்கழக புத்திஜீவிகள், வர்த்தகப் பிரமுகர்கள், தொழில் அதிபர்கள், அனுபவசாலிகள் உள்ளிட்ட பலரின் கருத்துக்கள் ஆலோசனைகள் என்பவற்றை உள்ளடக்கியதாக அமையும் போது அதுவே எங்கள் தாயகத்தின் பொருளாதாரத்தை நிமிர்த்துவதற்குரிய வேதநூலாகும்.

ஆகையால் இது விடயத்தில் சமூக, பொருண்மிய வலுவூட்டல் உபகுழுவின் வகிபங்கும் செயல் ஊக்கமும் இருளை நீக்கி ஒளியை ஏற்றுவதாய் அமையும் என்பது உண்மை.

# எட்கா உடன்படிக்கையை பிரதமர் இரகசியமாக கைச்சாத்திட முடிபு

## ஜீ.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எட்கா உடன்படிக்கையை செயற்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாகவும், இரகசியமாக இதில் கைச்சாத்திடுவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் முன்னாள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும்உரையாற்றுகையில்,

இந்தியாவுடன் திறந்த பொருளாதார கொள்கை என்று கூறிக்கொண்டு நாட்டை பாதாள குழியில் தள்ளுவதற்கு இந்த அரசாங்கம் முடிவெடுத்துள்ளது.

பிரதமரின் தனிப்பட்ட தேவைகளுக்காகவே எட்கா உடன்படிக்கை நடைமுறைபடுத்தப்படுகிறது.

இந்த உடன்படிக்கை கைச்சாத்திட்டால் தொழில் வாய்ப்புக்கள் இல்லாம் போகும்.

நம் நாட்டில் முதலீடு செய்யப்பட்டுள்ள முதலீடுகளும் இல்லாமல் போகும்.

அர்ஜுன் மகேந்திரனின் பதவிக்காலம் நாளையுடன் முடிவடையவுள்ளது. எனினும் அந்த பதவிக்கு யாரை நியமிப்பது என்ற முடிவு இதுவரை எடுக்கவில்லை.

ஆனால் கோப் குழுவின் அறிக்கை வெளிவந்தவுடன் அர்ஜுன் மகேந்திரனை மீண்டும் பதவியில், நீடிக்க சந்தர்ப்பம் இருக்கின்றது.

நாட்டின் இறைவரி சட்டத்தை மாற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. இதனால் போதைப்பொருள் வியாபாரிகளுக்கு அதிக சுதந்திரம் கிடைக்கும் எனவும் பீரிஸ் குற்றஞ்சாட்டினார். (செ-11)

# 1800 அடி ஆழத்தில் ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டம் நேற்றுடன் நிறைவுக்கு வந்தது

குருநாகல், கஹட்டகஹ காரீய சுரங்கத்தில் பணியாற்றும் பணியாளர்கள் பலர் சுரங்கத்தின் ஆயிரத்து 800 அடி ஆழத்தில் ஆரம்பித்த சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்றுக் காலை நிறைவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

நாளாந்த ஆபத்து கொடுபனவாக 40 ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கப் பட்ட 16 ரூபாயே தற்போதும் வழங்கப்பட்டு வருகின்றது.

எனவே இத்தொகையை 400 ரூபாயாக அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே உண்ணாவிரத போராட்டத்தை முன்னெடுத்தனர்.

குறித்த பணியாளர்கள் கடந்த 6 நாட்களாக ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில், இது தொடரபில் உடன் நடவடிக்கை எடுப்பதாக மேல் மாகாண பிரதி தொழிலாளர் ஆணையாளர் மற்றும் குருநாகல் மாவட்ட தொழிலாளர் ஆணையாளரின் கையொப்பத்துடனான ஆவணமொன்று பெற்றுக்கொடுக்கப்பட்டதையடுத்து போராட்டம் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. (இ-10)

# மாணவர்களுக்கான அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 2006 ஆம் ஆண்டிற்குப் பின்னரான 10 ஆண்டு காலப்பகுதியில் கல்லூரியிலிருந்து பல்கலைக் கழகங்களுக்கு தெரிவானோர் மற்றும் தேசிய மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டி சான்றிதழ் பெற்ற மாணவர்கள் ஆகியோரது தகவல்கள் பேணப்பட வேண்டியுள்ளதால் உடனடியாக அலுவலகத்தில் தங்களது பெயர் விபரங்களை 15.07.2016 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (இ)

# விழுமியங்கள் பற்றிய விவாத போட்டிக்கான கருத்துகள்-11 எளிமை-வாழ்வில் எளிமை, எண்ணத்தில் மேன்மை

எளிமை புனிதமானது, அழகானது, இயற்கையானது. விவேகமும், இனிமையும் ஒன்று சேரும் போது அது எளிமை எனப்படுகிறது. மனமும் புத்தியும் சிக்கல்களின்றி தெளிவாகவும் வெளிப்படையாகவும் இருப்பதே எளிமை.

எளிமையோடு வாழ்பவர்கள் தங்களுக்குச் சம்பந்தம் இல்லாத வீணான எண்ணங்களில் இருந்து விலகி நிற்பார்கள். இதுவே புத்திக்கூர்மையையும் விவேகத்தையும் விழிப்புணர்வையும் மேம்படுத்துகின்றது.

சந்திரனுடைய குளிர்மையான கதிரலைகள் மக்களை இயற்கையான குளிர்மையை அனுபவிக்க வைக்கிறது. அதேபோல எளிமையான வாழ்க்கை வாழ்பவர்கள், இலை மறை காய்போன்ற பல விடயங்களை, மிகப்பெரிய உன்னதமான சாதனைப் பொருளாக வெளிப்படுத்துவர்.

எளிமையான இனிய வாழ்வு மேலெழுந்த வாரியாக ஒரு இழிந்த வாழ்வாகக் கருதப்படுவதும் உண்டு. அத்தகைய தப்பபிப்பிராயத்துக்குக் காரணம் ஆழ்ந்த அறிவுப் பற்றாக்குறையே ஆகும். ஆழ்ந்த அறிவு பற்றாக் குறையாக இருந்தால், சூரியனுடைய வெப்ப அலை வீச்சுக் கள் மக்களிடையே அசௌகரியங்களை விளைவிப்பது போல அது உள்ளங்களிலும் அசௌகரிய உணர்வுகளை உருவாக்கும்.

**சுகதாமம் (கலட்டிச் சந்திக்கு அருகே பிறவுண வீதியில்) மண்டபத்தின் ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு இடம் பெறும் விழுமியங்கள் பற்றிய விவாதப் போட்டிக்கு மாணவர்கள் தம்மைத் தயார் செய்யும் பொருட்டு இக்கருத்துகள் பிரசுரிக்கப்படுகின்றன. மேலதிக விபரங்களுக்கு 077 261 2088, 077 221 5102 ஆகிய தொலைபேசி இலக்கங்களைத் தொடர்பு கொள்ளவும்.**

# வலம்புரி செய்தியையடுத்து பொதுச்சந்தை துப்பரவு

(கரணவாய்)

வலம்புரி செய்தியையடுத்து வடமராட்சி மந்திகை பொதுச்சந்தையின் மீன் சந்தை துப்பரவு செய்யப்படுவதாக பொதுமக்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

குறித்த மீன்சந்தை நீண்டகாலமாக துப்பரவு செய்யப்படவில்லை எனவும் இதனால் துர்நாற்றம் வீசுவதாகவும் பொதுமக்களால் சுட்டிக் காட்டப்பட்ட செய்தியொன்று அண்மையில் வலம்புரியில் வெளிவந்தது.

இதனையடுத்து பருத்தித்துறை பிரதேச சபையால் சுத்திகரிப்பாளர்கள் அனுப்பப்பட்டு துப்பரவு செய்யப்பட்டுள்ளது. (இ-5-60)

# கணனி வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயக் கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரிவின் அனுசரணையுடன் பாடசாலையை விட்டு வெளியேறியோருக்கான இலவச கணனி வகுப்புக்கள் யா/ ஏழாலை மகாவித்தியாலயத்தில் நடைபெற்று வருகிறது.

ஆர்வமுடையோர் பாடசாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அதிபர் வி. உதயமோகன் அறிவித்துள்ளார். (இ-5)

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். தொடர்ந்து எதிர்வரும 9 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் தேர்த் திருவிழாவும் மறுநாள் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (இ-5)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை யாழ் பிரதேசத்தில் கோண்டா வில் இருபாலை வீதி, கோண்டாவில் பலாலி வீதி, கோண்டாவில் யாழ் வீதி, மயிலங்காடு ஒரு பகுதி, புன்னாலைக்கட்டுவன், புன்னாலைக்கட்டுவன் வடக்கு, குரு ம்பைசிட்டி, வயாவிளான, மஸ்கன் வீதி, விக கிரமரா ட்சி பிறைவேற் லிமிட்டட் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில ஆதிவிநாயகர் கோவில், மாமடுசந்தியிலிருந்து பதவியாவரை, CEC கல்லுடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## முயற்சி செய்யத் தவறாதீர்



✦ செல்வத்தால் யாரும் கர்வம் கொள்வது கூடாது. பணக்காரனுக்கும் பணக்காரன் உலகில் இருக்கவே செய்வான்.

✦ பிறருடைய குறைகளைப் பேசி நேரத்தை வீணாக்க வேண்டாம். பயனுள்ள செயல்களில் மட்டும் ஈடுபடுங்கள்.

✦ கடின முயற்சி கொண்டவனுக்கு எல்லாமே சாத்தியம். முயற்சி இல்லாதவனுக்கு எதுவும் கிடைக்காது.

✦ பழங்கள் நிறைந்த மரம் கனத்தினால் தாழ்ந்து வளையும். அது போல நல்லவர்கள் அடக்கம் காரணமாக பணிவுடன் இருப்பார்கள்.

வல்லவன் உதைபந்தாட்டம்

# யூட், நிதர்சன், மது சிறப்பாட்டம் சென்.மேரிஸ் வி.கழகம் வெற்றி





பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் வி.க. நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் நாவாந்துறை சென்.மேரிஸ் வி.க. எதிர்த்து வலப்பாடு ஜெகமீட்பர் வி.க. மோதியது.

ஆட்டத்தின் 28 ஆவது நிமிடத்தில் ஜெகமீட்பர் வி.க. ஜெயபிரகாஸ் முதலாவது கோலினை அடித்து கோல் கணக்கினை ஆரம்பித்தார். தொடர்ந்து 30 ஆவது நிமிடத்தில் சென்.மேரிஸ் ஜெக்சன் கோலினை அடிக்க முதற்பாதி ஆட்டம் 1:1 என சமநிலையானது.

இரண்டாம் பாதி ஆட்டத்தின் 57 ஆவது நிமிடத்தில் சென்.மேரிஸ் நிதர்சன் கோலினை அடிக்க 63 ஆவது நிமிடத்தில் ஜெகமீட்பர் லதுஸ்லாஸ் பதில் கோலினை அடித்து மீண்டும் சமன் செய்தார்.

வெற்றி பெறப்போகும் அணி எது என விறுவிறுப்பாக அமைந்த போட்டியில் 67,82,85 ஆவது நிமிடங்களில் தமது ஆட்ட திறமையினை வெளிப்படுத்திய சென். மேரிஸ் யூட், நிதர்சன், மது ஆகியோர் கோலினை அடிக்க ஆட்ட நேர முடிவில் 5:2 என சென். மேரிஸ் வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக சென்.மேரிஸ் வீரர் நிரோஜன் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான பணப்பரிசு மற்றும் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டது (க)

# நடராசா வைத்திலிங்கம் ஞாபகார்த்த மென்பந்தாட்டம்

## றெயின்போ சம்பியன்



நடராசா வைத்திலிங்கம் ஞாபகார்த்த மென்பந்து சம்பியனாகி அசத்தியது வல்வை றெயின்போ அணி.

அண்மையில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் றெயின்போ நட்சத்திரங்களின் அசத்தல் ஆட்டத்தால் இளங்கதிர் விளையாட்டுக்கழகத்தை 28 ஓட்டங்களால் வீழ்த்தி கிண்ணத்தை கைப்பற்றினர்.

சகலதுறைகளிலும் ஜொலித்த ருதேசா ஆட்ட நாயகனாகவும் தொடர் நாயகனாக பிரகலாதனும் அதிகூடிய ஓட்டங்கள் பெற்ற வீரராக பிரகலாதனும் முன்னைய போட்டிகளின் ஆட்டநாயகர்களாக பிரணவன், ருதேசா, கபிலன் ஆகியோரும் தெரிவானார்கள். (க)

# ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்டம்

## காமாட்சி வெற்றி



ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் B பிரிவினருக்கான மின் ஒளியிலான கரப்பந்தாட்ட போட்டியின்கடந்த 24 ஆம்திகதி நடைபெற்றபோட்டியில் காமாட்சி வி.க. (நீர்வேலி) எதிர் சோமாஸ் கந்தன் வி.க. (புத்தூர்) விளையாடி 2:0 என்ற வீதத்தில் காமாட்சி வி.க.(நீர்வேலி) (25:12 25:16) வெற்றியை தனதாக்கியது. (க)



# தெல்லிப்பழை பிரதேச செயலகம் மாவட்ட சம்பியனாக தெரிவு

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலானவிளையாட்டு விழாவில் அனைத்துப்போட்டிகளிலும் அதிக புள்ளிகளைப்பெற்று தெல்லிப்பழை பிரதேச செயலகம் இவ்வருடத்திற்கான மாவட்ட சம்பியனாகியது. யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப்பிரிவினர் நடத்திய விளையாட்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வில் கடந்த செவ்வாய்க்கிழமை நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.


அதில் பிரதேச செயலகங்களுக்கிடையில் இடம்பெற்ற பெரு விளையாட்டுகள் மற்றும் தடகளப்போட்டிகள் ஆகியவற்றில் பங்குபற்றிய தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 105 புள்ளிகளைப் பெற்று இவ்வருட மாவட்டச் சம்பியனுக்கான கிண்ணத்தை தமதாக்கிக்கொண்டது. நல்லூர் பிரதேச செயலகம் 95 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும் பருத்தித்துறை பிரதேச செயலகம் 91புள்ளிகளைப்பெற்று மூன்றாமிடத்தையும் யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் 89.5 புள்ளிகளைப் பெற்று நான்காமிடத்தையும் உடுவில் பிரதேச செயலக அணி 68.5 புள்ளிகளைப் பெற்று ஐந்தாமிடத்தையும் கோப்பாய் பிரதேச செயலக அணி 57 புள்ளிகளைப் பெற்று ஆறாமிடத்தையும் சங்கானை பிரதேச செயலக அணி 34 புள்ளிகளைப் பெற்று ஏழாமிடத்தையும் கரவெட்டி பிரதேச செயலக அணி 24 புள்ளிகளைப் பெற்று எட்டாமிடத்தையும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி 17 புள்ளிகளைப் பெற்று ஒன்பதாவது இடத்தையும் சாவகச்சேரி பிரதேச செயலக அணி 7 புள்ளிகளைப் பெற்று பத்தாமிடத்தையும் பெற்றுக்கொண்டன. (க)



## இன்றைய போட்டி

அமரர்களான கந்தசாமி, குகதாஸ், ஜெயலட்சுமி, பார்த்தீபன் ஞாபகார்த்தமாக சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் இருபது -20 கிரிக்கெட் போட்டியில் இன்று புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் போட்டியில் நேதாஜி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ரேவடி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (க)

# பிறேம்குமார் ஹெற்றிக்கோல் விண்மீனை வென்றது வதிரி டயமன்ஸ்





ஹென்றீசியன் சவால் கிண்ண உதைபந்தாட்ட காலிறுதியாட்டத்தில் வீமாவின் அதிரடியுடன் பலாலி விண்மீன் அணியைப் பந்தாடியது வதிரி டயமன்ஸ் அணி.

பலாலி விண்மீன் அணி அண்மையில் நடைபெற்ற போட்டியில் எதிர்பார்க்கப்பட்ட போதும் வதிரி டயமன்ஸ் அணியை வெற்றி கொள்ள முடியவில்லை.

போட்டியின் ஆரம்பத்தில் டயமன்ஸ் வீரர் லக்கீசனின் சிறப்பான இரு மூலை உதைகளை பயன்படுத்தி வீமா, மதுசூதன் ஆகியோர் ஹெடர் மூலம் கோலடிக்க முன்னிலை பெற்ற டயமன்ஸ் பின்னர் இரண்டாவது பாதியில் வீமா அடித்த கோல்களினாலும் இளம்வீரர் அருண்ராஜ் அடித்த சுப்பர் கோல் மூலமும் போட்டியை 5:0 என்ற கோலடிப்படையில் இலகுவாக வெற்றிகொண்டது.

விண்மீன் அணி அதிக தடவைகள் பந்தை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்த போதும் கோல் வாய்ப்புக்களை டயமன்ஸ் அணி அனுமதிக்கவில்லை. இருந்தும் 2:0 அடிப்படையில் போட்டி காணப்பட்ட போது கிடைத்த ஓர் இலகுவான வாய்ப்பையும் நிசாந்தன் பயன்படுத்த தவறினார். இறுதிப்பகுதியில் அடித்த அசத்தல் கோல்களுடன் டயமன்ஸ் வீரர் வீமா இச்சுற்றுப்போட்டியின் நான்காவது ஹெற்றிக் கோலினைப் பதிவு செய்தார். இதற்கு முதல் பொம்மர்ஸ் அணி வீரர் சாரங்கன், ஹென்றீஸ் கல்லூரி வீரர்களான தனேஸ், அன்ரனிராஜ் ஆகியோரும் ஹெற்றிக் கோல் அடித்து அசத்தியுள்ளனர். இப்போட்டியின் ஆட்ட நாயகனாக ஹெற்றிக் (Hattrick) கோல் அடித்த டயமன்ஸ் வீரர் பிறேம்குமார் (வீமா) தெரிவு செய்யப்பட்டதுடன் இவருக்கான கேடயத்தினை வடமராட்சி உதைபந்தாட்ட லீக் தலைவர் வேதாபரணம் வழங்கி வைத்தார். (க)

# போர்க்குற்ற விசாரணை...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 32-வது அமர்வு தற்போது ஜெனிவாவில் இடம்பெற்று வருகிறது.

இதில் இன்று 29ஆம் திகதி ஆணையாளர் இலங்கையின் மனித உரிமைகள் மீறல் தொடர்பில் மேற்கொள்ளப்படும் முன்னேற்ற நடவடிக்கை குறித்து வாய்மூல அறிக்கை ஒன்றை முன்வைக்க உள்ளார்.

இந்த நிலையில் அவரது அறிக்கையின் பிரதி நேற்று வெளியாகியுள்ளது.

ஐ.நா மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல்ஹுசேன், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 32 ஆவது கூட்டத் தொடரில் இன்று இலங்கை தொடர்பாக சமர்ப்பிக்கவுள்ள வாய்மூல அறிக்கையின முன்கூட்டிய பிரதியின் முழுமையான விபரங்கள் வருமாறு,

1. கடந்த வருடம் இலங்கை தொடர்பில் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அமைவாக இலங்கையின் நல்லிணக்கமும் பொறுப்புக்கூறலும் என்ற அடிப்படையில் இந்த வாய்மூல அறிக்கை வெளியிடப்படுகிறது.

மனித உரிமைப் பேரவையானது இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமை தொடர்பான தற்போதைய நிலை குறித்து மனித உரிமை அலுவலகம் வாய்மூல அறிக்கை வெளியிட வேண்டுமென கோரியது.

2. இலங்கை தொடர்பில் ஐ.நா. அலுவலகம் நடத்திய விசாரணைக்கு அமைவாக வெளியிடப்பட்ட அறிக்கையை முன்னிறுத்தி மனித உரிமை பேரவையில் கடந்த வருடம் பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டது. அந்த பிரேரணைககு இலங்கை அரசாங்கம் வரலாற்று ரதியான அனுசரணையை வழங்கியது. சர்வதேச சமூகத்துக்காக மட்டுமன்றி இலங்கையின் மக்களுக்காக இவ்வாறு இணை அனுசரணை வழங்கப்பட்டது. அந்தவகையில் ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கத்துக்காக பாடுபடுவதாக அறிவித்திருக்கிறார்.

3. பிரேரணை நிறைவேற்றப்பட்டு ஒன்பது மாதங்கள் கடந்துவிட்டன. புதிய அரசாங்கம் பதவிககு வந்து 18 மாதங்கள் கடந்துவிட்டன. எனவே எஞ்சியிருக்கின்ற இலங்கையின் பிரச்சினைகளை தீர்த்து சவால்களை கண்டறிந்து செயற்பாடுகளை மேற்கொள்ள சரியான நேரம் வந்துள்ளது. இதற்கு மனித உரிமை பேரவை எவ்வாறு உதவலாம் என்பது குறித்தும் ஆராயலாம்.

4. ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் இலங்கைக்கு பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை பயணம் மேற்கொண்டார். அந்த விடயங்களும் இந்த வாய்மூல அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவருடைய பயணத்திற்கு முழுமையாக ஆதரவளித்த இலங்கை அரசாங்கத்திற்கும் நன்றி தெரிவிக்கின்றோம். அவர் தனது பயணத்தின்போது ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், வெளிவிவகார அமைச்சர் பாதுகாப்பு தளபதிகள் ஆகியோரை சந்தித்துள்ளார். அத்துடன் கண்டிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் பயணம் மேற்கொண்ட ஐ.நா. மனித உரிமை ஆணையாளர், வடமாகாண முதலமைச்சரையும் பாதிக்கப்பட்டோரையும் மதத்தலைவர்களையும் சந்தித்திருந்தார். அந்த விடயங்களையும் இந்த வாய்மூல அறிக்கை உள்ளடக்குகின்றது.

5. இந்த வாய்மூல அறிக்கையானது இலங்கைக்கு பயணம் மேற்கொண்ட விசேட ஆணையாளர்கள் மற்றும் அறிக்கையாளர்களின் பரிந்துரைகளையும் உள்ளடக்கியுள்ளது. ஐ.நாவுடன் புரிந்துணர்வுடன் செயற்படும் இலங்கை அரசாங்கத்தின் முடிவை மனித உரிமை ஆணையாளர் வரவேற்கின்றார். இலங்கைக்கு பலவந்தமாக காணாமல்போனோர் குறித்த குழு வருகை தந்திருந்தது. அதுமட்டுமன்றி சித்திரவதை உள்ளிட்ட விடயங்களை கையாளும் விசேட அறிக்கையாளரும் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். சுயாதீன நீதித்துறை தொடர்பான அறிக்கையாளர், சிறுபான்மை விவகாரம் தொடர்பான அறிக்கையாளர் ஆகியோரும் இலங்கை வந்திருந்தனர். இலங்கையானது 2017 ஆம் ஆண்டு பூகோள மீளாய்வு, கலந்தாராய்விலும் உட்படுத்தப்படும்.

6. மனித உரிமை அலுவலகம் தொடர்ந்தும் இலங்கைக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்கிவருகிறது. இதற்காக மனித உரிமை அலுவலகத்தின் அதிகாரிகளையும் வழங்குகிறது. இலங்கையிலுள்ள ஐ.நா. அலுவலகம் இதில் அக்கறையுடன் செயற்படுகிறது.

7. 2015ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தேசிய நல்லாட்சி அரசாங்கம மறுசீரமைப்புகளுக்கு பொருத்தமான அரசியல் சூழலை உருவாக்கியுள்ளது. எனினும் முழுமையான மறுசீரமைப்புக்கான வாக்குறுதிகள இன்னும் ஆபத்தான கட்டத்திலேயே உள்ளன. இந்த விடயத்தில் ஒரு குழப்பகரமான தன்மை காணப்படுகிறது. பொறுப்புக்கூறலிலும் இது தாக்கத்தை செலுத்தும்.

8. அரசியலமைப்பு மறுசீரமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றம் அடையபெற்றுள்ளது. மார்ச் மாதம் நாடாளுமன்றம் அரசியல் நிர்ணய சபையாக மாற்றப்பட்டுள்ளது, புதிய அரசியலமைப்பை வரைவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும்.

9. மனித உரிமை விவகாரத்தில் அரசியலமைப்பு மறுசீரமைப்பானது சிறந்த சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுக்கிறது. அதாவது இது மீள்நிகழாமையை உறுதிப்படுத்துகிறது. மேலும் பல்வேறு உரிமைக்கான சட்டமூலங்கள், அதிகாரங்களை கட்டுப்படுத்தும் செயற்பாடுகள், சுயாதீன நீதித்துறைக்கான சந்தர்ப்பம், சர்வதேச மனித உரிமை சாசனங்களுடனான ஈடுபாடு என்பவற்றை இந்த விடயம் வழங்குகிறது. புதிய அரசியலமைப்பானது நிலைமாறு நீதி விடயத்திலும் சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுக்கிறது. அரசியலமைப்பு மாற்ற செயற்பாடானது பொறுப்புக்கூறல் மற்றும் நிலைமாறு நீதி மனித உரிமை ஆகியவற்றை வர்த்தக நோக்கத்துக்காக விட்டுக்கொடுத்து விடுமென நாம் எதிர்பார்க்கவில்லை.

10. அரசாங்கம் 2015 ஆம் ஆண்டு 19 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியது. அதனூடாக அரசியலமைப்பு பேரவை உருவாக்கப்பட்டதுடன், சுயாதீன ஆணைக்குழுக்களும் நிறுவப்பட்டன. எவ்வாறு இருப்பினும் இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழுவானது மேலும் பலப்படுத்தப்படவேண்டும்.

11. அரசாங்கம் நல்லிணக்கத்துககாக சில வேலைத்திட்டங்களை மேறகொண்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அரசாங்கம் சில தமிழ புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடையை நீக்கியது. தனிப்பட்ட நபர்கள் மீதான தடைகளும் நீக்கப்பட்டன. தேசிய கீதத்தை தமிழ் மொழியில் பாட நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கு அடுத்த நாள் வடக்கு முதலமைச்சர் பௌத்த விகாரைக்கு சென்று மரியாதை செலுத்தியிருந்தார். 2016 மே மாதம் 19 ஆம் திகதி யுத்த வெற்றி விழாவிற்கு பதிலாக நினைவு தினம் கொண்டாடப்பட்டது. ஜனாதிபதியும பிரதமரும் வடக்கில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு சென்று வருகின்றனர். ஜனாதிபதி தன்னை கொல்ல வந்தவருக்கே மன்னிப்பு வழங்கியிருந்தார். இவ்வாறு சில விடயங்களை கூறலாம்.

12. மக்கள் மத்தியில் நம்பிக்கை கட்டியெழுப்பப்படுவதற்கு இலங்கையில் நிறுவன ரீதியான மாற்றம் அவசியமாகும். எவ்வாறெனினும் சிங்கலே போன்ற இனவாத பிரச்சாரங்கள் குறித்தும் கவனம் செலுத்துகிறோம்.

13. அரசாங்கம் பாதிக்கப்பட்ட மற்றும் சிறுபான்மை சமூகங்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. 2015 ஆம் ஆண்டில் அரசாங்கம் வடக்கில் ஒருதொகை காணிகளை விடுவித்தது. 2016 ஆம் ஆண்டிலும் ஒரு தொகை காணிகள் விடுவிக்கப்பட்டன. மனித உரிமை ஆணையாளர் இலங்கைக்கு சென்றிருந்தபோது வடக்கின் சில பகுதிகளுக்கு சென்று காணி விடுவிப்பில் காணப்படுகின்ற சிக்கல்களை அறிந்திருந்தார். எவ்வாறெனினும் ஜூன் மாதமாகும் போது அந்த பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்படுமென அவர் எதிர்பார்க்கின்றார்.

14. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்கள் தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் பாரிய குழப்பம் காணப்படுகிறது. 2015 ஆண்டு டிசம்பர் மாதம் அரசாங்கம் 39 பேரை பிணையில் விடுவித்தது. இன்னும் 250 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது. இது பாதிக்கப்பட்ட மக்களின் குடும்பங்களை பாதிப்பதுடன் சந்தேக நபர்களையும் உண்ணாவிரதம் இருக்கும் அளவிற்கு கொண்டு செல்கிறது. தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களை விடுவிப்பதற்கு அரசாங்கம் உடனடியாக ஒரு பொறிமுறையை தயாரிக்க வேண்டும்.

15. அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதாக கூறிவிட்டு அதன் கீழ் தொடர்ந்து கைதுகளை மேற்கொண்டு வருகிறது. 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 40 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சில கைதுகள் பலாத்காரமாக இடம்பெற்றுள்ளன. முறையான செயற்பாடுகளின்றி கைதுகள் இடமபெறுகின்றன. அதாவது வெள்ளை வான் கடத்தல்களை போன்று சில கைது சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இது மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் அரசாங்கம் மீதான நம்பிக்கையை சீர்குலைத்துள்ளது. வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு திரும்பிய புலிகளுடன் தொடர்புள்ளதாக சந்தேகிக்கப்படும் சிலர் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

16. இது அரசாங்கம் சிவில் கட்டுப்பாடு மற்றும் இராணுவ செயற்பாடுகளில் எதிர்கொள்கின்ற சவால்களை எடுத்துக் காட்டுகின்றது. வீதி சோதனை சாவடிகள் நீக்கப்பட்டமை, இராணுவ மயமாக்கலை குறைத்தல் என்பன பாராட்டப்பட்டாலும் வடக்கு, கிழக்கில் இராணுவப் பிரசன்னம் அதிகமாக இருப்பது அச்சுறுத்தலை கொடுத்துள்ளது.

17. அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு பதிலாக புதிய சட்டத்தை கொண்டு வருவதாக கூறியுள்ளது. அது ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் பரிந்துரைக்கு அமைவாக நடைபெறும் என நம்புகின்றோம். இந்த விடயத்தில் மனித உரிமை ஆணைக்குழுவிற்கு அரசாங்கம் அதிகாரங்களை வழங்க வேண்டும். தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் இருக்கும் இடங்களை பார்ப்பதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.

18. அரசாங்கம் பொறுப்புக்கூறல் விடயத்தில் சர்வதேச நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். நீதிமன்றம் முன்னுள்ள வழக்குகளை விரைவாக கையாள வேண்டும். காணாமல் போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட, கொலை செய்யப்பட்ட சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க, கொல்லப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், நடராஜா ரவிராஜ் , றக்பீ வீரர் வசீம் தாஜுதீன் போன்ற வழக்குகளில் முன்னேற்றத்தை காண முடிகின்றது. திருகோணமலை ஐந்து மாணவர் படுகொலை, அரச சார்பற்ற நறுவன ஊழியர் படுகொலை வழக்குகள் தொடர்கின்றன.

19. விஸ்வமடு பகுதியில் ஒரு பெண்ணை வன்புணர்வுக்குட்படுத்திய வழக்கில் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் நான்கு இராணுவ வீரர்கள் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டனர். ஆனால் இது போன்ற தண்டனைகள் குறைவாகவுள்ளன. ஆணையாளர் இலங்கைக்கு சென்றிருந்தபோது 39 பாலியல் வல்லுறவு சம்பவங்கள் தொடர்பில் (இராணுவம் சம்பந்தப்பட்டதாக கூறப்படும்) அறிவிக்கப்பட்டது. துணை ஆயுதக் குழுத் தலைவரான பிள்ளையான் என்பவர், ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கில் விளக்கமறியலில் இருக்கிறார். எனினும் ஏனைய ஆயுதக் குழுத் தலைவர்கள் அதாவது கொலை, கடத்தல் போன்ற வற்றில் சம்பந்தப்பட்டவர்கள் இன்னும் விசாரணையை எதிர்கொள்ளவில்லை. இந்த சம்பவங்கள் மிக விரைவாக விசாரணை நடத்தப்பட்டு நிலைமாறுகால விசாரணை பொறிமுறைக்கு வரவேண்டுமென வலியுறுத்துகிறோம்.

20. சாட்சியாளர்களை பாதுகாக்கும் முறைமை வரவேண்டும். புதிய அரசாங்கம் இது தொடர்பான சட்டமூலத்தை நிறைவேற்றியது. சாட்சியாளர்களை பாதுகாக்கும் அதிகார சபை 2016 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

21. சாட்சியாளர்களை பாதுகாக்கும் சட்டமூலத்தை முழுமையாக மீளாய்வு செய்து ஒருசிறந்த முறைமை கொண்டு வருமாறு அரசாங்கத்தை மனித உரிமை அலுவலகம் வலியுறுத்துகிறது.

22. ஜெனிவா பிரேரணையானது பரநதுபட்ட நீதிப் பொறிமுறைக்கான முறையை மேற்கொள்ளுமாறு கோருகிறது. அதில் உண்மை கண்டறிதல், நட்டஈடு வழங்குதல், நிறுவன ரீதியான மறுசீரமைப்பு என்பன பிரேரிக்கப்பட்டுள்ளன. விசாரணை பொறிமுறையில் அரசாங்கம் என்னதான் நடவடிக்கையை மேற்கொண்டாலும அதில் ஒருவித தயக்கமும் தாமதமும நிலவுகிறது.

23. 2015 ஆம் ஆண்டு பிரதமர் பொறிமுறையில் மாறுபட்ட நிறுவனங்களை இணைக்கும் வகையில் ஒரு செயற்குழுவை நியமித்தார். இதற்கு நல்லிணக்கத்துக்கான செயலகமும் ஒத்துழைப்பு வழங்கியது. இந்த நல்லிணக்க செயலகத்துக்கு செயலாளர் நாயகம் நியமிக்கப்பட்டமை வரவேற்கத்தக்கது.

24. பிரேரணைக்கு அமைவாக பாதிக்கப்பட்டவர்களின் ஆலோசனை பெறப்பட்டு விசாரணை பொறிமுறை தயாரிக்கப்பட வேண்டும். விசேடமாக விசாரணை பொறிமுறையானது பெண்களை அதிகளவில் பங்குபடுத்துவதாக அமைய வேண்டும்.

25. 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அரசாங்கம் 11 பேர் கொண்ட செயலணியை நியமித்தது. பொறிமுறையில் ஆலோசனை நடவடிக்கைகளுக்காக இது நியமிக்கப்பட்டது. பெப்ரவரி மாதம் ஆலோசனை பெறும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. எழுத்துமூலமும் ஆலோசனைகள் பெறப்படுகின்றன. இந்த விடயத்தில் வெளிநாடுகளிலுள்ள பாதிக்கப்பட்டோரும் புலம்பெயர் மக்களும் சம்பந்தப்படுத்தப்பட வேண்டுமென ஆணையாளர் வலியுறுத்துகின்றார்.

26. அரசாங்கம் காணாமல் போனோர் தொடர்பில் முக்கியத்துவம் கொடுத்து செயற்படுகிறது. இந்த விடயத்தில் அரசாங்கம் திறமையாகவும் சமாதானத்துடனும் செயற்படும என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

27. அதேநேரம் அரசாங்கம் நிலைமாறுகால விசாரணை பொறிமுறை தொடர்பில் பல்வேறு வகையிலான ஆலோசனைகளை நடத்தி வருகிறது. இதில் ஒருசில வெளிப்படைத்தன்மை காணப்படுகிறது. ஆனால் இந்த செயற்பாடுகள் முன்கூட்டிய பெறுபேறுகளை பெறுவதாகவும் அர்த்தமற்றதாகவும் அமைந்துவிடக்கூடாது. இதில் பொது மக்கள் பங்கேற்பு செயற்பாடுகள் இடம்பெற வேண்டும்.

28. காணாமல் போனோர்களை பற்றிய அலுவலகத்தை அமைப்பதில் இந்த குறைப்பாட்டை நாம் கண்டோம். காணாமல் போனோர் தொடர்பில் அரசாங்கம் அவசரமாக செயற்பட்டு உண்மையை கண்டறிய வேண்டும். தற்போது பிரேரிக்கப்பட்டுள்ள அலுவலகமானது நிரந்தரமானதாகவும், தீர்வுகளை கொடுக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

29. அரசாங்கம் மேற்கொள்ளும காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்திற்கான வரைவை அரசாங்கத்தின் ஆலோசனைக் குழு நிறுவியுள்ளது. ஆனால் அந்த வரைவு மக்களுக்கு வழங்கப்படவில்லை.

30. காணாமல்போனோர் பற்றிய சர்வதேச சாசனத்தில் அரசாங்கம் கைச்சாத்திட்டுள்ளது. இது பலவந்தமாக காணாமல்போனோர் விடயத்தை குற்றவியல் கோவையின் கீழ் கொண்டுவருவதற்கு உதவும் என ஆணையாளர் நம்புகின்றார். காணாமல் போனோருக்கான சான்றிதழ்களை வழங்குவதற்கு இலங்கை அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதற்கான வரைவு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதுடன் விரைவில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. காணாமல் போனோர் ஆணைக்குழுவின் இரண்டாவது அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

31. காணாமல்போனோர் அலுவலகத்திற்கான வரைவைத் தயாரித்த நிபுணர்கள் நிலைமாறுகால நீதிப்பொறிமுறையின் வடிவத்தை தயாரிப்பதற்கும் பங்களிப்பு செய்கின்றனர். குறிப்பாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, விசேட நீதிமன்றம் ஆகியவற்றில் இவர்கள் செயற்படுகின்றனர். எனினும் இவற்றுக்கான ஆவணங்கள் வெளியிடப்படவில்லை. இந்தவிடயம் அவசியமானதும் வரவேற்கத்தக்கது என்பதை குறிப்பிடுவதுடன் வெளிப்படைத்தன்மையின்மையின் குறைப்பாடு, பொறிமுறை தொடர்பான செயற்பாடுகளை குறைத்து மதிப்பிட செய்கிறது.

32. நீதி விசாரணைப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகள், வழக்கறிஞர்கள், விசாரணையாளர்கள் பங்களிப்பு தொடர்பில் மிக முக்கியமான கேள்வி இன்னும் நிலுவையில் இருக்கிறது. 2016 ஆம் ஆண்டு மே மாதம் பிரதமர் ரணில விக்கிரமசிங்க விசாரணை பொறிமுறையில் சர்வதேச பங்களிப்பு இருக்காது என்று இராணுவ உயர் அதிகாரிகளுக்கு கூறியிருந்தார். பாதிக்கப்பட்ட மக்கள் பார்வையில் பொறுப்புக்கூறல் செயற்பாட்டில் சர்வதேச பங்களிப்பு அவசியமாக உள்ளதாக ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் அல்ஹுசேன் உணர்கறார். காரணம் இலங்கையின் நீதி நிறுவனங்கள் தற்போது நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. ஐ.நா. மனித உரிமை அலுவலகத்தின விசாரணையில் கண்டுபடிக்கப்பட்ட வடயங்களில் யுத்த குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களும்இருக்கலாம்என கருதப்படுகிறது.

33. யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் கொத்

04ஆம் பக்கம் பார்க்க....

# காணி உரிமம்...

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் முன்னெடுப்பின் பேரில், 1983 மே மாதத்தில் இருந்து 2009 மே மாதம் வரை நாட்டில் காணப்பட்ட நிலைமையினால் தமது ஆதனங்களை கைவிட்டுச செல்வதற்கு நிர்பந்திக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காகவும் சட்டரீதியற்ற மற்றும் அத்துமீறி குடியேறியவர்கள் காலவிதிப்பு நடவடிக்கைகள் மூலம் ஆதனத்திற்கான தமது உரித்தினை கோருவதற்கு இயலுமான வகையிலும் நீண்டகாலமாக கிடப்பில் கிடந்த காலவிதிப்பு (விசேடஏற்பாடுகள்) சட்டமூலம் தற்பொழுது அரசாங்கத்தினால் மீண்டும் உயிரூட்டப்பட்டுள்ளது. இந்த சட்டம் 2016 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க காலவிதிப்பு (விசேடஏற்பாடுகள்) சட்டம் என இயற்றப்பட்டுள்ளது.

இந்த காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டமானது பயங்கரவாதக் குழுக்களின் செயற்பாடுகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதுடன் தற்பொழுது காணப்படும் காலவிதிப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றம் ஒன்றில் தமது உரிமைகளை கோருவதற்கான நிலைமையும் காணப்படுகிறது. காலவிதிப்புக் கட்டளைச் சட்டத்திற்கமைவாக பத்து வருடத்திற்கு அதிகமான ஒரு காலப்பகுதியில் அசையா ஆதனம் ஒன்றில் முழுமையான உரித்தினை எவ்வித தடையுமின்றி தொடராக நபரொருவர் வைத்திருப்பாராயின், அத்தகைய நபர் அசையா ஆதனமொன்றின் உரித்தினைப் பெறுவதற்கான உரிமையினைக் கொண்டுள்ளார்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் யுத்தம் நிலவிய சூழ்நிலையில் ஆதனங்களை வெளியார் சட்டரீதியற்ற முறையில் அத்துமீறி தன்னகப்படுத்தியவர்கள் தற்பொழுது அசையா சொத்துக்கள் மற்றும் காணிகளுக்கான உரித்தினை கோருகின்றனர். அத்தகைய காலவிதிப்பு நடவடிக்கையானது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்திலுள்ள மக்களை பாதித்துள்ளதுடன் விசேடமாக தமது ஆதனங்களை கைவிட்டு பலவந்தமாக வெளியேற்றப்பட்டதுடன் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களாகவும் அகதிகளாகவும் வாழ்பவர்களை இது பாதிக்கின்றது.

நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழுகின்ற மக்களும் அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களும் காலவிதிப்பு நடவடிக்கை காணப்படுகின்ற போதிலும் தமது ஆதனங்களுக்கான உரித்தினை கோருவதற்கு இயலுமான வகையில் காலவிதிப்பு (விசேடஏற்பாடுகள்) சட்டத்தினால் நன்மையடையவுள்ளனர்.

சட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த விசேட ஏற்பாடானது இரண்டு வருடம் மாத்திரமே ஏற்புடையதாக இருக்கும். சட்டரீதியற்ற மற்றும் அத்துமீறி தன்னகப்படுத்தலின் பேரில் காலவிதிப்பு நடவடிக்கை காரணமாக பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழுகின்றவர்களும் யுத்தத்தினால் பாரியளவு பாதிக்கப்பட்டவர்களும் யுத்தக் காலப்பகுதியில் இழந்த ஆதனங்கள் மற்றும் காணிகளினது உரித்துக் கோரிக்கையினைப் பெற்றுக்கொள்வதற்கு இப்புதிய சட்டத்தின் ஏற்பாடுகளைப் பயன்படுத்த முடியும்.

இந்த நிவாரணமானது குறுகிய காலப்பகுதியில் மாத்திரம் வழங்கப்படும் என்ற வகையில், இரண்டு வருட காலப்பகுதிக்குள் நீதிமன்றத்தில் வழக்கொன்றினைத் தாக்கல் செய்வதற்கான சந்தர்ப்பமொன்று வழங்கப்படுகின்றது.

இந்த காலவிதிப்பு (விசேடஏற்பாடுகள்) சட்டமானது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திலுள்ள யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உரிய நிவாரணம் வழங்குவதற்கும் காலவிதிப்பு நடவடிக்கைகளின் கீழ் அவர்களது பெறுமதியான அசையா சொத்துக்கள் மற்றும் காணிகளுக்கான உரித்தினைக் கோருவதற்கும் மூன்று தசாப்த யுத்தத்தின் பின்னர் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறுவதற்கும் அவர்களுக்கு உதவியாக இருக்குமென்ற வகையில் இது காலத்தின் தேவைக்கேற்ற ஒரு ஏற்பாடாகவுமுள்ளது என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சு தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது. (செ-11)

நீங்கள் தொழில் தேடுபவரா?
5 நட்சத்திர ஹொட்டேல்களில்
கவர்ச்சிகரமான சம்பளத்துடனான
வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன் கூடிய
O/L உடன்
Business & Hotel Management
UK Certified
CERTIFICATE - DIPLOMA - DEGREE
Up to 30% Discount
With FREE >>> English Course
3 மாத கால தொழில்துறைப் பயிற்சி
(பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)
கற்கைநெறி நிறைவில் வேலைவாய்ப்பு ஏற்பாடு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.
புதிய பிரிவு ஆரம்பம்
Week & Weekend Batch
அனுமதிகளுக்கு: 077 3616 798
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011
077 3616 798
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)

பணிநிலை வேண்டுகை
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலத்திரனியல், தளபாட காட்சி அறைக்கு
1. Electrician
2. Showroom Marketing Sales & Executives. (Girls)
3. Data Entry Operators (MS Office, MS Excel, Quick Book)
4. Designer (Corel Draw, Photoshop)
விரும்பத்தக்கது. ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக்கோவையுடன் அலுவலகத்திற்கு சமுகமளிக்கவும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
KINGS ELECTRONICS (PVT) Ltd
NO 12, POINT PETRO ROAD,
JAFFNA. 021 454 6699
(C-5046)

# ஐ.தே.கவில் இணை...

ச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ள நிகழ்வில் சரத் பொன்சேகாவுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதித்துவத்தை வழங்கவுள்ளார்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் சார்பில் கொழும்பு மாவட்டத்தில் தனித்து போட்டியிட்ட சரத் பொன்சேகா தோல்வி அடைந்திருந்தார். இந்தத் தேர்தலில் ஜனநாயகக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி எவரும் நாடாளுமன்றத்திற்கு தெரிவாகவில்லை.

இந்நிலையில், நல்லாட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக ஜனநாயக கட்சிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது.

இதன்போது முன்னாள் காணி அமைச்சர் எம்.கே.டீ.எஸ்.குணவர்தன மரணம் அடைந்ததையடுத்து வெற்றிடமாக இருந்த ஆசனத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியலின் ஊடாக தெரிவு செய்யப்பட்டு பிராந்திய அபிவிருத்தி அமைச்சராக பொன்சேகா பதவியேற்றிருந்தார்.

இதனிடையில், முன்னாள் படைத்தளபதி சரத் பொன்சேகாவுக்கு பீல்ட் மார்ஷல் பட்டம் வழங்கியமைக்கும், அவரை நாடாளுமன்ற உறுப்பினராக தேசியப் பட்டியல் மூலம் தெரிவு செய்தமைக்கும் சர்வதேச மனித வுரிமை அமைப்புக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# மக்களின் காணி...

ளைவிளான் பகுதியில் 12 ஏக்கரும், காங்கேசன்துறை பகுதியில் 125 ஏக்கர் காணியும் விடுவிக்கப்பட்டது.

விடுவிக்கப்பட்ட பகுதிகளில் காங்கேசன்துறை தெற்கு, காங்கேசன்துறை மேற்கு மற்றும் பளை வீமன்காமம் பகுதிகளில் 62 ஏக்கர் நிலப்பரப்பு பொலிஸார் வசம் இருந்துவந்தது.

கடந்த ஞாயிற்றுகிழமை தொடக்கம் விடுவிககப்பட்ட காணிகளில் பொதுமக்கள் தமது நிலங்களை அடையாளம் காணுவதற்காக செல்ல அனுமதி அளிக்கப்பட்டிருந்த நிலையில் பலருடைய வீடுகளில் பொலிஸார் இன்னமும் நிலைகொண்டுள்ளனர். அத்துடன் காணி விடுவிக்கப்பட்டதற்கான சான்றிதழ்களும் பிரதேச செயலகத்தினூடாக இதுவரை வழங்கப்படவில்லை. இதனால் அப்பகுதிகளுக்கு சென்ற மக்கள் தமது காணிகள் விடுபட்டுள்ளனவா இல்லையா என்ற குழப்ப நிலையில் உள்ளனர்.

அப்பகுதிகளில் உள்ள சிலர் தமது காணிகளை பொலிஸாருடன் உடன்படிக்கை அடிப்படையில் வாடகைக்கு வழங்கியுள்ளனர். வெளிநாடுகளில் உள்ள சிலருடைய இருப்பிடங்கள் ஏற்கெனவே ஒப்பந்தத்திலும் இருந்து வந்துள்ளது. ஆனால் வீடுகள் இன்றி அவல வாழ்க்கை வாழ்ந்து வந்த மக்களுக்கு தமது காணிகள் தான் தஞ்சம் என வந்துள்ளார்கள். அவ்வாறு தம்து இருப்பிடங்களை இனம் காணவந்தவர்கள் பொலிஸார் நிலைகொண்டுள்ள காரணத்தால் மிகவும் மனமுடைந்த நிலையில் உள்ளனர். இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதேவேளை காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபனத்திடம் இருந்து அரசாங்கம் பெற்றுக் கொண்ட 160 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு பகுதி பொலிஸாருக்கென ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

# பாரவூர்தி - சைக்...

புத்தூர் வேம்படி சந்தியில் நேற்று மாலை 4.15 மணியளவில் பாரவூர்தியொன்றுடன் துவிச்சக்கரவண்டி மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் துவிச்சக்கரவண்டியை செலுத்தி வந்த மட்டுவில் வடக்கைச் சேர்ந்த பேரின்பராஜா சிவரஞ்சன் (வயது35) என்பவரே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

சந்தைக்கு பலாப்பழங்களை ஏற்றிக்கொண்டு துவிச்சக்கரவண்டியில் சென்றவர் பாரவூர்தி மோதியதில் உடல் நசியுண்டு சம்பவ இடத்திலேயே பலியானார்.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-85)

# இளைஞன் மீது...

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மதியம் 12 மணியளவில் வீட்டுக்கு முன்னால் நின்ற இளைஞனை மேற்குறித்த போக்குவரத்துப் பொலிஸ் பொறுப்பதிகாரி (SI) தொலைபேசி ஒன்று சம்பந்தமாக விசாரிக்க வேண்டும் எனத் தெரிவித்து அழைத்துச் சென்று மாலை 6 மணிவரையில் பொலிஸ் நிலையத்தில் வைத்து இளைஞனைத் கடுமையாகத் தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

தொலைபேசியில் ஒருவருடன் பேசுவதும் பின்னர் இளைஞனைத் தாக்குவதுமாக அப்பொலிஸார் ஈடுபட்டிருந்ததாக கூறப்படுகிறது. இதனால் இளைஞனின் தலை, கன்னம் ஆகிய பகுதிகளில் காயமேற்பட்டுள்ளது. கைகளைப் பிடித்து முறுக்கியதால் கைசோர்வாக உள்ளதாக தெரியவருகிறது.

மாலை 6 மணிக்கு பின்னர் விடுவிக்கப்பட்ட நிலையில் வீடு வந்து சேர்ந்த இளைஞர்; தலைசுற்று, மயக்கம் வரவே அன்று இரவு 10.30 மணியளவில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அவரை பெற்றோர் அனுமதித்தனர்.

அவருக்கு வாயினால் இரத்தம் வந்ததாக உறவினர்கள் தெரிவித்தனர். இதற்கிடையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு சென்ற வல்வெட்டித்துறை பொலிஸார் அவர்களுடன் சமரசம் செய்ய முற்பட்டதாகவும், அதுமுடியாததால் திரும்பிச் சென்றதாகவும் தெரியவருகிறது.

தலைப்பகுதியில் பலமாக தாக்கப்பட்டதால் மேலதிக பரிசோதனைக்காக அவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நேற்று செவ்வாய்க்கிழமை 11 மணியளவில் மாற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ் இளைஞன் ஏற்கெனவே இப்பொலிஸ் அதிகாரியினால் அச்சுறுத்தப்பட்டதாக உறவினர்கள் கூறுகின்றனர். மேலும் தம்து மகன் தாக்கப்பட்டமை தொடர்பில் பெற்றோரினால் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (செ-60)

# மன்னார் மாதா...

பிரசித்தி பெற்ற திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் பாலாவி தீர்த்தக்கரைக்கு அருகாமையில் வைக்கப்பட்டுள்ள மாதா சொரூபத்தினால் இந்து மற்றும் கிறிஸ்தவ மக்களிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடு தொடர்பில் சுமுக நிலைக்கு கொண்டுவருவதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பேச்சுக்களை ஆரம்பித்துள்ளனர்.

திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் பாலாவி தீர்த்த கரைக்கு அருகாமையில் சிலரால் அவசர அவசரமாக மாதா சொரூபம் அமைக்கப்பட்டுள்ளமையால் அங்குள்ள இந்து-கிறிஸ்தவ மக்களிடையே முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இது தொடர்பில் சுமுகமான தீர்வொன்றினை காண்பதற்கு நேற்றைய தினம் மன்னாருக்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர்,

மாந்தை சந்தியில் வைக்கப்பட்டுள்ள மாதா சொரூபம் மற்றும் திருக்கேதீஸ்வரம் ஆலயம் என்பவற்றை நேரில் சென்று அது தொடர்பில் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் பிரதமகுரு, மன்னார் ஆயர் இல்லத்தை சேர்ந்தவர்களுடன் சந்திப்பினை மேற்கொண்டனர். இதன்போது மக்கள் சந்திப்புக்களையும் நடத்தி அவர்களது கருத்தும் கேட்டறியப்பட்டது.

இதன்பின்னர் மன்னார் ஆயர் மற்றும் கோவில் நிர்வாகத்தை சேர்ந்தவர்களை பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்துவது எனவும். அதன்மூலம் குறித்த பிரச்சினையை சுமுகமாக தீர்ப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டு, அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி செய்யப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறுகையில், தமிழ் மக்கள் பெறுவதற்கு இன்னும் எத்தனையோ இருக்கும் நிலையில்,

நாங்கள் மதங்களுக்காக சண்டை போட்டுக்கொண்டு இருப்பது ஆரோக்கியமானதாக இருக்காது. இந்தநிலை மேலும் தொடர்ந்தால் பேரினவாதிகளுக்கு இது சாதகமாக அமைந்துவிடும். எமக்குள்ளான மோதல்களை பேரினவாத சக்திகளே தூண்டிவிடும் நிலை காணப்படும் இன்றைய காலத்தில் இவ்வாறான மோதல்களை நாமே கையாண்டு தீர்த்து கொள்வது நல்லதாகும்.

தமிழ் மக்களுக்கிடையிலான மத ரீதியான மோதல் தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வை பெறுவதில் மேலும் சிக்கலை தோற்றுவிக்கும். நாம் அனைவரும் இந்து-கிறிஸ்தவர்கள என பாராமல் அனைவரும் தமிழர்கள் என்ற வகையில் விட்டுக்கொடுப்புக்களை செய்தும் புரிந்துணர்வு அடிப்படையிலும்' செயற்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (செ-4)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தரம்-5 மாணவர்களுக்கான

# புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-18


வலம்புரி கல்விப்பிரிவு

பகுதி-I **தமிழ்க் கல்விக் கழகம்** நேரம்:- 45 நிமிடங்கள்

பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள்

- எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்குக.
- ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்ட அறிவுறுத்தல்களை நன்கு விளங்கி அதற்கேற்ப விடையளித்தல் வேண்டும்.
- உமது பெயர் அல்லது சுட்டெண்ணை உரிய இடத்தில் தெளிவாக எழுதுக
- செய்கை வேலைகளுக்காக வேறு ஒரு தாளைப் பயன்படுத்துக.

♦01 ஆம் , 02 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள உருவிற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.




01) 



1.பொழுதுபோக்கு
2.தொடர்பாடல்
3.போக்குவரத்து

02) 



1. மழை
2.வெயில்
3. பாதுகாப்பு

♦03 ஆம், 04 ஆம் வினாக்களில் தம்மிடையே தொடர்பற்ற உருக்கள் இடம்பெறும் அடைப்பைத் தெரிவு செய்க.

03) 1)  2)  3) 

04) 1)  2)  3) 

05) உருவில் தரப்பட்ட பொருட்களுடன் தொடர்புபட்ட செயல்கள் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

1.வெட்டுதல், வரைதல், தீட்டுதல் 2.பூசுதல், வெட்டுதல், எழுதுதல் 3.வெட்டுதல், பூசுதல், எழுதுதல்

♦06 ஆம், 07 ஆம் வினாக்களில் தரப்பட்ட பழமொழிக்குரிய கருத்தைத் தரும் விடையைத் தெரிவு செய்க.

06) இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை

1) வறுமையிற் செம்மை 2) திருப்திப்படாத மனம் 3) காலந்தவறேல்

07) ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது

1) வெறும் புத்தகப் படிப்பு 2) நற்புகழ் மங்குவதில்லை 3) உத்தம நட்பு

08) தரப்பட்ட வாக்கியத்தில் தடித்த எழுத்திலுள்ள சொல்லுக்குப் பதிலாக பிரதியிடக்கூடிய பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

மகளின் பெறுபேற்றைக் கேட்ட தாய் **உச்சி குளிர்ந்தாள்**.

1) பொறாமைப்பட்டாள் 2) மிக மகிழ்ந்தாள் 3) வேதனைப்பட்டாள்

09) பிரபல பாடசாலை ஒன்றின் வலைப்பந்தாட்ட அணி இம்முறை தேசிய ரீதியான போட்டியிலும் வெற்றி பெற்றது. இந்த வெற்றிக்குக் காரணமாக அமைவது.

1.பிரபலமான பாடசாலையாக இருப்பதால்

2.விளையாட்டு அணியின் கடுமையான பயிற்சி

3.விளையாட்டுப் பொறுப்பாசிரியர் மிகவும் திறமைானவர்


10) குமாரிடம் உள்ள புத்தகங்களில் அதிகமானவை கதைப் புத்தகங்களாகும். இதன்படி சரியான கூற்று


1.குமாரிடம் உள்ள சகல புத்தகங்களும் கதைப்புத்தகங்களாகும்

2.அவனிடம் கதைப்புத்தகங்களும் வேறு சில புத்தகங்களும் உண்டு


3.குமாரிடம் கதைப்புத்தகமும் கவிதைப்புத்தகமும் சம அளவில் உள்ளன


11) கீழே தரப்பட்ட உருவைப் பூரணப்படுத்துவதற்கு அருகே தரப்பட்ட பகுதியிலிருந்து பொருத்தமானதைத் தெரிவு செய்க.



1. 

2. 

3. 


12) 


உயிரினம், பாலூட்டி, வெளவால் என்பவற்றுக்கிடையிலான தொடர்பைக் காட்டும் உருவில் வெளவாலைக் குறிக்கும் எழுத்து

1)A

2)B

3)C

13) தமிழ்மொழி பேசுவோர்  ஆங்கிலமொழி பேசுவோர்


உருவில் நிழற்றப்பட்ட பகுதியானது


1) தமிழ்மொழி மட்டும் பேசுவோரைக் குறிக்கும்


2) ஆங்கிலமொழி மட்டும் பேசுவோரைக் குறிக்கும்

3) இருமொழிகளையும் பேசுவோரைக் குறிக்கும்.


♦ தரப்பட்ட எண்கோலத்தை அவதானித்து வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண் பெறுமானத்தைத் தெரிவு செய்க.


14) 






1) 40 2) 15 3)45

15) 






1) 29 2) 34 3)44

16) கரகம், வர்ணம், தங்கம் என்னும் சொற்கள் 5654,8314,2054 ஆகிய இலக்கங்களைப் பயன்படுத்தி எழுதப்பட்டன எனில் தகரம் என்னும் சொல் சரியாக எழுதப்பட்ட விதம்.

1)2563 2)2564 3)2546

17. 

இவ் உருவை பூரணமாக்குவதற்கு இன்னும் தேவையான சிறிய சதுரங்களின் எண்ணிக்கை


1)25 2)20 3)16

18) நீளம் பாய்தல் போட்டியில் பங்குபற்றிய ரவி, சங்கர், சேகர், மூவரும் பாய்ந்த நீளங்களில் ரவி 3.5m நீளமும் சங்கர் 3m நீளமும் சேகர் 350 cm நீளமும் பாய்ந்தனர் எனின் இவர்களில் சமனான நீளத்தினை பாய்ந்தவர்கள்

1.சங்கர், சேகர் 2.ரவி,சேகர் 3.சங்கர், ரவி

19) மாலை 4 மணியளவில் மைதானம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது எனது நிழல் என் முன்னாலேயே சென்று கொண்டிருந்தது எனின் நான் சென்ற திசை

1.மேற்கு 2.கிழக்கு 3.வடக்கு

20) 


அருகில் தரப்பட்ட உருவின் சுற்றளவு யாது?

1. 36cm
2. 30cm
3. 28cm

21) 6 ▨ 8 = 30 ◍ 18 எனும் கணிதச் செய்கையில் ▨ ◍ எனும் இடங்களுக்குப் பொருத்தமான கணிதக் குறியீடுகள்

1) +, - 2) ×, ÷ 3) ×, ÷

22) அம்மாவின் வயது 40 வருடங்கள் ஆகும்போது அக்காவின் வயது 15 வருடங்கள் ஆகும். அக்காவின் வயது 27 வருடங்கள் ஆகும் போது அம்மாவின் வயது எத்தனை வருடங்கள்?

1) 58 2) 67 3) 52

23) சோபனாவின் சகோதரி வித்தியா, ராணியின் மகள் மாலதி. மாலதியின் மகள் சோபனா எனின் வித்தியா ராணிக்கு என்ன உறவுமுறை

1. மருமகள் 2. மகள் 3. பேத்தி

24) 30 தொடக்கம் 35 வரையுள்ள எண்களை எழுதும் போது இலக்கம் 3 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை

1) 6 2) 7 3) 8


25) ஒரு மணித்தியாலத்தில் 3 சட்டை தைக்கும் தையற்காரன் 24 சட்டை தைப்பதற்கு எத்தனை மணித்தியாலம் எடுக்கும்?

1) 4 மணித்தியாலம் 2) 6 மணித்தியாலம் 3) 8 மணித்தியாலம்

26) இரண்டு மின் கம்பங்களுக்கு இடையில் 4 அலங்கார மின்குமிழ்கள் வீதம் 15 மின்கம்பங்களுக்கு இடையில் கட்டி அலங்கரிக்க எத்தனை மின்குமிழ்கள் தேவை?

1) 56 2) 48 3) 66

27) ஒரு சதுர வடிவுமான கடதாசித் துண்டை நான்காக மடித்து அதில் சில துளைகள் இடப்பட்ட விதம் கீழே தரப்பட்டுள்ளது. அதை விரிக்கும் போது தோன்றும் தோற்றத்தைத் தெரிவு செய்க.



1) 2) 3)

28) தைமாதத்திலுள்ள முதலாம் நாள் வெள்ளிக்கிழமை எனின் அம்மாதத்தின் இறுதி நாள்

1. சனி 2. திங்கள் 3. ஞாயிறு

29) 

தரப்பட்ட கொள்கலனானது 90$l$ நீரைக் கொள்ளக்கூடியது. தற்போது அதன் கொள்ளளவில் 2/5 பங்கு நீரைக் கொண்டுள்ளது. அதனை நிரப்புவதற்குத் தேவையான நீரின் அளவு

1) 54 $l$ 2) 60 $l$ 3) 58 $l$

30) பூம்பாத்தி ஒன்றில் வரிசையில் 50 பூச்செடிகள் நடப்பட்டுள்ளன. முதலில் செவ்வந்தியும் அடுத்து இரண்டு சூரியகாந்தியும் என்ற ஒழுங்கில் நடப்பட்டது எனின் 43 ஆவது பூச்செடியாக நடப்பட்ட தாவரம்

1. செவ்வந்தி 2. சூரியகாந்தி 3. கூறமுடியாது

31)கிருபா புகைப்படம் ஒன்றைப் பார்த்து இப் படத்தில் இருப்பவரின் தந்தையும் எனது அப்பாவின் தந்தையும் ஒருவர் ஆவார். ஆகையால் கிருபா படத்தில் இருப்பவருக்கு என்ன உறவு முறை

1. பேரன் 2. மருமகன் 3. பெறாமகன்

32) ஒரு நகரத்தின் மையத்தில் இருந்து தபாலகம் 100m வடக்கேயும் பொலிஸ்நிலையம் மையத்தில் இருந்து 175m கிழக்காகவும் பாடசாலை பொலிஸ் நிலையத்தில் இருந்து 100m வடக்கேயும் அமைந்துள்ளது எனின் பாடசாலை தபால் நிலையத்திற்கு எவ்வளவு தூரத்தில் எத் திசையில் அமைந்துள்ளது.


1. 275m கிழக்காக 2. 175m கிழக்காக 3. 200m வடக்காக

33) இவ் எண்கோலத்தில் அடுத்துவரும் எண்

**1234** ⟶ **2345** ⟶ **3456** ⟶ ☐

1) 6789 2) 4567 3) 5678

♦ 34 முதல் 36 வரையான வினாக்களுக்கு கீழ்வரும் உருவை அடிப்படையாகக் கொண்டு விடை தருக.



34) இவ் உருவில் உள்ள சிறிய சதுரமுகிக் குற்றிகளின் எண்ணிக்கை

1) 60 2) 75 3) 100


35) ஒரு சிறிய சதுரமுகிக் குற்றியின் நிறை 50g எனின் இவ் உருவின் மொத்த நிறை யாது?

1) 375g 2) 3750g 3) 3500g

36) இவ்வுருவைச் சுற்றி முழுமையாக வர்ணம் பூசப்படும் போது மூன்று பக்கங்கள் வர்ணம் பூசப்படும் சதுரமுகிக் குற்றிகளின் எண்ணிக்கை?

1) 4 2) 8 3) 12

♦ சதுரமுகிக் குற்றியொன்றின் மூன்று வெவ்வேறு நிலைகள் உருவில் காட்டப்பட்டுள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு 37 முதல்39 வரையான வினாக்களுக்கு விடை தருக.




37) இலக்கம் 6இற்கு எதிர்ப்புறமாக உள்ள இலக்கம் எது?


1) 5 2) 2 3) 3

38) இலக்கம் 5இற்கு எதிர்ப்புறமாக உள்ள இலக்கம் எது?

1) 1 2) 2 3) 3

39) இச் சதுரமுகிக் குற்றியின் நான்காவது நிலையாக அமைவது


1)




2)




3




40)கீழே சம்பவம் ஒன்று நிகழ்ந்த விதம் ஒழுங்கு மாறித் தரப்பட்டுள்ளது. அதனை ஒழுங்குபடுத்தும்போது சரியான ஒழுங்கில் அமையும் விடையைத் தெரிக.

A=எனக்கு 1/4kg கருவாடு தாருங்கள் என்றேன்

B=கடைக்காரரே கருவாடு 1/4 kg என்ன விலை என்று கேட்டேன்

C=கடைக்காரர் கருவாட்டைத் தர காசைக் கொடுத்தேன்

D=1/4kg கருவாடு 120.00 என்றார் கடைக்காரர்

E=கருவாட்டைப் பெற்று வீடு சென்றேன்.

1)BDCEA 2.BDACE 3.BDCAE ♦♦♦

இவ் வினாக்களுக்குரிய விடைகள் நாளை வியாழக்கிழமை (30.06.2016) வலம்புரி பத்திரிகையில் பிரசுரமாகும்.

**தமிழ்க் கல்விக் கழகத்தின் ஆசிரியர் குழாம்**

⋆யோகராசா -துஷ்யந்தன் (இயக்குநர்)

⋆அ.நிமலகாந்தன் (யா/இணுவில் மத்திய கல்லூரி)

⋆றோ.சிவபுத்திரன் (யா/கோப்பாய் மகாவித்தியாலயம்)

⋆G.மோகன்ராஜ் (ISA வலயக்கல்விப் பணிமனை, நுவரெலியா)

⋆K.L.M.நபீல் (ஹ/ஸாஹிரா தேசிய பாடசாலை, ஹம்பாந்தோட்டை)

⋆M.S.குகன் (யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம்)